SUPER VISA
விண்ணப்பங்கள் 416 269 5883
மருத்துவக் காப்புறுதி 647 700 4941

குடிவரவுத் துறை சார்ந்த சட்டத்தரணிகள் சேவைக்கு தமிழில்
பொன்னையா பாலசுப்பிரமணியம் 416.335.3233

இருளிலிருந்து ஒளிக்கு...

# பூபாளம்

www.boobalam.com



HomeLife Today Realty Ltd., Brokerage
HOMELIFE HIGHER STANDARDS
வீடு வாங்க விற்க....
Parathan Navaratnam
Bus: 416-298-3200 | Dir: 647-524-7655

Sep 2013 | Monthly

Issue-18

# போர் முடிந்து விட்டாலும் துன்பங்கள் ஓய்ந்து விடவில்லை

## -நவநீதம்பிள்ளை-

தாயகத்திலிருந்து விஜய்

**யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் இடம் பெற்றதாக குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் பொதுமக்கள் இழப்புக்கள் மற்றும் நீதி விசாரணைக்குப் புறம்பான மரணதண்டனைகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு நம்பகத்தன்மை மிக்க உள்நாட்டு நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்படும் வரை சர்வதேச விசாரணைக்கான அழுத்தங்கள் இருந்து கொண்டு தான் இருக்கும் எனவும் தெரிவித்திருக்கிறார்.**

மனித உரிமைகளுக்குப் பொறுப்பான ஐக்கியநாடுகள்சபை மனிதஉரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் நவநீதம்பிள்ளை கொழும்பில் நடைபெற்ற ஊடகவியாலளர்களின் சந்திப்பிலேயே இலங்கையில் போர் முடிந்து விட்டாலும் துன்பங்கள் ஓய்ந்துவிடவில்லை என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டியது முக்கியம். எனத் தெரிவித்திருக்கிறார்.

இலங்கை அராசங்கத்தின் அழைப்பின் பேரில் கடந்த அகஸ்ட் 25 ஆம் திகதி இலங்கை வந்த நவநீதம்பிள்ளை 31 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருந்து, பல விடயங்கள் தொடர்பாக பல தரப்பினரைச் சந்தித்தும் பல இடங்களிற்குச் சென்றும் தகவல்களை சேகரித்த பின்னர், கடந்த

4ம் பக்கம் பார்க்க...





# மனித உரிமைச் செயற்பாட்டாளர் சுனிலா அபேசேகர காலமானார்.

பிரபல மனித உரிமைச் செயற்பாட்டாளரான சுனிலா அபேசேகர கடந்த திங்கட்கிழமை, செப்டம்பர் 9ம் திகதி காலமானார். நீண்ட காலமாய் புற்றுநோயால் பாதிக்கபட்டிருந்த இவர் கொழும்பில் காலமானார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள், பெண்கள் என சமூகத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்காகக் குரல் கொடுத்த இந்தச் செயற்பாட்டாளர், இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் போது, மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட இலங்கை அரசு, புலிகள் ஆகிய இரு தரப்புகளுக்கும் எதிராகக் குரல் எழுப்பியிருந்தார்.

87ல் இவரது உயிருக்கு அரச தரப்பினரால் அச்சுறுத்தல் ஏற்பட்ட போது, நாட்டை விட்டு வெளியேறி ஒல்லாந்தில் வசித்து வந்தார். பின்னர் நாடு திரும்பி மீண்டும் மனித உரிமைச் செயற்பாடுகளில் ஈடுபட்டார்.

நாடக விமர்சகராக ஆரம்பித்த இவர், யுத்தத்தின் பின்னர் மனித உரிமைகள் குறித்து மிகுந்த ஆர்வம் காட்டி செயற்பட்டிருந்தார். இவரது செயற்பாடுகளை அங்கீகரித்த மனித உரிமைகள் கண்காணிப்பகம் இவருக்கு 2007ல் இனித உரிமைகளைப் பாதுகாக்கப் போராடியவர் என்ற விருதை வழங்கியிருந்தது.

## உள்ளே...



சிறப்பு இணைப்பு
வட மாகாண சபைத் தேர்தல்



ஒபாமாவின் செங்கோ(ல்)டு



உதவி (சிறுகதை)
-சாத்திரி-



வானலையில் குத்துவெட்டு



"Make Your Dream Home Come True"
Mississauga Branch
Monte Carlo Corporate Centre
7045 Edwards Boulevard, Suite 201
Mississauga, Ontario L5S 1X2
905-565-9200
Toronto Office
Morneau Sobeco Centre
895 Don Mills Rd., Ste. 202
Toronto, Ontario M3C 1W3
416-391-3232
Param Gnanaswaran
REAL ESTATE BROKER
Direct: 416 - 230 - 1107
RIGHT AT HOME REALTY INC.
REAL ESTATE BROKERAGE

RAJEE BEAUTY SALON
LADIES, GENTS & KIDS HAIR CARE
346 Main St. North, Markham, ON L3P 1Z1
(Markham & 16th Ave., South of 16th)

Real Estate Classes
Starting Every Week
416.321.6969

# "Make Your Dream Home Come True"



**Toronto** **$294,900**
Condo Apt, Bed 1+1, Wash 1, kitchen, Fabulous Downtown Location.



**Brampton** **$305,800**
Att/Row/Twn house, Bed 3+1, Wash 3, Kitchen, Finished Basement.



**Mississauga** **$550,000**
Detached, Bed 3, Wash 4, Kitchen, Finished basement.



**Burlington** **$634,900**
Detached, Bed 4, Wash 3, Kitchen, Closer to All Amenities.

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE



**Brampton, Exclusive.**
Detached, Bed 4, Wash 4, Kitchen, Finished Basement. Please call.



**Mississauga** **$329,900**
Condo Townhouse, Bed 3+1, Wash 3, Kitchen, Suitable for FIRST TIME BUYERS.



**Scarborough** **$399,000**
Detached, Bed 3+1, Wash 4, Kitchen 2, Basement Apartment.



**Mississauga** **$419,000**
Semi-Detached, Bed 3, Wash 3, Kitchen, Finished Basement.

- What is new in Real Estate Market?
- Is this the best time to sell or buy our house?
- What's the current market value of our property?
- How could we sell our properties with Minimum or No real estate charges?



**PARAM GNANASWARAN**
REAL ESTATE BROKER

## Call and get the answers from Param G

## 416-230-1107

**RIGHT AT HOME REALTY INC., BROKERAGE**

**HOME OFFICE:**
401-7045 EDWARDS BLVD.
MISSISSAUGA, ONT.L5S 1X2
PH# 905-565-9200

**MAIN OFFICE:**
202-895 DON MILLS ROAD
TORONTO, ONT.M3C 1W3
PH# 416-391-3232

Creaa Design

இருளிலிருந்து ஒளிக்கு...
# பூபாளம்
www.boobalam.com

புரட்டாதி 2013 | மாத இதழ் இதழ் - 18

# வடமாகாணத்தில் நல்லாட்சியை வேண்டி நிற்போம்

நடைபெற இருக்கும் வட மாகாணசபைத் தேர்தலில் வெற்றி வாய்ப்புக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, மகிந்த தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு என்ற இரு கூட்டமைப்புகளுக்கிடையே ஏற்படுவதற்கான வாய்ப்புக்களே அதிகம் என உணரப்படுகின்றது. தேர்தலின் பின்பு யார் வெற்றி பெற்றாலும் மக்களின் ஆணையை ஏற்று மக்களுக்கான கடமையைச் செய்வதில் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். குறைகளை மட்டும் கூறியவண்ணம் தமது செயற்பாட்டை முடக்கிவைப்பது சரியானது அல்ல. கூடவே மத்திய அரசு ஏற்படப்போகும் புதிய அரசின் செயற்பாட்டை முடக்க முயலுமாயின் இது எதிர் காலத்தில் பாரிய விளைவுகளை எற்படுத்தலாம். இதில் யாரும் தமது பொறுப்புக்களை தட்டிக்கழிக்க முடியாது.

---

*ஐ.நா. சபை அமெரிக்க அரசின் நலன்களின் அடிப்படையில் அல்லாது இலங்கை மக்களின் நலன்களின் அடிப்படையில் இப்பிரச்சனையை ஆய்ந்து, அணுகி நல்ல தீர்வினை ஏற்படுத்த முயல வேண்டும். மாறாக பிராந்திய நலன்களின் அடிப்படையில் செயற்பட முயல்வது சரியான அணுகுமுறையாக இருக்கமாட்டாது*

---

எதிர்கட்சியில் இருப்பவர்கள் நல்லாட்சி நடைபெறுதற்காக தம்மாலான செயற்பாட்டை செய்வதே மக்கள் இவர்களைத் தெரிவு செய்வதன் நோக்கம் ஆகும். தேர்தல் வெற்றியின் பின்பு ஆட்சி அமைப்பவர்கள், எதிர் கட்சி அணியில் இருப்பவர்கள் இதற்கான பொறுப்புகளை உணர்ந்து செயற்படவேண்டும் என்பதே மக்களின் ஆணையாகும். மாறாக நாற்காலிச் சுகங்களை அனுபவிப்பதற்காக அல்ல.

30 வருடத்திற்கு மேற்பட்ட யுத்தத்தினால் ஏற்பட்ட வலிகளை அமையப்போகும் புதிய ஆட்சி நீக்குவதற்கு கடுமையாக உழைக்க வேண்டிவரும். யுத்த காலத்தில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் இலங்கை அரசு தரப்பு. விடுதலை அமைப்புக்கள் என இரு தரப்பினராலும் நிகழ்த்தப்பட்டன என்பதை இலங்கையிற்கு வருகை தந்திருக்கும் நவநீதம்பிள்ளையிடம் பொது மக்களும், பொது நல ஸ்தானங்களும், அரசியல் கட்சிகளும் முன்வைத்திருக்கின்றன.

ஐ.நா. சபை அமெரிக்க அரசின் நலன்களின் அடிப்படையில் அல்லாது இலங்கை மக்களின் நலன்களின் அடிப்படையில் இப்பிரச்சனையை ஆய்ந்து, அணுகி நல்ல தீர்வினை ஏற்படுத்த முயல வேண்டும். மாறாக பிராந்திய நலன்களின் அடிப்படையில் செயற்பட முயல்வது சரியான அணுகுமுறையாக இருக்கமாட்டாது. ஐ. நா சபையின் நியாயமான அணுகுமுறைக்கு தற்போது இலங்கையில் ஆட்சியில் உள்ள மகிந்த அரசு ஒத்துழைப்புக்களை வழங்குவதன் மூலமே இலங்கைத்தீவில் இனங்களுக்கிடையில் அமைதியையும், சமாதானத்தையும் ஏற்படுத்துவதன் மூலம் தான் எதேச்சாதிகார அரசு அல்ல என்பதை நிரூபிக்க முடியும்.

# ஐ.நா.வின் அங்கீகாரமற்ற சிரியா மீதான போரைத் தவிர்ப்போம்.

*தற்போது கனடாவில் ஆட்சியில் இருக்கும் பழமைவாதக் கட்சி தமது வலதுசாரி, பழமைவாத வாக்காளர்களை திருப்திப்படுத்துவதற்காக ஐ.நா வின் அனுமதியின்றி நடைபெறும் போருக்கு ஆதரவளிக்கக் கூடாது என்பதே சாமான்ய கனடியத் மக்களின் எதிர்பார்ப்பாகும்.*

---

சோவியத் யூனியனின் உடைவுக்குப் பின்னரான உலகவலயத்தில் அமெரிக்காவினால் வலிந்து திணிக்கப்படுவதற்கான போர் சூழல் சிரியா மீதான யுத்தம் என்ற வடிவில் மீண்டும் உருவாகியுள்ளது. மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல் என்ற கபடத்தனமான தாக்குதலில் ஆரம்பித்து, ஆகாய மார்க்க உதவி என்று வளர்ந்து ஒரு முழுமையான யுத்தம் என்று பரிணாமம் பெறுவதே அண்மைய அமெரிக்க கூட்டமைப்பின் கயமைத்தனமான போர்ச் செயற்பாடுகள் ஆகும்.

எக்காரணத்தையிட்டும் போர் என்பதை சர்வதேச சமூகம் அங்கீகரிக்கக் கூடாது. குறிப்பாக அமெரிக்க மக்களும், அதன் நேச நாடுகளும் பெரும் அழிவுகளை ஏற்படுத்தும் இவ்வகையான போர்களை தவிர்ப்பதற்குரிய செயற்பாடுகளில் உடனடியாக இறங்கவேண்டும். ஏன் எனில் போர் எற்படும் பட்சத்தில் தற்போதையைவிட அதிகம் பாதிக்கப்படபோவது அப்பாவி பொது மக்களே. இதனை நாம் ஈராக்கிலிருந்து லிபியாவரை கண்டு வந்துள்ளோம். இதனை நாம் இலங்கையிலும் கண்டோம். சமாதான பேச்சுவார்த்தைகள் மூலம் பேசி நல்லாட்சிகளை ஏற்படுத்த முயல்வதே சரியானதாகும். ஈராக்கில் ஆரம்பித்து எகிப்தினுடாக லிபியா என்று பயணித்த அமெரிக்க வலிந்த போர்கள் எதும் அந்நாட்டு மக்களுக்கு இதுவரை நல்லாட்சிகளை ஏற்படுத்தித் தரவில்லை என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

ஐ.நா. வின் அங்கீகாரம் இன்றி நடைபெறும் போர்கள் சட்டவிரோதமானவை என்று ஐ.நா. வின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் தெரிவித்திருக்கின்றார். ஈராக்கில் ஐ.நா. வின் அங்கீகாரமின்றியே அமெரிக்கா ஒரு தலைப்பட்சமாக போரைத் தொடக்கியது. இதற்கு கனடாவின் அன்றைய ஆளும் லிபரல் அரசு ஆதரவு அளிக்கவில்லை, ஒத்துழைக்கவில்லை என்பது இங்கு நினைவு கூரத்தக்கது. தற்போது கனடாவில் ஆட்சியில் இருக்கும் பழமைவாதக் கட்சி தமது வலதுசாரி, பழமைவாத வாக்காளர்களை திருப்திப்படுத்துவதற்காக ஐ.நா வின் அனுமதியின்றி நடைபெறும் போருக்கு ஆதரவளிக்கக் கூடாது என்பதே சாமான்ய கனடியத் மக்களின் எதிர்பார்ப்பாகும். இதனை ஸ்ரீபன் ஹாபர் அரசு நடைமுறைப்படுத்த வேண்டும். அன்றேல் எதிர்வரும் தேர்தல்களில் பெருபான்மை மக்களால் தற்போதைய அரசு நிராகரிக்கப்படலாம். எனவே சிரியா மீதான ஐ. நா. சபையின் தீர்மானங்களுக்கு ஆதரவான கரங்களை மட்டும் கனடியர்களாகிய நாங்கள் துாக்கிப்பிடிப்போம். போர்களைத் தவிர்க்கும் அணுகு முறைகளை நிலைநிறுத்த அனைவரும் குரல்கொடுப்போம்.




Courtesy:Awantha Artigala

பூபாளம் மாத இதழ்
Boobalam Media Group
நிறுவனத்தினரால் ரொறன்ரோ, கனடாவில் வெளியிடப்படுகிறது.

பிரதம ஆசிரியர்
சிவநேசன் திருஞானசம்பந்தர்
ஆசிரியர் குழு
சிவா ஈஸ்வரமூர்த்தி, பரதன் நவரத்தினம்
சபேசன் சின்னத்தம்பி, ஜோர்ஜ் குருஷ்சேவ்
நமுனகுலன் பொன்னம்பலம்

வடிவமைப்பு
நந்தா கந்தசாமி, ஆதவன் செல்வராஜா
சிவராஜா சின்னத்தம்பி, ஜோர்ஜ் குருஷ்சேவ்

Chief Editor
Sivanesan Thirugnanasampanthar

Editorial Board
Siva Easwaramoorthy, Parathan Navaratnam
Sabesan Sinnathamby, George Ckrhushchev
Namunakulan Ponnambalam

Design
Nanda Kandasamy, Aathavan Selvarajah
Sivarajah Sinnathamby, George Ckrhushchev

Boobalam is published by
Boobalam Media Group
1345, Morningside Ave #8,
Scarborough, On, M1B 2T3
Tel: 416 287 6397
e-mail: boobalam@ymail.com
Web:www.boobalam.com

இந்த இதழில் வெளியாகும் ஆக்கங்களில் உள்ள கருத்துக்களுக்கு ஆக்கியோரே பொறுப்பு. அவை பூபாளத்தின் கருத்தைப் பிரதிபலிப்பனவாய் இருக்க வேண்டிய கட்டாயம் இல்லை.

ஆக்கங்களின் கருத்துச் சிதைவுறாமல், மாற்றங்களைச் செய்யும் உரிமை ஆசிரியர் குழுவுக்கு உண்டு.

வெளியாகும் விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களே பொறுப்பு.

பூபாளம் பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.

விளம்பரத் தொடர்பு
ரொறன்ரோ
416 287 6397

மொன்றியல்
போத்தார் - 514 827 8392

## போர் முடிந்தாலும்...

ஆகஸ்ட் 31 ஆம் திகதி கொழும்பு ஐ.நா.அலுவலகத்தில் நடாத்திய ஊடகவியலாளர்களின் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்திருந்தார்.

ஊடகவியாலளர்களின் சந்திப்பில், முப்பதாண்டுகளாகத் தொடர்ந்த போரின் போது கொல்லப்பட்ட இலங்கையர்களுக்கு எனது மரியாதையைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அவர்களின் குடும்பங்களுக்கு எனது மனமார்ந்த வருத்தங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். எனத் தெரிவித்ததுடன் போரில் பாதிக்கப்பட்டவர்களின் நெருக்கீடுகளை அவதானிக்க முடிந்ததாகவும் தெரிவித்திருக்கிறார்.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மற்றும் அபிவிருத்திப் பணிகள் அர்த்தமுள்ளவை, கவரக்கூடியவை என நவநீதம்பிள்ளை குறிப்பிட்ட போதிலும், பௌதீக மறுசீரமைப்பு மட்டும் நல்லிணக்கத்தை, அமைதியைக் கொண்டு வந்து விடாது எனவும் கருத்துத் தெரிவித்திருக்கிறார். உண்மையைச் சொல்வதற்கும், நீதியை நிலை நாட்டுவதற்கும் போரின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கும் நியாயபூர்வமான அணுகுமுறை உருவாக்கப்பட வேண்டும் எனவும் அவர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

மேலும், யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம் பெற்றதாக குற்றஞ்சாட்டப பட்டிருக்கும் பொதுமக்கள் இழப்புக்கள் மற்றும் நீதி விசாரணைக்குப் புறம்பான மரணதண்டனைகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு நம்பகத்தன்மை மிக்க உள்நாட்டு நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்படும் வரை சர்வதேச விசாரணைக்கான அழுத்தங்கள் இருந்து கொண்டு தான் இருக்கும் எனவும் தெரிவித்திருக்கிறார்.

அதேவேளை, இலங்கை விஜயத்தின் போது தாம் சந்தித்துப் பேசிய பொதுமக்களிடம் பின்னர் பாதுகாப்புத் தரப்பினர் விசாரணைகளை மேற்கொண்டிருந்தது தொடர்பில் தனது கவலையை வெளியிட்ட நவநீதம்பிள்ளை, இதற்கு முன்னதான எந்தவொரு நடவடிக்கையின் போதும் இம்மாதிரியான சம்பவங்கள் இடம் பெற்றதில்லை எனத் தெரிவித்ததுடன், ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக்கு சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையில் இந்த விடயங்கள் உள்ளடக்கப்படும் எனவும் தெரிவித்திருக்கிறார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் இலங்கை நிலவரம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த நவநீதம்பிள்ளை, இலங்கை அரசாங்கம் சர்வாதிகாரப் போக்கை நோக்கிய திசையில் நாட்டை இட்டுச் செல்வது ஆழ்ந்த கவலையை அளிக்கிறது எனவும் தெரிவித்திருந்தார்.

புலிகள் தொடர்பிலும் குறிப்பாக புலி ஆதரவு புலம் பெயர் சக்திகள் குறித்தும் கடும் தொனியிலான கருத்தக்களையே வெளியிட்டிருந்தார். புலிகளை ஒரு கொலைகார அமைப்பு எனக்குறிப்பிட்டதுடன், விடுதலைப் புலிகளின் நினைவுகளை புலம் பெயர் நாடுகளில் தொடர்ந்தும் பூஜித்து வருபவர்கள் ஒன்றை ஏற்றுக் கொள்ள வேண்டும். புலிகள் போன்ற இரக்கமற்ற அமைப்பைக் கொண்டாடுவதற்கு இடமேயில்லை என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்ததமை கவனத்திற் கொள்ளத்தக்கது.

யாழினி வசந்தன் என்பவருடைய OHIP Card கண்டெடுக்கப்பட்டு பூபாளம் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம். தொடர்புகளுக்கு 416 284 4004


குளிரும் பனியும் வந்தாலும், வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கை முடிவுக்கு வரத் தேவையில்லை. வீட்டுக்குள்ளேயே தொடர்ந்தும் மரக்கறிக் கன்றுகளை நீங்கள் வளர்க்க முடியும். எங்களிடம் வல்லாரை, கறிவேப்பிலை, பசளி, தூதுவளை, முடக்கொத்தான் போன்ற மரக்கறி வகைகளும், அறுகம்புல் போன்றவனவும் கிடைக்கும். இவற்றை நீங்கள் குளிர்காலத்தில் வீட்டுக்குள்ளேயே நீங்கள் செழிப்பாக வளர்க்க முடியும். 1345 மோர்ணிங்சைட் அவனியூ, யூனிட் 8 இல் நீங்கள் இந்தக் கன்றுகளைப் பெறலாம்.

416.284.4004



PRIVATE TUITION CLASSES

Math
Science
Physics
Chemistry

Grade 9 இல் இருந்து ஆரம்பமாகிறது உங்கள் உயர் கல்விக்கான தயாரிப்புக்கள்

மாணவர்களின் உயர்கல்விக்கான தயார்ப்படுத்தலை திறம்படச் செய்கின்றோம்!
நாம் அவர்களின் வெற்றியை உறுதிசெய்கின்றோம்!!!

Please contact: Siva. M. Easwaramoorthy BSc (Srilanka) & Computer Programmer (Canada)

416 271 8467 or 416 265 9138




# சிரிய யுத்தம் அந்த நாட்டு மக்களை காப்பாற்றுமா?

ஈஸ்வர்



மீண்டும், மீண்டும் போர் மேகங்கள். அமெரிக்காவின் வலிந்த யுத்தம் ஒன்றிற்கான அறைகூவல். வழமை போல இரசாயன ஆயுதங்களை உபயோகித்தார்கள் என்ற பிரச்சாரத்தை தனது ஊதுகுழல்களாலான சி.என்.என் பி.பி.சி. ஊடாக ஆரம்பித்து தனது நாட்டு மக்களை மூளைச் சலவை செய்யும் செயற்பாடுகள். நலிந்து வரும் பொருளாதாரத்தின் தாக்கத்தினால் அமெரிக்க, மேற்குலக மக்களால் அந்நாட்டு மக்களிடம் அரசுக்கு எதிராக ஏற்பட்டு வரும் எதிர்பலைகள், போராட்டங்களை திசை திருப்ப இன்னொரு முயற்சி. நிருபிக்கப்படாத ஆதாரங்களை வைத்துக்கொண்டு தன்னிடம் ஆதாரங்கள் இருக்கின்றன என்ற கோஷங்களுடன் புறப்பாடு. இவ்வாறு தொடரும் செயற்பாடுகளுக்கு முற்றுப் புள்ளி வைத்தாக வேண்டும்.

இதில் இரண்டு வாதங்கள் தான் உண்டு. ஒன்று தற்போது ஆட்சியியில் இருக்கும் அரசு மக்கள் விரோத அரசு எனவே இது ஆட்சியில் இருந்து அகற்றப்படவேண்டும், எனவே யுத்தம் ஒன்றே வழி .மற்றையது இருக்கும் இந்த ஆட்சியை தொடர விடுவது. சிரிய அரசுடன் தொடர்ந்து பேசி உள்நாட்டில் ஒரு சுமூக நிலையை ஏற்படுத்துதல். அண்மை வருடங்களில் அமெரிக்க அனுசரணையுடன் ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்ட நாடுகளில் எல்லாம் மக்கள் முன்பை விட மோசமான வாழ்நிலையை கொண்டிருக்கின்றனர் என்பது கண்கூடு. அதுவும் பல இலட்சம் மக்களின் மரணம், இடப்பெயர்வு, சொத்து இழப்புகளின் பின்பு இவை நடைபெற்றன. மேலும் தொடர்ந்தும் ஆட்சி மாற்றத்திற்கு முன்பு நடைபெற்ற ஆட்சிகளை விட தற்போது இன்னும் அதிகமான குண்டு வெடிப்புக்களும், மனித அவலங்களும் சொத்து சேதங்களும் நடைபெற்றவண்ணம் இருக்கின்றன. இன்னொரு வகையில் பார்த்ததால் மீளமுடியாத உள்நாட்டு யுத்தம் ஒன்று அந்நாடுகளில் திணிக்கப்பட்டுள்ளன. மக்களின் போராட்டங்கள் மக்களை ஐக்கிப்படுத்துவதற்கு பதிலாக மக்களை பல்வேறு குழுக்களாக பிரித்திருக்கின்றது. இது வேண்டுமா..?

மறு புறத்தில் ஈராக், தொடக்கம் சிரியா வரையும் ஆட்சியாளர் மீது மக்களுக்கு அதிருப்த்திகள் இருந்திருக்கின்றன என்பதையும் மறுப்பதற்கு இல்லை. இதனால் சர்வதேச நாடுகளின் குற்றச்சாட்டுகளுக்கு இந்நாடுகள் உள்ளாகி இருக்கின்றன என்பதுவும் உண்மையே. அமெரிக்காவும், அதன் நேசநாடுகளும் இந்த நாடுகளின் வழங்களை சுரண்டுதல், மேலும் தமக்கு சார்பான ஆட்சிகளை இவ்நாடுகளில் நிறுவுதல் என்பதன் அடிப்படையில் உள்நாட்டில் நிலவும் குழப்பகரமான நிலமைகளை தமக்கு சாதகமாக பயன்படுத்தினர், பயன்படுத்திவருகின்றனர் என்பதும் ஆதராங்களுடன் நிறுவிவரும் உண்மைகள்தான்.

ஆனால் அமெரிக்கா, அதன் கூட்டாளிகளின் இந்த கபடத்தனமான விடயங்களில் இருந்து தம்மை பாதுகாக்க இந்த நாடுகள் பலவிடயங்களை செய்யத்தவறிவிட்டன. அமெரிக்க, அதன் கூட்டாளிகள் தவிர்ந்த ஏனைய பல நாடுகள் உலகில் உள்ளன. இவர்களுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுஅந்நாட்டு பிரநிதிகளை தமது நாடுகளுக்கு அழைத்து தமது நாட்டில் நிலவும் உண்மை நிலையை சர்வதேச சமூகத்திற்கு எடுத்தியம்பும் வேலைகளை செய்திருக்கவேண்டும், செய்ய வேண்டும். இதன் மூலம் அமெரிக்க, அமெரிக்க கூட்டாளி நாடுகளின் கபட நாடகங்களை அம்பலப்படுத்திருக்க முடியும். இந்த அணுகுமுறையையே லத்தின், தென் அமெரிக்க, தென்கிழக்கு ஆசிய நாடுகள் பலவும் செய்து வருகின்றன. மாறாக மக்களின் தூய்மையான மத நம்பிக்கைகளையும் ஏனைய விடயங்களையும் முன்னிறுத்தி வீரம் காட்டி கடைசியில் சதாம் குசைன் போலவும், லிபிய கடாபி போலவும் அமெரிக்காவினால் பரிதாபமாக கொல்லப்படுவதும், தொடர்ந்து அந்நாடுகள் உள்நாட்டு யுத்தம் என்ற வடிவில்சீரழித்து போவதும்இராஜதந்திர செயற்பாடுகளின் வெளிப்பாடுகள் அல்ல. சிரியா உடனடியாக இவ்வாறு நடைபெறாவண்ணம் இராஜதந்திரத்துடன் செயற்படுவது நலம்.

கூடவே கியூபா தலைவரின் அமெரிக்க தலைவர் ஒபமாவிற்கான உருக்கமான வேண்டுகோளுக்கு அப்பால் லத்தின், தென் அமெரிக்க நாடுகளும், தென் கிழக்கு ஆசிய வளர்முக நாடுகளும், இந்தியா, ரஷ்யா, சீனா போன்ற நாடுகளும் இவ்விடயத்தில் வீற்றோ என்பதுடன் நிற்காமல் அப்பால் சென்று பேச்சுவார்தைகள் மூலம் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்க முயல வேண்டும். ஒரு முகாம் மட்டும் உள்ள உலக ஒழுங்கில் தான் நினைத்ததை செய்யலாம் என்ற செயற்பாடு இறுதியில் சர்வமும் நாசம் என்பதிலேயே வந்து நிற்கின்றது.

செப்ரம்பர் 11, 2001 நடைபெற்ற இரட்டைக் கோபுரத் தாக்குதலைக் காரணம் காட்டி ஒசமா பின் லாடன் தேடி 2001 இல் ஆப்கானிஸ்தானில் தனது யுத்தத்தை தொடங்கினார் ஜோர்ஜ் புஷ். பின்பு அமெரிக்காவின் நட்பு நாடான பாகிஸ்தானில்தான் ஒசமா பின் லாடனை கண்டுபிடித்தது அமெரிக்கா. 2003ல், ஜோர்ஜ் புஷ் ஈராக்கின் மீது படையெடுத்தார். அப்போது, தனது முன்னாள் சகா சதாம் உசேன் பேரழிவு ஆயுதங்களை வைத்திருக்கிறார் என்ற தவறான முறையில் போலிக் காரணம் ஒன்றைக் கூறி இவ்வாறு படையெடுத்தார். படையெடுப்பின் பின்பு இவர்களால் இரசாயன ஆயுதங்கள் எதனையும் ஈராக்கில் கண்டுபிக்க முடிக்கவில்லை. சர்வதேச சமூகமும் இந்த பொய்மைக்கு எதிராக கிளர்ந்தெளவில்லை என்பது வருந்தத்தக்கது. அடுத்து, ஒபாமா 2011இல் லிபியாவிற்கு எதிராக வான்வழி வழியாக ஏவுகணைத் தாக்குதல்களைத் தொடுத்தார். அப்போது அவர் பெங்காசியில் ரத்த ஆறு ஒடுவதைத் தவிர்க்கும் நோக்கத்துடன் தாக்குதல் மேற்கொள்ளப்படுவதாகக் கூறினார். இப்போது சிரியா அமெரிக்காவின் குறியாகும். இதற்கு அவர்கள் கூறும் தேடிப்படித்த காரணம் சிரியா ராணுவம், அங்கே கலகம் செய்திடும் படையினருக்கு எதிராக சறின் எனப் படும் நரம்புகளைப்பாதிக்கும் இரசாயன ஆயுதத்தைப் பயன்படுத்துகிறதாம்.

அமெரிக்காவும் அதன் நேட்டோ கூட்டாளிகளான பிரிட்டனும், பிரான்சும் சறின் வாயுவை ஐ.நா. ஆய்வாளர்கள் புலனாய்வுகளை மேற்கொள்வதற்காக சம்பவ இடங்களுக்குச் செல்வதற்கு முன்பேயே சிரியா அரசாங்கம் பயன்படுத்தியது என்று முடிவு செய்துள்ளன. இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டால் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வோம் என்று தாங்கள் கூறிய எச்சரிக்கையை சிரியா அரசாங்கம் மீறி விட்டது என்பதே ஒபாமாவின் கூற்றாகும். அமெரிக்காவின் உலகத்தின் பொலிஸ்காரன் வேடம் உண்மையிலேயே அதிசயமான ஒன்றாகும். வியட்நாமில் சண்டை நடைபெற்றபோது, அமெரிக்கப் படைகள் ஏஜண்ட் ஆரஞ்சு (Agent Orange) என்னும் 20 மில்லியன் கலன் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தி, சுற்றுச்சூழலைப் பேரழிவுக்கு உள்ளாக்கின, பிறக்கும் குழந்தைகளில் பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் இன்றுவரை ஊனத்துடன் பிறப்பதற்கும் இதுவே காரணமாய் அமைந்தன.

ஈராக்கில், சமீபத்தில்கூட, அமெரிக்கப் படையினர் செறிவு குறைந்த யுரேனியத்தையும், வெள்ளை பொஸ்பரஸ் குண்டுகளையும் பயன்படுத்தி மக்களுக்கு மிகவும் கொடூரமான காயங்களை ஏற்படுத்தினார்கள். இப்போது இதே ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள்தான் சிரியா இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்துவதாகவும், எனவே அதனைத் தாக்கப்போகிறோம் என்றும் தங்களுடைய சட்டவிரோத ஆக்கிரமிப்புக்குக் காரணங்களாகக் கூறிக் கொண்டிருக்கிறார்கள். நிருபிக்க முடியாத கற்பனையான ஒன்றை அல்லது அரைகுறை உண்மையைத் தங்கள் ஆக்கிரமிப்புக்கான காரணமாக, ஏகாதிபத்தியம் காலங் காலமாகக் கூறிவரும் உத்தியையே ஒபாமாவும் இப்போது கூறிக்கொண்டிருக்கிறார். கடந்த இரண்டரை ஆண்டு காலமாகவே சிரியா தங்களுக்கு எதிராக சீறியெழுகிற எதிர்ப்பைப் எதிர்கொண்டு வருகின்றது.

மேலும் சிரிய அரசுக்கெதிராக கிளர்ச்சியில் ஈடுபடும் கிளர்ச்சிப்படையினர் கூறுகின்றனர், சவூதிஅரேபியா தமக்கு வழங்கிய இரசாயன ஆயுதங்களை கையாளத் தெரியாமையினால் ஏற்பட்டதன் விளைவே நஞ்சு இரசாயனத்தின் மரணங்கள். இவ் ஆயுதங்கள் ஆபத்தான இரசாயனங்களைக் கொண்டிருப்பது கூட தமக்கு தெரிந்திருக்கவில்லை என்று மேலும் தெரிவித்தனர் அசோசியேற் பிரஸ் நிருபரிடம். (“Syrian rebels in the Damascus suburb of Ghouta have admitted to Associated Press correspondent Dale Gavlak that they were responsible for last week’s chemical weapons incident which western powers have blamed on Bashar Al-Assad’s forces, revealing that the casualties were the result of an accident caused by rebels mishandling chemical weapons provided to them by Saudi Arabia…… “We were very curious about these arms. And unfortunately, some of the fighters handled the weapons improperly and set off the explosions,” one militant named ‘J’ told Gavlak. His claims are echoed by another female fighter named ‘K’, who told Gavlak, “They didn’t tell us what these arms were or how to use them. We didn’t know they were chemical weapons. We never imagined they were chemical weapons.” - Paul Joseph Watson, Infowars.com)
இப்போது புரிகின்றதா? யார் இரசாயன ஆயுதங்களை யாரிடம் இருந்து பெற்று மக்களுக்கு எதிராக பயன்படுத்தியிருக்கின்றார்கள் என்று.

அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் சிரியாவுக்கு எதிராக ஒருதலைப்பட்சமான நடவடிக்கை எடுப்பது குறித்து ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் எச்சரித்துள்ளார். ஐக்கிய நாடுகள் அங்கீகாரமின்றி எந்தவொரு இராணுவ தாக்குதலை நடத்துவதும் ஒரு ஆக்கிரமிப்பு நடவடிக்கையாகவே அமையும் என அவர் கூறினார். இரசாயன ஆயுதங்கள் சிரிய இராணுவத்தினரால் பயன்படுத்தப்பட்டமைக்கான சான்றுகள் இருப்பின், அந்த சான்றுகள் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபைக்கு அனுப்பப்பட்டு அதன் நம்பகத்தன்மை ஆராயப்பட வேண்டும் என புட்டின் வலியுறுத்தினார்.

பிரித்தானி பாராளுமன்றம் சிரிய மீதான ஆக்கிரமிப்பு யுத்தத்தை நிராகரித்துள்ளது. அமெரிக்க ஜனநாயகம் செனற் சபையின் அங்கீகாரத்துடன் கொக்கரித்து நிற்கின்றது. அமெரிக்க காங்கிரஸ் கரம் தூக்கி இன்னும் ஒரு மனித குல அழிவை அமெரிக்கா செய்ய அனுமதிக்குமா? என்பதே இன்றைய கேள்வி. சரிந்து வரும் அமெரிக்க பொருளாதாரத்தை சரிக்கட்ட போர்தான் வழி என்ற நவ முதலாளித்துவத்தின் கொள்கையைத் தூக்கிப்பிடிக்கும் அமெரிக்க ஆளும் வர்க்கம் யுத்தத்தை வேண்டி நிற்கிறது. ஆனால் சர்வதேச சமூகமோ யுத்தத்தை வெறுத்து நிற்கின்றது. சர்வதேச சமூகம் ஒன்று திரண்டு யுத்தங்களை நிறுத்தி அமெரிக்காவையும், அதன் கூட்டாளிகளையும் நீதி மன்றத்தில் நிறுத்தவேண்டிய காலகட்டம் இது. இது சாத்தியமா? சாத்தியப்படுத்த முடியுமா? என்பதே இன்றைய கேள்வி. மனிதம் நினைத்தால் சாத்தியம் ஆகாதது ஏதும் இல்லை.



# வீடு விற்றோரைத் துரத்தும் வருமான வரிப் பிரிவு

கனடாவின் முக்கிய நகரங்களில் வானுயர்ந்த குடியிருப்புக் கட்டடத் தொகுதிகள் பெருமளவில் கட்டப்பட்டு வருகின்றன. பெருநகரங்களின் ஓரங்களில் உள்ள வயல்களை எல்லாம் குடியிருப்புகளாக்கி கட்டப்பட்ட தனிவீட்டுத் தொகுதிகள் ஒருபுறத்தில் பெருநிலப் பரப்புகளை வளைத்துப் பிடிக்க, நகரின் மையங்களில் உள்ள கார் தரிப்பிடங்கள் எல்லாம் இப்போது உயர்மாடிக் கட்டடத் தொகுதிகளால் நிறைந்துள்ளன.

நகரின் மையத்தில் வேலை பார்ப்பவர்கள் தங்கள் வேலைகளுக்குச் செல்வதற்கு வசதியாகவும், நகரின் மையத்தில் உள்ள கலை மையங்கள், உணவகங்கள் போன்றவற்றை அனுபவிக்கவுமாக, பலரும் இந்த உயர்மாடிக் கட்டட வீடுகளை வாங்குகிறார்கள்.

இவர்களை விட, இந்தக் கட்டடத் தொகுதி வீடுகளை முதலீடுகளாக்குவோரும் உள்ளனர். நகரின் மத்தியில் உள்ள வீடுகளின் விலை அதிகரித்துச் செல்வதால், வாங்கிய சிறிது காலத்தின் பின் விலை உயர்ந்த பின்னால் விற்று லாபம் சம்பாதிக்கவும், மற்றவர்களுக்கு வாடகைக்கு விட்டுப் பணம் பெறவுமாக இன்னும் பலர் இந்த வீடுகளை வாங்குகின்றனர்.

அதிலும் வீடு கட்ட ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே, முற்பணத்தைக் கொடுத்து வாங்கி, கட்டி முடிந்த பின்னால், வீட்டில் குடியிருக்காமலேயே வேறு யாருக்காவது விற்று குறுகிய காலத்தில் பெரும் பணம் சம்பாதிப்பவர்கள் பலர். இதில் கனடியர்கள் மட்டுமன்றி, வெளிநாட்டாரும் அடங்குவர். பல தமிழர்களும் இவ்வாறான வீடுகளில் முதலீடு செய்துள்ளனர்.

ஆனால், இவ்வாறு வீடுகள் கட்டப்படுவதற்கு முன்னாலேயே வாங்கி, கட்டி முடித்த அங்கு வசிக்காமலேயே வேறு யாருக்காவது விற்றவர்கள் மீது கனடிய வருமான வரித்துறை நடவடிக்கை எடுக்க ஆரம்பித்துள்ளது. இவ்வாறு வீடுகளை வாங்கி விற்ற ரொறன்ரோ, வான்கூவரைச் சேர்ந்த பலருக்கு வருமான வரித்துறை கடிதங்களை அனுப்பியுள்ளது.

காரணம் என்ன?

கனடிய வருமான வரிச் சட்டங்களின்படி, ஒருவர் தான் வாழும் வீட்டை விற்கும்போது வரும் லாபத்திற்கு வருமான வரி கட்டத் தேவையில்லை. பெரும் பணக்காரர்கள் குடும்பத்தவர்கள் ஒவ்வொருவர் பெயரிலும் வீடுகளை வாங்கி, அந்த வீடுகள் தான் அவர்களின் வாழும் வீடு என்று கூறி, அவற்றை விற்று பணம் சம்பாதித்து வருமான வரியிலிருந்து தப்பித்துக் கொள்கின்றனர்.

நீங்கள் வாழும் வீட்டை வாங்கப் பெறும் கடனுக்கு கட்டும் வட்டிக்கு வரி விலக்கு இல்லை. ஆனால் அதனை விற்கும்போது கிடைக்கும் லாபத்திற்கு வருமான வரி இல்லை.

மறுபுறத்தில் வாழும் வீட்டைத் தவிர்த்து, முதலீடாக இன்னொரு வீட்டை வாங்கும்போது, அதற்குப் பெறும் கடனுக்குக் கட்டும் வட்டிக்கு வருமான வரி விலக்கு உண்டு. ஆனால் அதை விற்கும்போது கிடைக்கும் லாபத்திற்கு வரி கட்ட வேண்டும்.

நகரத்தின் மத்தியில் உயர்மாடிக் குடியிருப்புகளை வாங்கியவர்கள் மீது வருமான வரிப் பிரிவு நடவடிக்கை எடுப்பதன் காரணம் என்ன?

வருமான வரிச் சட்டங்களின்படி, வாழும் வீட்டை விற்று வரும் லாபத்திற்கு வரி விலக்கு உண்டு எனினும், அந்த வீட்டில் நீங்கள் குறிப்பிட்ட காலம் வாழ்ந்திருக்க வேண்டும்.

கட்டத் தொடங்கும்போது முன்பணம் கொடுத்து, கட்டி முடிந்த பின்னால் குடியேறாமலேயே வேறு ஒருவருக்கு வீட்டை விற்றால், அதை வாழும் வீடாக வருமான வரிப்பிரிவு கருதுவதில்லை. இதை முதலீடாகவே கருதுகிறது. எனவே, அதை விற்று வரும் லாபத்திற்கு வருமான வரி கட்டியே ஆக வேண்டும்.

வாங்கிய, விற்ற பணங்களின் தொகையை அறிந்து கொண்ட வருமான வரிப் பிரிவு, தற்போது நூறு வீதத்திற்கான வரியும், மேலும் ஐம்பது வீதம் தண்டமாகவும் அறவிட முயற்சிக்கிறது. இந்த விபரங்களைத் தெரியாமலும், முகவர்களின் பேச்சை நம்பியும் வீடு வாங்கிய பலர் இப்போது மாட்டிக் கொண்டு முழித்து வருகிறார்கள்.

ஏற்கனவே வீடு வாங்கி விற்றவர்கள் இது குறித்து கனடிய வீட்டு விவகாரங்கள் பற்றித் தெரிந்த சட்டத்தரணிகளின் உதவியை நாடுவது நல்லது. இனிமேல் வீடு வாங்க நினைப்போர் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுப்பது வருமுன் காக்க உதவும்.

-ஜோர்ஜ்-



# சகல சிறுபான்மைக் கட்சிகளும் ஒன்றிணைந்து மத்திய அரசின் மாகாண அதிகாரங்களைப் பறிப்பதை தடுத்தல் வேண்டும்

## கலாநிதி வெள்ளைத்தம்பி அமிர்தீன்

கலாநிதி வெள்ளைத்தம்பி அமிர்தீன் கிழக்கு மாகாணத்தில் ஏறாவூர்ப் பிரதேசத்தைச் சேர்ந்தவர். முதலாவது கிழக்கு மாகாண சபையில் தெரிவான எதிர்க்கட்சி அங்கத்தவராக பதவி வகித்தவர். பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரி. அதே பல்கலைக்கழகத்தில் மிக நீண்ட காலம் அரச அறிவியல் துறைப் பேராசிரியராகப் பணியாற்றியவர். 2006ல் புதுடெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் அரச அறிவியல் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றவர். கனடிய யோர்க் பல்கலைக்கழகம், இத்தாலி, புளோரன்சில் உள்ள ஐரோப்பிய பல்கலைக்கழகக் கல்லூரி, சுவீடனில் உள்ள உப்பசாலாப் பல்கலைக்கழகம், பிரான்ஸ் மனித உரிமைக் கற்கை நிறுவனம் ஆகியவற்றில் மனித உரிமைகள், அகதி நிலை மற்றும் சர்வதேச முரண்பாடுகள் பற்றிய துறைகளில் பயிற்சி பெற்றவர். இலங்கையில் பல்வேறு அமைச்சுக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், மற்றும் உலக வங்கி ஆகியவற்றில் உயர் பதவி வகித்தவர்.

இன்று வரை வரலாற்று மற்றும் கோட்பாட்டு வழி நின்று தமிழ் மக்களின் போராட்டத்தை ஆதரிப்பதுடன், இலங்கையின் சிறுபான்மை மக்களின் உரிமைக்காக தொடர்ந்து குரல் கொடுத்து வருபவர். அந்தக் காரணத்தினாலேயே இன்று கனடாவில் அஞ்ஞாதவாசம் செய்பவர். அவரது கருத்துக்களை உங்களிடம் பகிர்வதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

*இனப் பிரச்சினைக்காக தீர்வு இலங்கையின் ஒட்டுமொத்த மக்களது அரசியல், பொருளாதார சமூக விமோசனத்திற்கான முந்நிபந்தனை என்று பூபாளம் கருதுகிறது. உங்கள் கருத்து என்ன?*

இலங்கையின் அரசியல் வரலாறு காலம் காலமாக சிறுபான்மையின மக்களது உரிமைகளை பறிக்கும் முயற்சியினை சுதந்திரத்திற்கு முன்னர் இருந்து ஆரம்பித்தபோதிலும், 1948ம் ஆண்டு சுதந்திரத்தினைத் தொடர்ந்து வந்த ஒவ்வொரு சிங்களப் பெரும்பான்மை அரசாங்கமும் தமிழ் பேசும் மக்களது உரிமைகளைத் திட்டமிட்டுப் பறித்தெடுக்கலாயிற்று. இவ்வாறு பறிக்கப்பட்ட உரிமைகளை வென்றெடுப்பதற்கும், தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையினராக இருக்கும் வடக்கு கிழக்கு மாகாணத்தில் சுயாட்சி ஏற்படுத்த வேண்டுமென அரசியல் ரீதியாக ஏற்படுத்தப்பட வேண்டுமென உருவாக்கப்பட்ட அரசியல் கட்சிகளும், போராட்டங்களும் தோல்வி கண்டதன் விளைவாக ஏற்படுத்தப்பட்ட ஆயுதப் போராட்டமானது, இலங்கையின் அரசியல் வரலாற்றில் பெரும் எண்ணிக்கையிலான மக்களின் உயிர் இழப்பிற்கும் பொருளாதார இழப்பிற்கும் மக்களின் சுயநிர்ணய ஆளுகையை இழப்பதற்கும் காலாக மாறியது.

இந்நிலைமையிலிருந்து, தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வாக 1956ம் ஆண்டிலிருந்து அப்போதைய பிரதமராக இருந்த திரு. எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்காவிற்கும், தமிழ் மக்களின் தலைவராக இருந்த திரு.எஸ்.ஜே.வி. செல்வநாயகத்திற்கும் இடையில் ஏற்பட்ட பண்டா,சல்வா ஒப்பந்தம் முதல் பல ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு அவை காலப்போக்கில் செயலிழந்தும் போயின.

ஆயினும், 1983ம் ஆண்டு யூலைக் கலவரத்தைத் தொடர்ந்து, தமிழ் பேசும் மக்களுக்குப் பெருமளவு தன்னாதிக்கத்துடன் கூடிய ஒரு மாகாண அரசு முறைமையை அப்போதைய இந்தியப் பிரதமராக இருந்த திரு. ராஜீவ்காந்தி அவர்களும், அப்போதைய இலங்கை ஜனாதிபதியாகவிருந்த திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்களும் 1987ம் ஆண்டு செய்துகொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், தமிழ் தேசிய பிரச்சினைக்கு தீர்வாக இலங்கை, இந்திய ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டு, இலங்கையின் 1998ஆம் ஆண்டின் அரசியல் அமைப்பில் 13வது சரத்தினை உருவாக்கி, குறைந்தபட்ச அதிகாரங்களைக் கொண்ட மாகாண சபை முறை ஒன்று சிறுபான்மையின மக்களது அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அறிமுகம் செய்யப்பட்டது.

இம் மாகாண சபை முறையானது தம்மைத் தாமே சுயஆட்சி செய்யும் ஒரு முறையாக அறிமுகம் செய்யப்பட்ட போதிலும், அவ்வாறான ஒரு சுயாட்சி முறைமைக்குரிய சட்டவாக்க அதிகாரம், தங்களுக்குரிய நிதியைப் பெறுவதற்கான அதிகாரம் போன்றவைகளுடன் நீதிமுறைகளை சுயாதீனமாக கையாளவும் இடமளிக்க முடியாத ஒரு வெளிப்படைத் தன்மையற்ற, மக்களின் பங்களிப்பு குறைந்த ஒன்றாகவே காணப்பட்டதனால் இதனை அரசியல் விமர்சகர்கள் ஒரு வெள்ளை யானை என விமர்சனம் செய்யும் அளவிற்கு காணப்பட்டது.

இலங்கையின் இனப்பிரச்சினையானது தற்போதைய நிலையில் புதியதோர் பரிணாமத்தைப் பெற்றிருக்கும் இவ் வேளையில், தமிழ் மக்களின் உரிமைகளைப் பற்றிப் பேசி அவர்களின் சுயநிர்ணய உரிமையை வழங்குவதென்பது, சிங்கள பெரும்பான்மையின ஆட்சியாளர்களுக்கு பெரும் பிரச்சினையாகவே காணப்படுகின்றது. பல்வேறு துன்பங்களுக்கும், பேரழிவுக்கும் உட்பட்ட வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்குத் தீர்வு காண்பதற்கு சிங்கள மக்களைத் திருப்திப்படுத்தி விட்டு, அவர்களின் அரசியல், நிதி, பொருளாதாரக் கட்டமைப்புகளை சீரமைத்துவிட்டு தமிழ் மக்களுக்குத் தீர்வு காண்பதென்பது ஏற்றுக்கொள்ள முடியாததும், விமர்சிக்கத் தக்கதுமாகும்.

*மாகாண சபை முறைமை இனப்பிரச்சினைக்கான தீர்வாக அல்லது குறைந்தபட்ச தீர்வாகவாவது அமையும் என நீங்கள் கருதுகிறீர்களா?*

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முன்மொழியப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மாகாண சபை முறையானது

அ) சட்டமும் ஒழுங்கும்

ஆ) காணியும் காணியமர்வும்

இ) விவசாயமும் கைத்தொழிலும்


ஈ) கல்வியும் கலாச்சாரமும்

அத்துடன் ஒவ்வொரு மாகாண சபையும் நிதி துணைக் குழுவையும், மேல்நீதிமன்றத்தையும் கொண்டிருக்குமென அரசியல மைப்பின் 13வது சரத்தின்படி உருவாக்கப்பட்டது. இவ்வாறான குறைந்தபட்ச அதிகாரங்களைக் கொண்ட மாகாண சபையானது, அப்போது அறிமுகம் செய்யப்பட்ட போது, சிங்கள பெரும்பான்மை மக்களால் ஏற்றுக் கொள்ளப்படவுமில்லை, அதே வேளையில் தமிழ் பேசும் மக்களின் நீண்ட கால அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வாகவும் அமையவில்லை.

தற்போது 30 வருட கால யுத்தம் முடிவு பெற்று, நாட்டின் சகல மக்களின் உரிமைகளுக்கும் சமமான முறையில் மதிப்பளிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படும் வேளையில், இம்மாகாண சபை முறைமை மட்டுமே தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வாக இருக்க முடியுமென நினைக்கும் வேளையில், அதனையும் இல்லாமல் செய்ய வேண்டுமென தற்போதைய அரசாங்கமும், ஜனாதிபதியும் எதிர்பார்க்கின்றனர்.

1987ம் ஆண்டு மாகாண சபை முறைமை அறிமுகம் செய்தபோது அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் அரசாங்கத்தில் இருந்த சிங்களப் பெரும்பான்மை அரசியல்வாதிகள் விரும்பியோ விரும்பாமலோ இம்முறைமையை ஏற்றுக்கொண்டனர். ஆனால் தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும், அவரது அரசாங்கத்தில் பங்கு வகிக்கும் சிங்கள மத தீவிரவாத பங்காளிக் கட்சிகளும், ஏனைய உறுப்பினர்களும் இதனை இல்லாதொழிக்க வேண்டும் எனவும், தமிழ் பேசும் மக்களுக்கு தற்போது எந்தவிதமான பிரச்சினைகளும் கிடையாது எனவும் ஆணித்தரமாக விவாதிக்கும் நிலையில், இம்மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் குறைந்தபட்ட அதிகாரங்களையும் மத்திய அரசாங்கத்திற்கு வழங்கப்பட வேண்டுமென நினைக்கின்றனர்.

வடக்கும், கிழக்கும் இணைந்த ஒரு மாகாண அலகிற்குள் அதிகாரப் பகிர்வு, காணிப் பகிர்வு, சமூகப் பொருளாதார மேம்பாடு, இவைகளை அடைந்துகொள்வதற்கு தங்களுக்கு ஒரு சுயாதீனமான ஆட்சி தேவை. அப்படியான ஒரு அரசு உருவாகின்றபோதுதான் தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வை நோக்கி நகர முடியும் என தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் வேளையில், இம்மாகாண சபை அவ்வாறான எதிர்பார்க்கைகளை பூர்த்தி செய்யுமளவுக்கு அதிகாரங்களை



கொண்டிருக்கவில்லை.

இலங்கை அரசாங்கம் அரசியல் திட்ட நீதியாக பல காப்புறுதிகளை இம்மாணாக சபை முறை மூலமாக வழங்கியுள்ள போதிலும், இவ்வுரிமைகளை இல்லாமல் செய்வதற்கான மறைமுக அதிகாரங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. குறிப்பாக, ஒரு சட்டமூலம் பாராளுமன்றத்தில் :முன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படலாம். அவ்வாறே சகல மாகாண சபைகளும் விரும்பினாலும் அவை சட்டமாக ஏற்றக்கொள்ளப் படலாம். அல்லது ஒரு சர்பஜன வாக்கெடுப்பின் மூலம் சட்டமாக்கப்படலாம்.

ஆனால், இன்று இலங்கையில் உள்ள சிங்கள தீவிரவாத அமைப்புகள் இம்மாகாண சபை முறை சம்பந்தமாக பல்வேறு கோஷங்களை எழுப்பி, அவைகளை இல்லாமல் செய்ய வேண்டும் அல்லது அம்முறைமைக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களையாவது மீளப் பெற வேண்டுமென பகிரங்கமாக அரசாங்கத்தை வேண்டுகின்றனர். அவர்கள் பின்வரும் கோரிக்கைகளை முன்வைக்கின்றனர்.

அ) மாகாண சபைகளுக்குரிய பொலிஸ் அதிகாரங்கள் இரத்துச் செய்யப்படல் வேண்டும்.

ஆ) காணி அதிகாரங்கள் இரத்துச் செய்யப்படல் வேண்டும்.

இ) மாகாணங்கள் இணைந்து தனித்தனியாக செயற்படுவதற்குரிய அதிகாரங்கள் அகற்றப்படல் வேண்டும்.

ஈ) மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பரவலாக்கல் செய்யப்பட்ட விவகாரங்கள் தொடர்பில் பாராளுமன்றத்தின் சட்டுமூலம் எதையும் நிறைவேற்ற வேண்டுமானால், அதற்கு முன்னதாக சகல மாகாண சபைகளிலும் சம்மதம் பெறப்படல் வேண்டும்.

உ) மாகாண சபைகளுக்கு பணிப்புரைகளை மத்திய அரசாங்கம் வழங்குவதற்கு அனுமதிக்கக் கூடிய சட்ட ஏற்பாடு கொண்டு வரப்படல் வேண்டுமெனக் கோருகின்றன.

இந்த சட்டவாக்கச் சமூகப் பின்னணியில் இம்மாகாண சபை முறையையும், சிறுபாண்மையினரின் உரிமையும் எனப் பார்க்கின்றபோது குறைந்தபட்ட அதிகாரங்களைக் கொண்டுள்ள இம்முறைமையை எதிர்காலத்தில் தற்போதைய சிங்கள பெரும்பான்மை அரசாங்கம் தங்களுக்குத் தேவையான முறையில் அதிகாரங்களை குறைப்பதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ளலாம். ஆகவே, 30 வருட கால யுத்தத்திலிருந்து விடுபட்டு தங்களின் சுயநிர்ணயம் மீண்டும் வரையறைப்படுத்தப்பட வேண்டும் என நினைக்கும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு இம்மாகாண சபை ஒரு குறைந்தபட்ட நிர்வாகத்தாலும் அமையவில்லை என்றே கூறவேண்டும்.

அமையப் போகும் வட மாகாண அரசு இதுவரை ஏற்படுத்தப்பட்ட ஏனைய மாகாண அரசுகளிலிருந்து வேறுபட்டிருக்கும் என நீங்கள் நினைக்கிறீர்களா?

இலங்கையின் அரசியல் வரலாற்றில் செப்டம்பர் 21, 2013ம் திகதி ஒரு மைல்கல்லாக அமையவிருக்கின்றது என்றால் மிகையாகாது. யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் இலங்கை அரசு தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்து, அவர்களின் தேவைகளை மீள்கட்டமைத்து, அதன் மூலம் தேசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும், இலங்கையில் வாழுகின்ற சகல தமிழ் பேசுகின்ற மக்களுக்குமான நீதியும், நிரந்தர சமாதானமும், உண்மையான நல்லிணக்கமும் ஏற்படுத்தப்பட வேண்டுமென வேண்டப்படும் ஒரு காலகட்டத்தில் இவ்வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெறுகின்றது.

இவ்வட மாகாண சபைத் தேர்தலால் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்கான ஒரு கடைசி ஆயுதமாகவும், அதே வேளை சிங்கள தேசியவாதத்திற்கும், அதன் பின்னணியிலிருந்து போட்டியிடுகின்ற அனைத்து தமிழ் பேசும் கட்சிகளுக்குமான ஒரு நேரடியான சவாலாகவே காணப்படுகின்றது.

இவ்வட மாகாண சபைத் தேர்தலால் எதிர்காலத்தில் ஒன்றுபட்ட ஓர் இலங்கைக்குள் சமஷ்டிக் கட்டமைப்பின் அடிப்படையில் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடப் பகுதிகளில் உள்ள சுயநிர்ணய உரிமையை அடிப்படையாகக் கொண்ட தீர்வை வழங்கவும், மத்தியில் உள்ள ஆட்சி அதிகாரங்களைப் பகிர்வது தொடர்பாகவும், முக்கியமான பங்கினை வகிக்கவிருக்கின்றது.

இம்மாகாண சபையானது அதிகாரமற்ற ஒரு சபையாகக் காணப்பட்ட போதிலும், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை தீர்மானிப்பதில் தமிழ் மக்களின் நிலைப்பாடு எவ்வாறு அமையப் போகின்றது? அவர்கள் எவ்வாறான ஆட்சி முறைமையை எதிர்பார்த்து இருக்கின்றார்கள்? இவைகளை அடைந்து கொள்வதற்கு அவர்களின் ஒட்டுமொத்த கருத்துக்கள் எவ்வாறு பிரதிபலிக்கப்படப் போகின்றது? மத்திய, சிங்கள தேசியவாத அரசின் போக்கினை கண்டிப்பதற்கும், சர்வாதச் சமூகத்திற்கு தங்களுக்கு கடந்த 30 வருட காலமாக நடந்த கோர அழிவுகளுக்குப் பதில் கூறும் ஒரு களமாக இதனைப் பார்க்க முடியும்.

30 ஆண்டுகளாக பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து வடக்கு மக்களுக்கு இவ்வட மாகாண சபைத் தேர்தல் ஒரு சுதந்திர எண்ணக் கருத்தினை வெளிப்படுத்தும் கருவியாக காணப்படுகிறது. அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவும், எதிர்காலத்தில் தாங்களும் தலைநிமிர்ந்து வாழுவதற்குரிய கடைசி ஆயுதமாக பயன்படுத்த வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இவ்வாய்ப்பினைப் பயன்டுத்தி பிராந்திய நீதியிலான ஆட்சிமுறைமையை ஸ்திரப்படுத்த வாய்ப்புகள் கிடைத்திருக்கின்றது.

இதனால்தான், இலங்கையின் இனப்பிரச்சினைக்கு மாகாண சபை முறை தீர்வாக அமையாது எனக் கூறிவந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பும், வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாண சபையிலேயே போட்டியிடுவோம் என முதலாவது கிழக்கு மாகாண சபைத் தேர்தலைப் பகிஷ்கரித்த இத் தமிழ் தேசிய கூட்டமைப்பும் இவ்வட மாகாண சபையில் போட்டியிடுகின்றது.

இவ்வாறு அமையப் போகும் இவ்வட மாகாண சபையானது, நிச்சயமாக ஏனைய மாகாண சபைகளிலிருந்து வேறுபட்டதாகவே அமையப் போகின்றது. அமையவிருக்கும் இவ்வட மாகாண சபையானது, தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருப்பதை தவிர்த்து வரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அரசுக்கும் அவரின் அரசாங்கத்திற்கும், சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடனும், மேற்பார்வையுடனும் ஒரு அழுத்தத்தினைக் கொடுப்பதற்கான படியாகவே அமையவிருக்கின்றது.

இச்சபையின் மூலம், இறுதிக்கட்ட யுத்தத்தின் மூலம் அரசாங்கம் இழைத்த போர்க் குற்றம், தொடர்பிலும், காணாமல் போனோர் தொடர்பிலும், மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் போதுமான பயனை அளிக்காத நிலையில், அவைகளை மீண்டும் சுயாதீன சர்வதேச விசாரணை முன்னெடுப்பதற்கு இம்மாகாண சபை வாய்ப்பாக அமைய முடியும்.

அத்துடன் இப்பிரதேசத்தில் உள்ள பிரச்சினைகளான, கல்வி, சுகாதாரம் போன்றவற்றுக்குப் புறம்பாக இராணுவம் கைப்பற்றியுள்ள பொதுமக்களின் காணிகளை மீளப் பெறவும், இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றவும், விதவைகளுக்க மறுவாழ்வு, முன்னை நாள் போராழிகளுக்கு புனர்வாழ்வு, சட்ட விரோத குடியேற்றங்கள், மிதிவெடி அகற்றுதல் போன்றவைகளை உடனடியாக முன்னெடுக்கவும், அத்துடன் அந்தப் பிரச்சினைகள் பற்றி மக்கள் மத்தியில் தெளிவான சிந்தனைகளை ஏற்படுத்தவும், மேற்படி பிரச்சினைகளை உண்மையான முறையிலும், வெளிப்படைத் தன்மையுடனும், சர்வதேச சமூகத்திற்கு எடுத்துச் செல்வதற்குமான ஒரு ஊடகமாக அமையவிருக்கின்றது.

மத்திய அரசாங்கத்திலும், ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகின்ற ஆளுநரின் கையிலுமே அதிகாரம் குவிந்து இருக்கும் அதே வேளையில், பேரிவாதத்திற்கும், அதன் ஏனைய சக்திகளும் நீதி, சமத்துவம், சமாதானம் போன்றவைகளை நிலைநாட்டுவதில் பின்தங்கியுள்ள நிலையில் வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் பேசும் மக்களுக்கான தன்னாட்சி அரசாங்கம், அத்துடன் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வதற்கான, அரசியல் பேச்சவார்த்தையை நியாயமான அரசாங்கப் பணிகளைப் பெறுவதற்கு ஒரு சந்தர்ப்பமாக இச்சபை அமைய வருகின்றது.

எனவே, இலங்கையின் சகல மாகாண சபைகளும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து இயங்குகின்றபோது, வட மாகாண சபை மாத்திரமே தனித்து நின்று 13வது அரசியல் சட்டப் பிரச்சனைகள், அதற்கு மேலும் தமிழ் மக்களுக்குத் தேவைப்படும் அரசியல் உரிமைகள் குறித்த சட்டப் பிரச்சினைகள் போன்றவைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

மத்தியில் ஆட்சியமைப்பவர்கள் மாகாண அதிகாரங்களை பறிப்பதிலேயே குறியாக உள்ளபோது, மாகாண அதிகாரங்களை வலுப்படுத்துவதற்கு எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்?

இலங்கை அரசாங்கம் மாகாண சபைகளின் அதிகாரங்களைப் பறிப்பதிலேயே முன்னிப்பாக இருந்து வரும் நிலையில் காலத்தின் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் நடைபெறும் வடமாகாண சபைத் தேர்தலானது மாகாண அதிகாரங்களை வலுப்படுத்துவதற்கு முக்கியமான பங்கிணை வகிக்க வேண்டியுள்ளது.

யுத்தத்திற்குப் பின்னரான சிவில் நிர்வாக நடவடிக்கைகள் தீங்கிழைக்கப்பட்டும், நிர்வாக நடவடிக்கைகளிலும், பொதுமக்களின் நாளாந்த வாழ்க்கையில் இலங்கை இராணுவத்தினர் தலையிடுவதைத் தவிர்ப்பதே முதலாவதும் முக்கியமான நடவடிக்கையாகக் காணப்படுகின்றது. மக்களின் வாழக்கையில் இயல்புநிலை

## இந்திய நாவலாசிரியர் சுஷ்மிதா பேனர்ஜி சுட்டுக்கொலை



தலிபான்களிடமிருந்து தான் தப்பி வந்த கதையை நாவலாக எழுதிய இந்தியப் பெண் நாவலாசிரியரான சுஷ்மிதா பேனர்ஜி (வயது 49), ஆப்கானிஸ்தானில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். ஆப்கானிய வர்த்தகரை திருமணம் செய்த கொண்ட, சுஷ்மிதா பேனர்ஜி, பக்திகா மாகாணத்திலுள்ள அவரின் வீட்டிற்கு முன்னால் அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். ஆப்கானிஸ்தானில் தனது வாழக்கை குறித்து “காபூலிவாலாவின் வங்காள மனைவி“ என்ற பெயரில் இவர் எழுதிய நாவலில், அவர் தனது ஆப்கான் கணவர் ஜான்பாஸ் கானுடன் வாழ்ந்த வாழ்க்கையை வர்ணித்துள்ளார். கடந்த 1995ஆம் ஆண்டு ஆப்கானில் இருந்து தான் தப்பி வந்தது குறித்து சுஷ்மிதா பேனர்ஜி எழுதிய அந்தப் புத்தகம் 2003ஆம் ஆண்டு இந்தியில் திரைப்படமாக்கப்பட்டது. இந்தப் புத்தகம் அதிகளவில் விற்பனையான புத்தகங்களின் பட்டியலிலும் இடம்பெற்றது. அண்மையில் தான் பேனர்ஜி தனது கணவருடன் சேர்ந்து வாழ்வதற்காக ஆப்கானுக்கு மீண்டும் சென்றுள்ளார். மாகாண தலைநகரான கரானவில் உள்ள இவரது வீட்டுக்கு வந்த தலிபான் தீவிரவாதிகள், இவரின் கணவரையும் வீட்டில் உள்ள மற்றவர்களையும் கட்டிப் போட்டுவிட்டு இவரை சுட்டுக் கொன்றுவிட்டு சடலத்தை அருகிலுள்ள மதப் பள்ளிக் கூடத்தில் வீசிச் சென்றுள்ளதாக அந்நாட்டு பொலிஸார் அறிவித்துள்ளனர். இதேவேளை, இந்தக் கொலையை தாம் செய்யவில்லை என்று தலிபான்கள் மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதே போலவே பெண்களின் கல்வி விடிவிற்காக குரல்கொடுத்த மலாலா என்ற இளம் பெண்ணையும் தலிபான்கள் அண்மையில் சுட்டுக்கொலை செய்ய முயன்று அவர் இன்று உயிர் தப்பிய நிலையில் புகழ்பெற்ற நூலகத்தை (Birmingham. UK) திறக்கும் பிரதம விருந்தினராக் கௌரவிக்கப்பட்டதையும் யாவரும் அறிந்ததே.

தோன்றவும், காணி சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை கையாள்வதற்கும், தனியார் காணி உடைமையாளர்கள் அவர்களின் காணிகளை கண்டறிந்து அவர்களிடம் ஒப்படைப்பதற்கும், வடக்கில் காணிகள் மீதான கட்டுப்பாட்டை பெற்றுக் கொள்ளவும் இவ்வட மாகாண சபை தனது அதிகாரங்களை கைப்பற்றுவது மட்டுமல்ல, அதனைப் பாதுகாத்துக் கொள்வதிலேயுமே தங்கியுள்ளது

மாகாண சபைகளுக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்க்ள் கொஞ்சம் கொஞ்சமாகவும் மறை முகமாகவும், நேரடியாகவும் மத்திய அரசாங்கத்தினால் இல்லாமல் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது. குறிப்பாக மாகாண சபைகளின் சம்மதம் பெற்றுத்தான் சட்டமாக முடியும் என இருந்த திவி நெகுமே சட்டம், வடமாகாண சபை ஒப்புதல் இன்றியே பாராளுமன்றத்தின் :முன்றில் இரண்டு பெரும்பான்மை அதிகாரத்தைப் பயன்படுத்தி நிறைவேறியுள்ளது. எதிர்வரும் காலங்களிலும், வட மாகாண சபை அமையப் பெற்றாலும், அதன் ஒப்புதல் இன்றியே சட்டங்கள் நிறைவேற்றப்படக் கூடிய நிலைமைகள் நிறையவே காணப்படுகின்றது.

அதிகாரங்கள் அற்ற, குறைந்தபட்ட அதிகாரங்களையாவது தக்க வைத்துக் கொள்ள மக்களை அறிவுமயப்படுத்துவதுடன், சுயநலம் பாராமல் சகல சிறுபான்மைக் கட்சிகளும் ஒன்றிணைந்து மத்திய அரசின் மாகாண அதிகாரங்களைப் பறிப்பதை எதிர்ப்பதுடன், பிராந்திய, சர்வதேச நாடுகளின் உதவியுடன் தடுத்தல் வேண்டும்.

*மாகாண அதிகாரங்களை பாதுகாத்த வலுப்படுத்துவதில் நீதித்துறை எவ்வாறு பங்களிக்கலாம்?*

இலங்கையின் நீதித்துறை அரசியல் மயமாகியுள்ள ஒரு நிலையில்; மத்திய அரசாங்கத்தில் முக்கியமான நீதி சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் குவிந்துள்ள நிலையில், மாகாண சபைகள் பின்வரும் நீதிமன்ற அதிகாரங்களைப் பெற்றுள்ளன.

மாகாண மேல் நீதிமன்றம் ஒன்று ஒடுக்கப்பட்டு, அங்கு

(அ) மாகாணத்தினுள் புரியப்படும் தவறுகள், இலங்கை மேல் நீதிமன்றத்தின் தொடக்க குற்றவியல் நியாயாதிக்க கூட்டத்திற்கிணங்க பிரயோகிக்கப்படும்.

ஆ) மாகாண நீதிவான் நீதிமன்றங்களினாலும், ஆரம்ப நீதிமன்றங்களினாலும் பதியப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட குற்றத் தீர்ப்புக்கள், தண்டனைத் தீர்ப்புகள், கட்டளைகள் தொடர்பில் மேல் முறையீட்டு மீளாய்வு நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும் அதிகாரம்.

இ) பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் வழங்கும் மற்றைய விசாரணை அதிகாரங்களையும் செயற்படுத்தல்.

ஈ) மாகாணத்தினுள் ஏதேனும் சட்டத்தின் கீழ் அல்லது மாகாணத்திற்கென தாபிக்கப்பட்ட ஏதேனும் நியதிச் சட்டத்தின்கீழ் சட்ட விரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கம் நபர்களுடைய முறைப்பாடுகளை விசாரித்தல் போன்ற குறைந்தபட்ட நீதி அதிகாரங்களையே மாகாண சபைகள் பெற்றிருக்கும் வேளையில், மாகாணங்களின் அதிகாரங்களை பாதுகாத்து வலுப்படுத்துவதென்பது மிகவும் கடினமாக ஒரு விடயமாக காணப்படுகின்றது. ஆனால் மத்தியில் உள்ள நீதித்துறை சுதந்திரமானதும் அதே வேளையில் அரசியலிலிருந்து விடுபட்டு செயற்படுமாயின் சில வேளைகளில் மாகாண அதிகாரங்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

குறிப்பாக, வட மாகாண சபை தேர்தல் அறிவிக்கப்பட்டபேது, இத்தேர்தலை ரத்துச் செய்யக் கோரி சிங்கள ஜாதிக பெரமுன தாக்கல் செய்த மனு, இலங்கை ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமைய, வடமாகாண சபைத் தேர்தல் நடக்கவுள்ளதால், நாட்டின் அரசியல் சாசனப்படி, இந்த மனுவை விசாரிக்க நீதிமன்றங்களுக்கு அதிகாரமில்லை எனக் கூறி நீதித்துறை அதனை நிராகரித்துவிட்டது. ஆயினும் வரலாற்று நீதியில் வடக்கும் கிழக்கும் இணைந்திருந்த நிலையை மாற்றியமைத்து, வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம் என பிரித்த வரலாற்றுத் தவறும் நீதித் துறைக்கே சாரும். அண்மைக்காலமாக இலங்கையில் பேசப்பட்ட மிகவும் முக்கியமான திவிநெகும சட்டம் நீதித்துறையிடம் சென்றபோது, அப்போதைய நீதியரசர் சிராணி பண்டார நாயக்க நியாயமான முறையில் இச்சட்டம் மாகாண ஒப்புதல்கள் இன்றி செயற்பட முடியாது என நிராகரித்தபோது, அதனை பாராளுமன்றத்தில் :முன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றியதுடன் மாத்திரமன்றி அவருக்க எதிராக பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரமாணம் கொண்டுவந்து பதவி நீக்கம் செய்யும் அளவுக்கு நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதியும், பெரும்பான்மைப் பலத்துடன் பாராளுமன்றமும் காணப்படும் வேளையில், மாகாண அதிகாரம் இல்லாமல் செய்யப்பட வேண்டும் என சிங்கள தேசிய வாதச் சக்திகள் கோருகின்றபோது, அதனைப் பாதுகாப்பது இலகுவான காரியமல்ல. ஆகவே 13வது சரத்தில் கூட்டல் எதுவும் ஏற்படாவிட்டாலும், அதில் கழித்தல் ஏற்படாமல் தவிர்ப்பதற்கு மிகவும் பிரயத்தனம் செய்ய வேண்டியுள்ளது.

*வடக்கு கிழக்கு மாகாணங்களை மீழ் இணைப்பதற்கான வாய்ப்புகள் உண்டா? அதனை எவ்வாறு சாத்தியமாக்கலாம்?*

1987ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட இந்திய இலங்கை உடன்படிக்கையின் அடிப்படையில் வடக்கு, கிழக்கு என இரு மாகாணங்களாக காணப்பட்ட பகுதிகளை வடகிழக்கு என தற்காலிகமாக ஒரு மாகாணமாக இணைத்து, அது தமிழர்களின் தனியான சுயாட்சித் தாயகமாகவும் அறிமுகப்படுத்தியது. இவ் ஒப்பந்தத்தின்படி, கிழக்கில் உள்ள மக்களால் ஒரு வருடத்தின் பின்னர் சர்வஜன வாக்கெடுப்பொன்று நடத்தப்பட்டு, அவர்கள் ஏற்றுக் கொள்கின்றார்களா, இல்லையா என தீர்மானித்து, அதன்படி வடக்கு கிழக்கு இணைப்பைப் பற்றி தீர்மானிப்பது என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் 1988ம் ஆண்டில் நடந்த வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாண சபை மீண்டும் அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் யுத்தம் தொடர்ந்ததால், சர்வாக வாக்கெடுப்பு நடத்தப்படாமல் தொடர்ந்து வடக்கும் கிழக்கும் இணைந்தே காணப்பட்டது.

2006, ஒக்டோபர், 16ம் திகதி இலங்கை உயர்நீதிமன்றம் வடக்கும்ருகிழக்கும் இணைந்த மாகாணம் இரண்டாக மீண்டும் வடக்கு மாகாணம் என்றும், கிழக்கு மாகாணம் எனவும் பிரிக்கப்படுவதாக அறிவித்ததைத் தொடர்ந்து, 2010 ஆண்டு கிழக்கு மாகாணத்திற்காக முதலாவது மாகாண சபைத் தேர்தலும், இப்போது அங்கு இரண்டாவது மாகாண சபை நடைமுறையில் இருக்கும் வேளையில் இவ்வட மாகாணத்திற்கான தேர்தல் இலங்கை அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ் பேசும் மக்களின் தாயகமாகக் காணப்பட்ட வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாணம் ஆகக் குறைந்தது. ஒரு சுயாட்சிக்கான அலகாகக் கருதப்பட்டது. ஆனால் இன்று குறைந்தபட்ட அதிகாரங்களை மட்டும் வைத்திருக்கும் இம்மாகாணங்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, அவ்வதிகாரங்களைப் பறிக்கும் நோக்கில் மத்திய அரசாங்கம் கங்கணம் கட்டி இருக்கும் வேளையில், வடக்கும் கிழக்கும் இணைவதென்பது மிகவும் கடினமான விடயமே.

அரசியலமைப்பில் காணப்படுகின்ற இரண்டு மாகாணங்கள் விரும்பினால் ஒரு மாகாணமாக முடியும் என்பதை அரசாங்கம் நீக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. 2010 ஆண்டு நடைபெற்ற கிழக்கு மாகாண சபையில் ஐக்கிய தேசியக் கட்சியும், அதனுடன் இணைந்து செயற்பட்ட சிறுபான்மைக் கட்சிகளும் ஒருவேளை வெற்றி பெற்று ஆட்சி அமைத்திருந்தால், அப்போதிருந்த அரசியல் சூழ்நிலைகளைப் பயன்படுத்தி வடக்கும் கிழக்கும் இணைப்பதற்கான ஒரு வாய்ப்பு காணப்பட்டது. அவ்வாறே கடந்த 2012ம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது கிழக்கு மாகாண சபையில் சிறுபான்மைக் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து மாகாண ஆட்சியைக் கைப்பற்றியிருந்தால்கூட இவ்விணைப்பு என்பது சில வேளைகளில் சாத்தியப்பட்டிருக்கலாம். ஆனால், இன்று நிலைமையே வேறு, மத்திய அரசாங்கமும் அதில் அங்கம் வகிக்கும் சிங்கள தேசியவாத அமைப்புகளும்

13ம் பக்கம் பார்க்க...

---

# சமாதானத்துக்கான சர்வதேச விருது பெறும் வன்னிப் பெண்



யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வன்னி மாவட்ட பெண்கள் மற்றும் சிறுவர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்காக உழைத்து வரும் பெண்ணொருவர் சர்வதேச சமாதான விருதுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். கிளிநொச்சி மாவட்டம் திருநகர் வடக்கைச் சேர்ந்த 49 வயதுடைய தவச்சிறி சாள்ஸ் விஜயரட்னம் என்ற பெண்ணே இந்த விருதுக்காகத் தெரிவாகியவராவார். கிராமிய மாதர் அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளராகவும், பிரதேச செயலக மட்டத்திலான பெண்கள் அபிவிருத்தி சம்மேளனத்தின் பொருளாளராகவும் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் சிறுவர்கள் மத்தியில் தவச்சிறி சாள்ஸ் விஜயரட்னம் பணியாற்றி வருகின்றார்.

கடந்த 1981ஆம் ஆண்டு முதல் பொதுச் சேவைகளில் ஈடுபட்டு வந்த இவர், யுத்தத்தினால் இடம்பெயர்ந்து மெனிக்பாம் இடைத்தங்கல் முகாமில் இருந்து மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பின்பு ஆண் துணையற்ற பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் உதவும் பணியை ஆரம்பித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவருடைய பொதுச் சேவையைப் பாராட்டி, சில அரச நிறுவனங்களால் மகளிர் தினத்தின் போது பாராட்டி கௌரவிக்கப்பட்டார். இந்நிலையிலேயே இவருக்கு இந்த சர்வதேச விருது கிடைத்திருக்கின்றது.

இந்த விருதானது, தனது சமூகத்தில் பாதிக்கப்பட்டு ஒதுக்கப்பட்டவர்களுக்கும், உதவியற்றவர்களுக்கும் தொடர்ந்து பணியாற்றுவதற்குத் தன்னை ஊக்குவித்திருப்பதாக அவர் கூறுகின்றார். ஆசிய பிராந்திய நாடுகளில் அடிமட்டத்தில் இருந்து தேசிய மட்டத்தில் கணிக்கக் கூடிய வகையில் சமாதானத்தையும், மக்களின் வாழ்க்கையில் மாற்றங்களையும் ஏற்படுத்துவதற்காக உழைக்கும் தலைவர்களான பெண்களைக் கண்டறிந்து அவர்களை ஊக்குவிக்கும் வகையில் “என்“ (N) சமாதான விருது வழங்கப்படுகின்றது. “என்“ (N) சமாதான வலையமைப்பின், இந்த விருது வழங்கும் நடவடிக்கையானது, ஆசிய பிராந்தியத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டத்தின் (யுஎன்டிபி) கீழ் செயற்பட்டு வருகின்றது.

இந்தோனேசியா, இலங்கை, திமோர் லெஸ்டே, நேபாளம், ஆப்கானிஸ்தான், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் சிறந்த தலைமைத்துவத்தின் மூலம் சமாதானத்தை உருவாக்குவதன் ஊடாக சமூகத்தை வலுவூட்டுகின்ற பெண்களை இனங்கண்டு, அவர்களுக்கு இந்த நிறுவனம் விருது வழங்கி வருகின்றது. பெண்கள் மட்டுமல்லாமல், பெண் சமத்துவத்திற்காக உழைக்கின்ற ஆண்களையும் இனங்கண்டு இந்த நிறுவனம் விருது வழங்கி கௌரவிக்கின்றது.

இம்முறை 2013ஆம் ஆண்டுக்கான இந்த சமாதான விருதுக்காக ஆப்கானிஸ்தான், நேபாளம், பிலிப்பைன்ஸ், சிறிலங்கா, இந்தோனேசியா, திமோர் லெஸ்டே, பிலிப்பைன்ஸ் ஆகிய 7 நாடுகளில் இருந்து ஆளுமைமிக்க 7 பெண்களும், பெண்களின் சமத்துவத்திற்காகப் பாடுபட்ட இந்தோனேசியாவைச் சேர்ந்த உதவி அமைச்சராகிய ஆண் ஒருவரும் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (பி.பி.சி)

# தொப்புள் கொடி உறவை மறந்த புலன் பெயர் ஊடகங்கள்

2010 ஆகஸ்டில் வான்கூவருக்குக் கப்பலில் 492 தமிழர்கள் வந்திறங்கி மூன்றாண்டுகள் ஆகி விட்டன. எடுத்ததற்கெல்லாம் நினைவு தினம் கொண்டாடும் தமிழ் அமைப்புகளும், ஊடகங்களும் இந்த நினைவை மறந்தே விட்டன. இந்த நினைவைக் காட்டி உண்டியல் தூக்கவா முடியும்?

வந்திறங்கியவர்களுக்காக ரொறன்ரோவில் பணம் சேர்த்துச் சுருட்டிய கதைகளும், உதவி செய்வதாகக் கூறி அம்போ என்று கைவிட்ட நிகழ்வுகளும் அதிகம். வந்தவர்கள் தமிழர்கள் என்பதால், ஆட் கடத்தல் முயற்சிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கவும், குடிவரவு விதிகளை இறுக்கமாக்கவும் கனடிய அரசுக்கு வழி வகுத்தது இந்த வருகை. பலருடைய அகதி விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் கனடிய அரசு விடாக்கண்டனாக அவர்களுக்கு எதிராக மேன்முறையீடு செய்து இழுத்தடித்து வருகிறது.

தங்கள் தொப்புள்கொடி உறவுகளை தமிழர்கள் மறந்தாலும் கனடியர்கள் மறக்கவில்லை. வந்திறங்கியவர்களின் எண்ணிக்கை அதிகம் என்பதால் அதற்கெதிரான எதிர்ப்புக் குரல் எழுந்ததா? அல்லது தமிழர்கள் என்பதால் இனவிரோத உணர்வு எழுந்ததா? என்ற கேள்வி சில கலைஞர்களுக்கு எழுந்தது.

இதனால் ஐந்து கலைஞர்கள் சேர்ந்து நாற்பது மீட்டர் நீளமான மரத்தினாலும் துணியினாலுமான வள்ளம் ஒன்றில், வெள்ளையினத்தவர்களை நிற்க வைத்து இந்தக் கலைச் செயற்பாடு உருவம் பெற்றது. வந்தவர்கள் வெள்ளையர்களாக இருந்திருந்தால், எதிர்ப்புணர்வு எழுந்திருக்குமா என்ற கேள்வியை பார்ப்பவர்களின் மனதில் ஏற்படச் செய்வதே இதன் நோக்கம்.

முற்றிலும் பெண்களைக் கொண்ட ஐந்து கலைஞர்கள் அமைப்பினர் அனைவருமே வெள்ளையினத்தவர்கள் அல்லாதவர்கள். இந்த ஐவரில் ஒருவராக வினோ சண்முகநாதன் என்ற தமிழ்க் கலைஞரும் இந்த கலைவடிவத்தின் உருவாக்கத்தில் பங்குபற்றியிருக்கிறார். கனடாவில் பழங்குடிகளைத் தவிர்ந்த அனைவருமே குடியேற்றவாசிகள், இருந்தும் பின்னால் வரும் குடியேற்றவாசிகள் குறித்து முன்னால் வந்தவர்கள் எதிர்ப்புணர்வையே கொண்டிருக்கிறார்கள் என்பதே இவர்கள் வாதம். கனடாவில் இனவெறி பகிரங்கமாக இல்லாவிடினும், மறைமுகமாக உள்ளது என்ற கருத்தை இவர்கள் வலியுறுத்துகிறார்கள்.

இந்தக் கலைவடிவத்தை இவர்கள் நகரின் மையப்பகுதியில் உள்ள பே விற்பனை நிலையத்தின் முன்னால் நடத்தியிருக்கிறார்கள். காரணம் கனடாவில் மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாக செயற்படும் ஹட்சன் பே நிறுவனம், வெள்ளைக் குடியேற்றவாதிகள் பழங்குடிகளுடன் தோல் வியாபாரம் செய்வதற்காக அமைக்கப்பட்டதால், இது வெள்ளைக் குடியேற்றவாதத்தின் குறியீடு என்பதே அவர்களின் வாதம்.

தங்களைப் பற்றிய விடயம் ஒன்று கனடாவில் உள்ள இனவாதத்தை வெளிக்காட்ட உதவுகிறது என்பதோ, அதில் தமிழ் கலைஞரும் சம்பந்தப்பட்டிருப்பதோ புலம் பெயர்ந்த கனடியத் தமிழர்களுக்கு தெரியாமல் இருக்கிறது.

Mass Arrival (பெருந்தொகையான வருகை தரல்) என்ற இந்தக் கலைவடிவம், செப்டம்பர் 30ம் திகதி வரைக்கும், டண்டாஸ் வீதியில் உள்ள விப்பர்சினப்பர் கண்காட்சிக்கூடத்தில் பார்வைக்கு உள்ளது.

ஆர்வம் உள்ளோர் இந்தக் கலைவடிவத்தை 594b Dundas Street West, Toronto, Ontario, M5T 1H5 என்ற விலாசத்தில் உள்ள கண்காட்சிக்கூடத்தில் பார்வையிடலாம்.





# புரட்சித் தலைவியை மறந்த புலன் பெயர் தமிழர்

## என்ன தான் நடக்கும், நடக்கட்டுமே!

-சிண்டு முடியப்பன்-

தமிழ் விடுதலைப் போராட்டத்தில் ஆரம்பப்பங்காளியாக இருந்த அருளரின் மகளான, பிரபல பாடகியான மியா எனப்படும் மாயா அருட்பிரகாசம் தமிழ் கூறும் நல்லுலகில் ஒரு காலத்தில் அபிமானத்திற்குரிய, பிரபலமானவராக இருந்தவர். தனது கருத்துக்களாலும் செயற்பாடுகளாலும் இவர் மேற்குலகில் ஒரு சர்ச்சைக்குரியவராக இருக்கிறார்.

முள்ளிவாய்க்காலில் இறுதியுத்தம் நடந்த போது, இந்த மியா தமிழர்களுக்காகக் குரல் கொடுத்திருந்தார். இலங்கையில் இன அழிப்பு நடப்பதாகவும், தான் ஒருவர் தான் அதற்கு எதிராகக் குரல் கொடுப்பதாகவும் அவர் கூறியிருந்தது புலம் பெயர்ந்த தமிழர்களின் நெஞ்சத்தைத் தொட்டது மட்டுமன்றி, புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவராக இருந்த நடேசன் கூட, இந்திய இதழான த வீக் சஞ்சிகையில் மியாவின் ஆதரவு தமிழர்களுக்கு மன உறுதியைக் கொடுத்ததாகவும் கூறியிருந்தார்.

இவரது கருத்துக்களால் மனம் நெகிழ்ந்த புலம் பெயர் தமிழர்கள், அவரையும் வழமை போல ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக தூக்கிக் கொண்டாடினார்கள்.

முள்ளி வாய்க்காலோடு எல்லாம் முடிந்த பின்னால், மியா மிஸ்ஸிங் இன் அக்ஷன். இவர் தற்போது இலங்கைப் பிரச்சனையில் எதையும் சொன்னதாகத் தகவல் இல்லை. அங்கே வாடும் அகதிகளுக்கு ஒரு செப்புச் சதத்தைத் தன்னும் தூக்கி எறிந்ததாகவும் கதை ஏதும் இல்லை. லைபீரியாவில் பலவந்தமாகப் பிடிக்கப்பட்டு போராளிகளாக்கப்பட்ட குழந்தைப் போராளிகளின் மறுவாழ்வுக்கு லைபீரியப் பயணத்தின் போது உதவியதாகக் கூறும் இவர், இலங்கையில் பலவந்தமாகப் பிடிக்கப்பட்ட குழந்தைப் போராளிகளுக்காக குரல் கொடுத்ததாகவோ, மறுவாழ்வுக்கு உதவியதாகவோ கேள்விப்பட்டதில்லை. இசை நிகழ்ச்சி நடத்தும் அமைப்பு ஒன்றின் மூலம் இலங்கையில் யுத்தக் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்காக இரண்டரை லட்சம் டொலர்கள் கொடுத்ததாகக் கூறப்பட்டாலும், அது எவ்வாறு பயன்பட்டது என்பது பற்றியும் தகவல் இல்லை.

பிரச்சனை அதுவல்ல. இது மியா ஆச்சு! அவரை நம்பித் தூக்கிக் கொண்டாடியவர்கள் ஆச்சு! நமக்கென்ன?

இதே மியா கடந்த மாதம் ரொறன்ரோவில் டான்போர்த் மியூசிக் ஹோலில் நடைபெற்ற தனது இசை நிகழ்ச்சியில் கலந்து சென்றிருக்கிறார். அது குறித்து ரொறன்ரோ ஸ்டாரில் விமர்சனம் ஒன்று வெளிவந்திருந்தது.

இது குறித்து, வன்னியில் எங்காவது குக்கிராமத்தில் இராணுவ அட்டூழியம் பற்றி தப்பாமல் செய்தி வெளியிடும் தமிழ் ஊடகங்களில் எந்தச் செய்தியையும் காணோம். கிரமி விருதுகள் பெற்று, ஒஸ்கார் விருதுக்கு பிரேரிக்கப்பட்டவருக்கு விருது வழங்க, வாழும்போதே ஹோட்டலில் கௌரவிப்போம் என்னும் மேல்மட்ட விருது நகர் வியாபாரிகளையும் காணோம். மேளதாளங்களோடு அழைத்து வந்து, பாராட்டு விழா நடத்தி மோதிரமும் கொடுத்து, பொன்னாடை போர்த்தி, பத்திரிகைக்காரரின் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெறும் சில்லறை யாவாரிகளையும் காணோம்.

இருந்தாலும், தனித்து நின்று போராடிய ஒரு வீரத்தமிழச்சியை கனடாத் தமிழர்கள் இவ்வளவு வேகமாக மறந்திருக்கக் கூடாது. புலம் பெயர்ந்தவர்களின் கையில் தான் போராட்டம் இனிமேல் இருக்கிறது என்ற தேசியத் தலைவரின் கனவை நனவாக்க, படை திரட்டி போராடக் கூடிய ஒரு புரட்சித் தலைவியை தமிழர்கள் இழந்து விட்டார்கள்.

அப்படித் தமிழர்கள் மறந்து போக அவர் என்ன குற்றம் செய்து விட்டார்?

ஒருவேளை பல கோடி மக்கள் பார்க்கும் பந்தாட்டப் போட்டியில் இடைவேளை இசை நிகழ்ச்சியில் நடுவிரலைக் காட்டி, தமிழில் மொழிபெயர்க்க முடியாத தூஷண வார்த்தையைப் பன்படுத்தியதோடு மட்டுமன்றி, யூத, கறுப்பினக் கலப்பினரான கணவனைப் பிரிந்து வாழ்வதால், தமிழ்ப் பண்பாட்டுக்கு விரோதமாக நடந்து விட்டார் என்று கோபம் கொண்டார்களோ?

அல்லது குதியம் குத்தி ஆட்டம் ஆடிய இன்னொரு நம்பிக்கை நட்சத்திரத்தைத் திட்டித் தீர்ப்பதில் கனடியத் தமிழர்கள் பிசியாகி விட்டார்களோ என்னவோ?

என்னவோ ஏதோ இந்த தமிழர்களுக்கு நடுவிரலைக் காட்டாமல் இருந்தால் சரி!



# வானலையில் பெரும் குத்து வெட்டு

-சிண்டு முடியப்பன்-

பத்து வருடங்களுக்கு முன்னால், பல்லினக் கலாசார மக்களுக்கு பண்பலை வானொலி அலைவரிசை ஒன்றை கனடிய அரசு வழங்கியது. ஊடகங்களை தங்கள் வசப்படுத்தி பிரசாரம் செய்ய வசதியாக வன்னித்தலைமையும் தனது பினாமிகள் மூலம், மக்கள் ஆதரவுக் கடிதங்களுடன், இந்தப் பண்பலையை வசப்படுத்தியது. அத்துடன் இங்குள்ள ஊடகங்களை சாம, பேத, தான, தண்ட முறைகளில் கையகப்படுத்தி, ஒருங்கிணைத்து, இங்குள்ள பினாமிகளின் பெயர்களில் செயற்பட வைத்தது. பிரசாரம் ஒருபுறம், பெருந்தொகைப் பணம் மறுபுறம் என, ஓகோ என்று எல்லாமே ஓடிக் கொண்டிருந்தது. பினாமிகள் அவ்வப்போது உண்டியலுக்குள் கை வைத்தாலும், கண்டும் காணாமல் விடப்பட்டு, எல்லோருமே இன்புற்றிருந்தனர்.

எதிர்பாராத விதமாய், முள்ளி வாய்க்காலில் ஆப்பு வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, மக்கள் சொத்து தனியார் வசப்பட்டது. எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என்ற கணக்கில் ஒவ்வொருவரும் தங்கள் பெயரில் உள்ளதைச் சுருட்டிக் கொண்டு பெரும் பொருள் சம்பாதித்துக் கொண்டிருக்கின்றனர். துப்பாக்கி முனையில் நடத்தப்பட்ட கட்டாயத் திருமணம் முடிவுக்கு வந்து ஒவ்வொரு ஊடகமும் இப்போது ஒவ்வொருவர் கையில்.

கனடியப் பண்பலையும் இப்போது தனிநபர் சொத்தாக மாறிவிட்டது. பண்பலையுடன் இருந்த உப அலை வானொலியின் உரிமைக்கான மோதலில் இரவுகளில் கதவுகள் உடைக்கப்பட்டு, ஒலிபரப்புக் கருவிகள் மாறி மாறிக் கடத்தப்பட்ட கூத்துகள் நடந்த போதெல்லாம் கும்பல் கூடி நின்று வேடிக்கை பார்த்தது. கடைசியில் இரவோடிரவாக உபகரணங்கள் கடத்தப்பட்டு, இப்போது உப அலை, பத்திரிகையுடன் ஒரு கொடியின் கீழ் இணைந்துள்ளது.

தொலைக்காட்சியின் கதையோ இன்னும் சுவாரஷ்யம். ஒரே கூரையின் கீழ் இருந்த தாம்பத்தியமில்லாத கூட்டுக்குடித்தனத்துக்குள் நடந்த குத்துவெட்டுக்கள் சொல்லி மாளாது.

இந்தக் குத்துவெட்டுக்கள் குறித்து வழமைபோல், தமிழர் பாரம்பரியப்படி மொட்டை நோட்டீஸ்கள் வெளிவந்தன. திடுக்கிடும் மர்மங்களை வெளிக்கொணரப் போவதாகக் கூறி, தனிநபர்களைக் குறி வைத்த மொட்டை நோட்டீஸ்களால் ரொறன்ரோ பேருவகை கொண்டது.

அதுவும் கொஞ்ச நாளில் அடங்கிப் போனது. ஆனாலும் புரளும் பணத்தைக் கண்டு வாயூறிய சுருட்டும் கும்பல் தன் கனவுகளை கைவிட்டு விடவில்லை.

இப்போது பத்தாண்டு கழித்து, கனடிய அரசு தான் வழங்கிய அனுமதிப் பத்திரத்தின் விதிமுறைகளுக்கு ஏற்ப நிறுவனம் செயற்படுகிறதா என்பதை மறுபரிசீலனை செய்யும் காலம் வந்து விட்டது.

பிறகென்ன, பத்திரிகையில் அறைகூவல் வெளிவந்தது. மக்கள் சொத்து தனியார் மயப்பட்டதால், அந்த அனுமதிப்பத்திரத்தை மீளவும் வழங்கக் கூடாது என கனடிய அரசுக்கு கடிதம் எழுதும்படி மக்கள் அறிவுறுத்தப்பட்டனர். மொட்டை நோட்டீஸ், மொட்டைக்கடிதங்கள் எழுதிய ஈழத்தமிழ்ப் பாரம்பரியத்தில் பலரும் கடிதங்களை அனுப்பினர். அதாவது இந்த வானொலி தங்கள் கைவசப்படாவிட்டால், மற்றவர்களுக்குக் கிடைக்கக் கூடாது என்று எதிரிக்கு சகுனம் பிழைக்க தங்கள் மூக்கை அறுத்துக் கொள்ளும் தமிழ் உணர்வில் உந்தப்பட்டு, பலரும் கனடிய அரசுக்கு ஓலைகள் அனுப்பினர்.

மறுபுறத்தில் வானொலிக்காரர்களும் தங்கள் ஆதரவுக்காரர்களிடம் கடிதங்கள் பெற்றதுடன், எதிர்ப்புக் கடிதம் அனுப்பியவர்களை அணுகி, கடிதங்களை மீளப்பெறுமாறு கேட்டுக் கொண்டார்கள் என பத்திரிகை அறிவித்தது.

வானொலி நடத்திய நிகழ்வைப் பகிஷ்கரிக்குமாறும் பிரசுரங்கள் வெளிவந்தன.

ஆதரவுக் கடிதம் கேட்ட விவகாரத்தில் ஏற்பட்ட குளறுபடியில், வானொலி நடத்திய களியாட்ட விழாவில் காட்சியகம் வைத்திருந்த நாடு கடந்த ஈழத்தினர் பாதுகாப்பு அலுவலர்களால் வெளியேற்றப்பட்ட சம்பவமும் நடந்தேறியது.

இதற்குள் நால்வர் கையொப்பமிட்டு வெளியிட்ட துண்டுப்பிரசுரம் ஒன்றில், வானொலி, உப அலை வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, விளம்பரக் கையேடு, கோவில் எல்லாமே மக்கள் சொத்து என்றும், இவற்றை நம்பிக்கை நிதியம் ஒன்றின் கீழ் கொண்டு வந்து சமூகத்திற்கு கையளிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கையும் வந்தது.

உள்வீட்டுச் சண்டை சந்திக்கு வந்ததில், எவை எவை விடுதலையின் பெயரால் சேர்க்கப்பட்ட சொத்துக்கள், யார் யார் அவற்றின் தற்போதைய சொந்தக்காரர்கள் என்ற விபரங்கள் வெளிவந்தன.

விடுதலைக்காகச் சேர்த்த பணம் தனியார்களால் சூறையாடப்பட்டு, யுத்தம் முடிந்த மூன்றாண்டுகளின் பின்னாலும் நடைபெறும் இந்த மோதல்கள் எல்லாம் தாயகத்தில் வாழும் தமிழ் மக்களின் நலனுக்கானவை அல்ல என்பதும், இந்த மோதல்களின் பின்னால் பண வருமானமே உள்ளது என்பதும் எல்லாருக்கும் தெரியும்.

ஆனால் மகாசனங்களோ வழமை போல இது குறித்துப் பேசப் பயந்து வேடிக்கை பார்த்துக் கொண்டுள்ளனர். நமது மற்றைய ஊடகங்களோ மதில் மேல் பூனைகளாக வாய் மூடி மௌனம் சாதிக்கின்றன.

இந்தக் குளறுபடிகளைக் காணும் கனடிய அரசு அனுமதியைப் பறித்துக் கொண்டாலும், எங்களுக்குக் கிடைக்காத இன்பம் யாருக்கும் கிடைக்கக் கூடாது என்ற வன்னித் தத்துவத்தின் அடிப்படையில், அது குறித்துச் சந்தோசம் அடைவதற்கு என்றே ஒரு கூட்டம் காத்திருக்கிறது.

இதையெல்லாம் பார்க்கும் போது, ‘கண்ணீர் விட்டோ வளர்த்தோம் சர்வேசா, செந்நீரால் காத்தோம், கருகத் திருவுளமோ’ என்று வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டிருக்கும் தேசியத் தலைவரைப் பார்த்துக் கேட்க வேண்டும் போலிருக்கிறது.




உங்கள் விருந்தினர் 20 பேரா? 2000 பேரா? கவலை வேண்டாம்!

iCatering
IT'S THE REAL FUSION

பல்கலாசாரச் சமையற்கலையில் பல்லாண்டு அனுபவமுள்ளவரால்
உங்கள் ஆரோக்கியத்தை முதன்மையாகக்கொண்டு வீட்டில்
தயாரிக்கப்பட்ட பல்சுவை உணவு உங்கள் வீடு தேடி வரும்!

1079 MIDLAND AVE, SCARBOROUGH

(416) 836 7760 (416) 615 1079

# ஒபாமாவின் செங்கோ(ல்)டு




சிவதாசன்

**அமெரிக்காவின் தாக்குதல் உண்மையாகவே நிறுத்தப்படுமானால் இச் சதுரங்கத்தில் வெற்றி பெற்றவர்களாக ரஷ்யா, சிரியா, ஈரான் போன்றவையும் தோல்வியுற்ற நாடுகளாக அமெரிக்கா, இஸ்ரேல், சவூதி அரேபியா, துருக்கி ஆகியனவும் வரலாற்றால் பார்க்கப்படும்.**

சிரியப் பிரச்சினையில் அமெரிக்கா முகமிழந்து போகிறதா? நிகழ்வுகள் அப்படித்தான் தெரிகின்றன.

சிரியா மீதான அமெரிக்காவின் குண்டு மழை பொழிவை எதிர்பார்த்திருந்த வேளையில் ரஷ்யா வேறு விதமான குண்டொன்றைப் போட்டிருக்கிறது. அது அமைதிக்கான குண்டு மட்டுமல்ல அமெரிக்க ஜனாதிபதியை முகமிழக்க வைக்கும் குண்டும் கூட.

“சிரியா தன்னிடமிருக்கும் நச்சுக் குண்டுகளைக் கையளிக்க வேண்டும்“ என்றும் அது நடைபெறும் பட்சத்தில் அமெரிக்கா குண்டுகளை வீசாது என்று ஜனாதிபதி ஒபாமாவின் உத்தரவாதத்தைப் பெற்றுத் தரலாமென்றும் ரஷ்யா செய்த இடைத் தரகு வெற்றி பெற்றிருக்கிறது. சிரியாவும் அமெரிக்காவும் இத் திட்டத்துக்கு இணங்கியிருக்கின்றன.

அமெரிக்க இராணுவ நடவடிக்கைக்கு அதன் நேச நாடுகள் பல ஒத்துழைப்பு வழங்கவில்லை. உலக நாடுகள் பலவும் பலத்த எதிர்ப்பைத் தெரிவிக்கின்றன. அமெரிக்க மக்கள் மத்தியிலும் அறுபது வீதத்துக்கும் மேலானோர் போருக்கு ஆதரவில்லை. ஐ.நா. சபையிலும் போருக்கு ஆதரவான தீர்மானமொன்றை நிறைவேற்றுவது சாத்தியமில்லை. ஒபாமாவின் போர்க் கூச்சலுக்கு வலுச் சேர்க்குமளவுக்கு “சிரியாவின் நச்சு ஆயுதப் பிரயோகத்திற்கான ஆதாரங்கள்“ போதுமானதாக இல்லை. இந்நிலையில் ஒபாமா முகமிழக்காமல் இப் பிரச்சினையிலிருந்து வெளியேற ஒரு பின் வாசல் தேவைப்பட்டது. ராஜாங்க செயலாளர் கெரி பத்திரிகையாளர் மத்தியில் கசிய விட்ட தகவல் தான் இன்று ஒபாமாவின் பின் வாசலைத் திறந்திருக்கிறது. கெரியின் தகவல் திட்டமிடப் பட்ட ஒன்றா அல்லது வாய் தவறிச் சொல்லப்பட்டதா? அமெரிக்காவின் வரலாறு முரண்களாற் பின்னப்பட்டது தானே.

கெரியின் தகவல்? “சிரியா நச்சு ஆயுதங்களை ஒப்படைத்தால் அமெரிக்கா தாக்குதலை மேற்கொள்ளாது“. கெரியின் தகவல் வந்த உடனே ராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் கெரி தவறுதலாகப் பேசிவிட்டார் என்கிறார். ரஷ்ய தலைவர் புட்டின் கெரியின் பேச்சை முன் வைத்து சிரியாவின் சம்மதத்தை உடனேயே பெற்று விடுகிறார். தாக்குதல் “தற்காலிக“ ஓய்வைப் பெறுகிறது.

ஆரம்பத்திலிருந்து சிரியத் தாக்குதற் திட்டம் சிரியாவின் நச்சு ஆயுதத் தாக்குதல் பற்றியதல்ல. ஈரானின் அணுவாயுத தயாரிப்பு நிலைகளை நிர்மூலமாக்குவது தான். அதனால் பலனடைபவர்கள் இஸ்ரேல், சவூதி அரேபியா, துருக்கி போன்ற நாடுகள் தான். ஈரானால் அமெரிக்காவுக்கு வரக் கூடிய பாதிப்பு இரண்டாம் மூன்றாம் நிலைகளுக்குரியதே. அப்போ ஒபாமாவின் கூச்சலுக்குக் காரணம்? இஸ்ரேலுக்குச் செய்ய வேண்டிய பதிலுபகாரம்.

ஒபாமாவின் இரண்டாம் தேர்தல் நடைபெறுவதற்கு முன் ஈரான் மீதான வலிந்த போரொன்றை ஆரம்பிக்க இஸ்ரேல் பகீரத முயற்சி எடுத்தது. ஒபாமா அதற்கு இணக்கம் தெரிவிக்க பின்னின்றபோது இஸ்ரேல் தனியாகவே ஈரான் மீதான மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல் ஒன்றுக்குத் தயாராகியது. களத்தில் இறங்கினால் அமெரிக்காவும் சேர்ந்தே இழுக்கப்படும் என்ற நம்பிக்கையுடன். ஒபாமாவுக்கு இது ஒரு இக்கட்டான கட்டம். தேர்தலைப் பாதிக்கக் கூடிய கட்டம். விளைவு, இஸ்ரேலின் நடவடிக்கை பின்போடப் பட்டது. ஒபாமா இன்னுமொரு தடவை தேர்தலுக்கு நிற்க மாட்டார். அதற்கு முன் தனது வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும். சிரியாவில் சிவப்புக் கோட்டைப் போட்டார். அவர் போட்ட சிவப்புக் கோடு அவருக்கே ஆபத்தாகியது.

அமெரிக்காவின் தாக்குதல் உண்மையாகவே நிறுத்தப்படுமானால் இச் சதுரங்கத்தில் வெற்றி பெற்றவர்களாக ரஷ்யா, சிரியா, ஈரான் போன்றவையும் தோல்வியுற்ற நாடுகளாக அமெரிக்கா, இஸ்ரேல், சவூதி அரேபியா, துருக்கி ஆகியனவும் வரலாற்றால் பார்க்கப்படும். “ஏழைகளின் தோழன்“ என்ற போர்வையுடன் வந்து அமெரிக்க ஜனநாயகத்திற்கு நற் பெயரை எடுத்துத் தந்த, “உலகில் போர்களை ஒழிப்பேன்“ என்று சூளுரைத்த ஒபாமா மீதான உலகின் கேள்வி - “ப்ரூட்டஸ், நீயுமா“ என்பதாகத்தான் இருக்கும்.

ஒபாமா is guilty by association என்பதுவே உலகின் தீர்ப்பானால் அந்த் உலகில் நானும் அடக்கம்.

WINNERS
INSURANCE AND INVESTMENT SERVICES

**பூரணஆயுட்காப்புறுதி, கொடிய நோய்க்கான காப்புறுதிக் கட்டணங்கள் மீண்டும் அதிகரிக்கின்றன.**
**குறுகியகால (TERM) காப்புறுதிக் கட்டணங்கள் என்றும் இல்லாத அளவுக்கு குறைந்துள்ளன!!**
**மேலும் தாமதிக்காமல் இன்றே உங்களுக்குத் தேவையான காப்புறுதியை பெற்றுக்கொள்ளுங்கள்!!**

**NO BODY CAN BEAT OUR RATES ON LIFE & MORTGAGE INSURANCE**

COMPARE OUR RATES - ஒப்பிட்டுபாருங்கள் எமது கட்டணங்களை

TERM (குறுகியகால காப்புறுதி) INSURANCE RATES **

| | $250,000/= | | | | $500,000/= | | | | $1,000,000/= | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| AGE | TERM 10 | | TERM 20 | | TERM 10 | | TERM 20 | | TERM 10 | | TERM 20 | |
| | MALE | FEMALE | MALE | FEMALE | MALE | FEMALE | MALE | FEMALE | MALE | FEMALE | MALE | FEMALE |
| 25 | 12.37 | 9.23 | 16.00 | 12.60 | 18.00 | 12.15 | 26.90 | 18.90 | 28.35 | 17.10 | 46.80 | 30.40 |
| 35 | 12.15 | 10.13 | 17.61 | 14.17 | 18.54 | 15.03 | 28.89 | 21.60 | 30.15 | 24.30 | 52.65 | 37.89 |
| 45 | 22.05 | 16.15 | 35.38 | 26.78 | 33.39 | 22.77 | 62.16 | 46.35 | 60.75 | 39.15 | 116.82 | 84.15 |

WHOLE LIFE ( பூரண ஆயுள் காப்புறுதி ) INSURANCE RATES**

| AGE | $100,000/= | | $250,000/= | | $500,000/= | |
|---|---|---|---|---|---|---|
| | MALE | FEMALE | MALE | FEMALE | MALE | FEMALE |
| 20 | 36.67 | 32.58 | 68.54 | 55.42 | 124.58 | 98.75 |
| 25 | 42.43 | 36.00 | 82.29 | 67.50 | 151.25 | 123.33 |
| 30 | 47.64 | 40.76 | 98.54 | 86.86 | 184.17 | 157.81 |
| 35 | 57.78 | 48.24 | 126.46 | 109.87 | 241.25 | 206.40 |
| 40 | 73.26 | 60.57 | 163.96 | 132.66 | 313.75 | 254.13 |
| 45 | 97.11 | 78.66 | 213.75 | 180.63 | | |
| 50 | 119.42 | 100.35 | 257.71 | 226.88 | | |

**NEW REVISED RATES**

20 வருடங்களில் கட்டிமுடிந்தபின்பும் இருக்கும் பூரண ஆயுள் காப்புறுதி**

| $100,000/= | | $250,000/= | | $500,000/= | |
|---|---|---|---|---|---|
| MALE | FEMALE | MALE | FEMALE | MALE | FEMALE |
| 56.63 | 48.47 | 125.21 | 106.93 | 222.79 | 178.15 |
| 65.06 | 56.21 | 148.81 | 128.83 | 268.71 | 215.56 |
| 78.91 | 69.30 | 181.76 | 158.80 | 332.06 | 282.74 |
| 90.98 | 79.74 | 221.94 | 188.35 | 416.67 | 351.45 |
| 114.03 | 94.86 | 268.50 | 227.03 | | |
| 140.94 | 115.74 | 342.23 | 279.23 | | |
| 171.27 | 140.58 | | | | |

**மேலும் மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி (85 வயது மட்டும், $300,000/= ), CRITICAL ILLNESS, DISABILITY, MEDICAL , மற்றும் பிரயாணத்துக்கான காப்புறுதிகளும் எம்மிடம் மிகவும் குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.**
**MORTGAGE** க்கான காப்புறுதிகள் **வங்கிகளிலும் பார்க்க மிகவும் குறைந்த கட்டணத்தில்** எம்மிடம் பெற்றுக்கொள்ள முடியும்.

உங்கள் முதலீட்டு திட்டங்களுக்கும் (RRSP. PENSION PLANS,TFSA), குழந்தைகளுக்கான முதலீட்டுத் திட்டங்களுக்கும் (RESP)
மேலும் உங்களது தற்போதய காப்புறுதி, PENSION PLAN போன்றவை உங்களுக்கு போதுமானதா! சிறந்ததா! என்பனபற்றிய ஆலோசனைகளுக்கும்



அழையுங்கள் **RUBAN 416 953 8036**

E:mail : winnersinsurance@bell.net
Web : winnersinsurance.com
**15 YEARS IN CANADIAN INSURANCE & INVESTMENT INDUSTRY**

Canada Life
Manulife Financial | For your future
INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
SSQ Financial Group
Empire Life
Desjardins
Sun Life Financial

** SOME CONDITIONS APPLY. ALL RATES ARE NON SMOKER RATES & SUBJECT TO CHANGE WITHOUT NOTICE. RATES ARE QUOTED AS OF 2nd. July 2013.

**சகல சிறுபான்மைக் கட்சிகளும்,,**

*மாகாண சபை முறைமையே இல்லாமல் செய்ய கங்கணம் கட்டியிருக்கும் வேளையில், வடகிழக்கு இணைப்பு என்பது சாத்தியமற்ற ஒன்றாகவே காணப்படுகிறது. ஆனால் இலங்கை ஜனாதிபதி இதய சுத்தியுடன் தமிழ் மக்களுக்கு ஒரு காத்திரமான ஜனநாயக ரீதியான அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும். அவ்வாறு கொடுக்கப்பட வேண்டுமாக இருந்தால், வடக்கும் கிழக்கும் இணைக்கப்படல் வேண்டுமென்று நினைத்து தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி மீண்டும் இணைக்க வாய்ப்புண்டு.*

*ஏற்கெனவே உள்ள மாகாண அரசுகள் குறிப்பாக கிழக்கு மாகாண அரசு தமது அதிகாரங்களை எவ்வளவு தூ ரம் பயன்படுத்தியுள்ளன?*

*இலங்கை மாகாண சபை முறை அதிகாரங்கள் குறைந்த ஒன்றாகவே காணப்படுகின்றது. இது ஒரு விடயத்தினை இரு முறை செய்யும் அமைப்பாகவே காணப்படுவதனால், வீண் செலவுகளை ஏற்படுத்தும் அமைப்பு என்று குறை கூறப்பட்டு வருகின்ற வேளையில், இம்மாகாண முறை வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு என்று அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், இன்றுவரை ஏனைய மாகாணங்களில் நடைபெற்றுக்கொண்டே வருகின்றது.*

*2010ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின் ஊடாக கிழக்க மாகாண சபை செயற்படத் தொடங்கி, அதன் 5 வருட ஆயுள் முடிவதற்கு முன்னரே 4 வருடங்களின் பின்னர் கலைக்கப்பட்டு மீண்டும் தேர்தல் நடத்தப்பட்டு இரண்டாவது மாகாண சபை நடைமுறையில் இருக்கின்றது.*

*இக் கிழக்கு மாகாண சபையைப் பொறுத்தவரையில், தன்னை ஸ்தீரப்படுத்திக் கொள்வதிலேயே முக்கிய கவனம் செலுத்தி வருகின்றது. ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட முன்னாள் இராணுவத் தளபதிகளில் ஒருவரே இங்கும் ஆளுநராகக் காணப்படுவதுடன், சகல விதமான செயற்பாடுகளுக்கும் அவரின் அனுமதி பெறவேண்டியுள்ளது.*

*அவரின் அனுசரணையுடனே சகல சட்ட நிர்வாக, உள்ளாக கட்டமைப்பு வேளைகள் யாவும் செய்யப்படுகின்றன. அத்துடன் அறிவும், ஆற்றலும் குறைந்த அரசியல் முன் அனுபவம் குறைந்தவர்களை நிறையவே அம்மாகாண சபை கொண்டிருந்ததனால், தன்னைச் சூழ்ந்திருந்த மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினை பூர்த்தி செய்வதில் கடினமான நகர்வுகளையே ஆரம்ப காலத்தில் செய்ய வேண்டியதாயிற்று.*

*இன்று, இரண்டாவது மாகாண சபை கிழக்கு மாகாணத்தில் காணப்பட்ட போதிலும், அதே நிலைமைகள்தான் தொடர்கின்றது. மத்திய அரசாங்கத்தின் இன்னொரு சிறு களமாகவே இம்மாகாணம் காணப்படுகின்றது.*

*வட மாகாணத்தில் எவ்வாறான அரசாங்கம் அமைய வேண்டும் என நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?*

*தமிழர்களின் தாயகம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் வளர்க்கப்பட்ட ஆயுதப் போராட்டம் முடிவடைந்த நிலையில், பல்வேறு இழுபறிக்கும், போராட்டத்திற்கும் மத்தியில் இவ்வடக்கு மாகாண சபை நடைபெறுகின்றது. இது ஒரு வெறுமனே ஏனைய மாகாணங்களில் நடைபெறும் தேர்தலைப் போன்று அல்லது பாராளுமன்றத்திற்கு நடைபெறும் தேர்தலைவிட முக்கியமானதாகும்.*

*30 வருட அழிவுகளை ஒட்டுமொத்தமாக சர்வதேசத்திற்குக் காட்ட தமிழ் மக்களுக்கு கிடைத்திருக்கும் ஒரு இறுதி ஆயுதமாகும். இம்மாகாண சபை எதனை சாதிக்கப் போகின்றது என்பதெல்லாம் இங்குள்ள பிரச்சினை, இம்மாகாணம் எதை தமிழ் மக்களுக்காக பேசப் போகின்றது. உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் முக்கியமாக அவதானிக்கப்படும் தேர்தலாக இத்தேர்தல் மாறிவிட்டது.*

*ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச சர்வதேச சக்திகளின் வேண்டுகோளுக்க இணங்கவும், இலங்கை அரசாங்கத்திற்கு சர்வதேச நீதியில் ஏற்பட்டிருக்கும் யுத்த காலத்தில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக குற்றச்சாட்டுகளும், பொது நலவாய நாடுகள் மகாநாட்டினை தடை இன்றி நடாத்துவதற்கும் தேவையான ஒரு அமைப்பாகவே வடமாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் கையாளுகின்றது.*

*மேலும், இந்தியாவின் அண்மைக்கால தமிழ் மக்களுக்கான தீர்வு காண வேண்டும் என்ற இலங்கை அரசாங்கத்திற்கான அழுத்தமும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிற்கு வடக்கில் காணப்படும் ஜனநாயக ரீதியான அரசியல் வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஒரு கருவியாகவும் நோக்குகின்றது.*

*வட மாகாண சபைத் தேர்தலை நடாத்துவதன் ஊடாக, இலங்கை அரசாங்கம் இராஜ தந்திர ரீதியாக ஏனைய நாடுகளிடம் நட்புறவை வளர்ப்பதுடன், பொருளாதார நலன்களையும் பெறக்கூடிய வாய்ப்பு அதிகமாகவே காணப்படுகின்றது. இத்துடன் யுத்தத்தின் பின்னர் இந்தியாவுடன் ஏற்பட்டுள்ள விரிசலை தவிர்த்துக் கொள்ளவும் சாதகமாகப் பயன்படுத்தவுள்ளது.*

*ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தனக்கு ஏனைய மாகாணங்களில் காணப்படுவது போன்று வடக்கிலும் ஜனநாயக ரீதியாக ஒரு அரசியல் வாழ் சமநிலையை ஏற்படுத்துவதற்கும், இதுவரை இருந்துவந்த அதிகாரப் பகிர்வு பற்றிய கேள்விகளுக்கு பதிலளிப்பதாகவும் அமையவிருக்கின்றது.*

*ஆகவேதான், இம்மாகாண சபை தேர்தல் அறிவிக்கப்பட்ட உடனேயே ஜனாதிபதியின் சகோதரர் பசில் ராஜபக்ச செப்டம்பர் 22ம் திகதியுடன் வடக்கின் வசந்தம் என்னும் திட்டத்தை நிறுத்திவிடுவேன் என எச்சரித்துள்ளார். இவ்வாறாக பொருளாதாரத் தடைகள், அபிவிருத்தித் தடைகள் என வடக்கு மக்களுக்கு மீண்டும் பாதிப்புகளை ஏற்படுத்துவோம் என அரசாங்கம் எச்சரிக்கும் நிலையிலும், தமிழ் மக்கள் தங்கள் 30 வருட காலப் போராட்டத்தின் மாற்று அரசியல் தேவைக்கான மற்றுமொரு சந்தர்ப்பமாக இவ்வடமாகாண சபைத் தேர்தலை நோக்கவேண்டும்.*

*வட மாகாணத்தில் காணப்படுகின்ற இராணுவ முகாம்களை அகற்றுவது மாத்திரமல்ல, அங்கு ஒரு ஊடகச் சுதந்திரத்தையும், மனித உரிமையைப் பேணத்தக்க வகையில் சகல மக்களும் சமமாகப் பேணக்கூடிய ஒரு சுய ஆட்சியை ஏற்படுத்த கிடைத்திருககும் ஒரு மாபெரும் சந்தர்ப்பமாகும்.*

*தமிழ் மக்கள் தங்களின் வாக்குகளினால் தங்கள் அரசியல் சுயநிர்ணய உரிமையை நிலைநிறுத்தக் கூடிய ஒரு அரசாங்கத்தை அமைக்கவில்லையென்றால், ஜனாதிபதி*

மறுபக்கம் பார்க்க...


Heroes CATERING
Take Out & Catering
GTA SQUARE MALL
2ND FLOOR
Private Dining is available for parties up to 50 people
416-286-9334 | 416-318-9866
5215 FINCH AVE UNIT 232 | GTA SQUARE | SCARBOROUGH ON.

BALACHANDRAN MUTHAIAH
Professional Corporation
Balachandran Muthaiah LL.B.
Barrister, Solicitor & Notary Public
Real Estate Law, (Residential/Commercial), Business Law, Family Law, Immigration Law, Estates Law, Last Will, Affidavits, Probate, Translations, etc.
2401 Eglinton Ave. E. Suite 300, Toronto, ON M1K 2M5
Ph: 416.755.5544, Fax: 416.755.5594
e-mail: balalawoffice@gmail.com

Keeth Appliance & Heating, Air conditioning Services
Central Air coditioning, furnace repair and installation.
Fridge/Washers/Dryers, Dishwashers/Stoves
Certified technicians! Reasonable rates! Reliable service!
Keeth Repair Technician
647.768.4143

JUDE ANTHONYPILLAI PROFESSIONAL CORPORATION
JUDE ANTHONYPILLAI LL.B.
Barrister, Solicitor & Notary Public
Tel: 416.332.8547
Fax: 416.332.8379
Email: judelawoffice@rogers.com
Your questions answered! Your options explained!
2390 Eglinton Ave.East, Suite 250, Scarborough, ON. M1K 2P5


LOC LIBERTY ORTHODONTIC CENTRE
Dr. Arun Rajasekaran
BSc, DDS, MS, CertOrtho, FRCD (Canada)
Certified Specialist in Orthodontics
We offer Free Consultations
Practice Limited to Orthodontics
No Refferal Needed from Your Dentist
Evening and Weekend Appointments Available

Before... After...
905.948.8556
3601 Highway 7 East, Unit 501, Markham, ON, L3R 0M3
We are located in the HSBC building
Free underground parking available
Creating Beautiful Smiles For Tomorrow!

மகிந்த ராஜபக்ச தனது அரசியலுடன் ஒத்துழைத்துப் போகக்கூடிய, தனது அரசாங்கத்தின் மந்திரியாக உள்ளவர்களையே முதலமைச்சராக வட மாகாண சபைக்கு கொண்டு வந்தால் மீண்டும் இத்தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற வாய்ப்புகள் அற்ற ஒரு நிலைமையே தோன்றும். அத்துடன், ஜனாதிபதி மகிந்த ராஜ பக்சவின் அரசாங்கம் வடக்கில் அமைந்தால், அவர்களுக்குக் கிடைக்கும் போனஸ் மேலதிக ஆசனங்களைப் பயன்படுத்தி தன்னுடன் இருக்கும் முன்னை நாள் போராளிகளை மாகாண சபைக்குள் உள் கொண்டுவரவும் வாய்ப்பாக அமைந்துவிடும். ஆகவே, தமிழ் மக்கள் தாங்கள் மிகவும் நிதானமாக சிந்தித்து, தங்களுக்குக் கிடைத்திருக்கும் ஒரு இறுதி வாய்ப்பாக நினைத்து, தங்களது உரிமைகளை மீள நிர்ணயித்துக் கொள்ளக்கூடிய ஒரு அரசாங்கத்தினை அமைத்தல் அவர்களின் கடந்த கால துன்பங்களுக்கு பரிகாரமாக அமையும்.

*வட மாகாணத்தின் முதலாவது அரசுக்குரிய உடனடியானதும் முக்கியமானதுமான பணி எது என நீங்கள் கருதுகிறீர்கள்?*

இம்மாகாண சபையின் பணிகள் எதுவாக அமைய வேண்டுமென ஏற்கெனவே கூறியுள்ளேன். இருப்பினும் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இன்று சர்வதேச சமூகம் பல்வேறு அழுத்தங்களை கொடுத்துக்கொண்டிருக்கின்றது. அத்துடன் அரசாங்கம் பல்வேறு ஆணைக் குழுக்களை அமைத்து, அதனூடாக அறிக்கைகளையும் கொண்டுவந்துள்ளது. எதிர்காலத்தில் இம்மாகாண சபை அவ்வறிக்கைகளை நடைமுறைப்படுத்த உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் கூடுதலான அழுத்தங்களைக் கொடுப்பதுடன், இவ்வட கிழக்குப் பிராந்தியத்தில் இருந்து இன்று உலகம் பூராகவும் சிதறி வாழும் புலம்பெயர் தமிழர்களின் ஆதரவை முழுமையாக பயன்படுத்தி, யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள உள்ளக கட்டமைப்புக்கள் மாத்திரமின்றி, வடக்கில் மாத்திரம் 50,000க்கும் மேற்பட்ட விதவைகள் காணப்படுகின்றனர். அவர்களின் மறுவாழ்வும், அவர்களின் சிறார்களின் எதிர்காலத்திலும் கூடுதலான கவனம் செலுத்த வேண்டியுள்ளது. அவ்வாறே துரிதமீள் குடியேற்றம், இடம்பெயர்ந்த மக்கள் சேமநலன், இளைஞர் யுவதிகளுக்கான வேலை வாய்ப்பு, காணிப் பகிர்வு, மீனவர் பிரச்சினை போன்ற பல பிரச்சினை முதன்மைப்படுத்தி தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதுடன், அதன் மூலம் தேசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குமான முயற்சிகளிலும் ஈடுபட வேண்டியுள்ளது.

ஆகவே, குறைந்தபட்ட அதிகாரங்களைக் கொண்டுள்ள இம்மாகாண சபை முறை வடமாகாணத்தில் நடைமுறைக்கு வந்தாலும், தமிழர் தாயகத்தின் உரிமைப் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவமளித்து சுதந்திரமானதும், நீடித்து நிலைத்து நிற்கக்கூடிய ஒரு வெளிப்படைத் தன்மை வாய்ந்த ஒரு மாகாண சபை அமைய வேண்டுமென எதிர்பார்க்கின்றேன்.

# ஸ்மார்ட் கடிகாரம்

## மணிக்கட்டில் உலகத்தை அடக்கும் சம்சுங்கின் சாதனை



முதலில் பெட்டிக் கணணி மூலம் ஒரு அறையில் உலகத்தை கொண்டு வந்தார்கள். பின்பு மடிக்கணனி மூலம் வீதியெங்கும் உலகத்தை கொண்டுவந்தார்கள். பின்பு ஸ்மார்ட் போன் மூலம் உள்ளம் கையில் உலகத்தை கொண்டு வந்தார்கள். தற்போது மணிக்கட்டில் உலகை கொண்டு வந்து நேரத்துடன், நயத்தையும் அடக்கிவிட்டார்கள், ஆமாம் சம்சுங் நிறுவனம் ஸ்மார்ட் கடிகாரம் ஒன்றை வெளியுட்டுள்ளார்கள். இது ஒரு ஸ்மார்ட் போன் செய்யும் சகல வேலையையும் செய்கின்றது. தொலைபேசி என்ன, ஈமெயில் என்ன, இணையத்தளம் என்ன, புகைப்படம் என்ன, வீடியோப் படம் என்ன எல்லாவற்றையும் உங்கள் மணிக்கட்டில் கொண்டு வந்து நிறுத்தியுள்ளது. நீண்ட நாட்களாக எதிர்ப்பார்க்கப்பட்டு வந்த கெலக்ஸி கியர் ஸ்மார்ட் (galaxy gear smartwatch) கடிகாரத்தினை சம்சுங் செப்ரம்பர் 09 ல் அறிமுகப்படுத்தியது. ஜேர்மனியில் பெர்லினிலில் நடைபெற்ற ஐ.எப்.ஏ. மாநாட்டிலேயே இக்கடிகாரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அண்ட்ரோய்ட் மூலம் இயங்கும் மேற்படி ஸ்மார்ட் கடிகாரமானது 1.6 அங்குல சுப்பர் எமோலெட் திரையைக் கொண்டுள்ளதுடன் 25 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக செயற்படக்கூடிய பட்டரியையும் கொண்டுள்ளது. 800 MHz புரசசர், 512 எம்.பி. றாம் 4 ஜி.பி. உள்ளக நினைவகம், 1.9 மெகாபிக்ஸல் கமரா ஆகியவற்றையும் மேற்படி கடிகாரம் கொண்டுள்ளது. அமெரிக்காவில் இதன் விலை 299 அமெரிக்க டொலர்களாகும். எதிர்வரும் 25 ஆம் திகதி இது விற்பனைக்கு வரவுள்ளது. பிறகென்ன உங்கள் இனியவர்களுக்கு இனிமேல் 1980 களில் பரிசளித்த கடிகாரத்தை இனிமேலும் தொடரலாம். நேரம் பார்த்து நேரத்தையும், உலகத்தையும் காட்டும் பரிசை உங்கள் இனியவருக்கு பரிசளிக்க தயார் ஆகுங்கள்.






# 100 ஆண்டுகளின் பின்பு சூரியனை தமது கிராமத்திலேயே தரிசிக்கப்போகும் மக்கள்

நிழலில் அருமை வெயிலில் தெரியும் என்பார்கள். ஆனால் நோர்வேயிலுள்ள என்ற ருஜுகான் நகரத்து மக்கள் வெயிலின் அருமை நிழலில் தெரியும் என்று கடந்த 100 வருடங்களாக கூறி வருகின்றனர். நோர்வேயில் டெலிமார்க் பகுதியில் அமைந்திருக்கும் தொழிற்பேட்டை நகரமான ருஜுகான் (Rjukan), குறுகலான பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது. எனவே, இங்கு சூரிய வெளிச்சம் இயற்கையாக விழுவதற்கு வாய்ப்பே இல்லை. சூரிய ஒளியே பட முடியாத பள்ளத்தாக்கில் வாழ்ந்துவரும் இந்த மக்கள் சூரிய ஒளியேபடாமல் வாழ்ந்து வருகின்றார்கள். குளிர் காலங்களில் சூரிய ஒளியை அதுதான் சூரிய நமஸ்காரம் இற்காக கேபிள் காரில் சூரிய ஒளி விழும் பிரதேசத்தை நோக்கி சென்று சூரிய ஒளியை பார்த்து வருவதுண்டு. இப்படியே எத்தனை நாட்கள்தான் காலத்தை ஓட்டுவது. எனவே எந்திரவியலாளர்கள் அறைபோட்டு சிந்தித்தார்கள், மாற்று வழியும் கண்டார்கள் இராட்சத கண்ணாடிகள் மூலம் இந்தக் கிராமத்திற்கு சூரிய ஒளியை திசை திருப்பி சதா காலமும் சூரிய ஒளி கிடைக்கும் வண்ணம் செய்து விட்டார்கள். அதுதான் உங்கள் இளமைக் காலங்களில் உங்கள் இனியவர்களின் கவனத்தை திருப்ப கண்டியைப் பாவித்து முகத்தில் கூச செய்தீர்களே! அதன் ஒரு பிரமாண்ட வடிவம்தான் இது. ஒரு வேளை இந்த விஞ்ஞானிகளுக்கெல்லாம் உங்கள் கண்கூசவைக்கும் இந்த வித்தைதான் முன்னோடியாக அமைந்தது என்று ரீல்விட்டாலும் விடுவீர்கள் போல் இருக்கு. என்னவோ உலகில் சூரியன் அஸ்தமிக்காத நாடு என்று பெயர்வாங்கிய பிரித்தானியாவிற்கு அருகில் சூரியனையே காணத ஒரு ஊர் இருந்திருக்கின்றதா என்று பிரமிப்பாக இருக்கின்றதா? ஒரு வாட்டி நோர்வேயிற்கு பயணம் போய்விட்டு வாருங்கள் எல்லாம் அறிந்துவிடலாம். ஆனால் உங்கள் குழந்தைகளை சரியாக பராமரியுங்கள் அங்கே விசிட் செய்யும் போது. அன்றேல் நோர்வே அரசு தமது சிறுவர காப்பகத்தில் உங்கள் பிள்ளைகளை மீளமுடியாமல் இணைத்துவிடுவார்கள்



# இஸ்லாமியப் பெண்களின் "HIJAB"

## நமு பொன்னம்பலம்

அண்மைக்காலமாக இஸ்லாமியப் பெண்களின் தலை முடியை மறைக்கும் "HIJAB" என்கின்ற மொட்டாக்கு மேற்குலக அரசியலை ஆழ்கின்றது.பிரெஞ்சு அரசியலை அந்த சமூகத்தின் அரசியல் நீரோட்டத்தை கலக்கிய இந்த விவகாரம் தற்போது கனடிய மண்ணை எட்டிப் பார்க்கின்றது .

மொன்றியல் மாநகரும் அதன் மாநிலமும் இந்த KIJAB விவகாரத்துக்கு விதிவிலக்கு அல்ல. தற்போது "HIJAB" க்கு எதிராக தடையை கொண்டு வரலாமா? என மாநிலங்கள் அவையில் விவாதம்.

எனது வேலைத் தளத்தில் மதிய நேர உரையாடலில் பல இனப் பெண்கள் அதிகம் இருந்த இடத்தில் இந்த விவகாரத்தைப் போட்டு உடைத்தேன். விளைவு சுவாரசியமாய் இருந்தது. கனடாவில் பிறந்த பஞ்சாபியப் பெண் இவ்வாறு கூறுகிறாள், " நான் பஞ்சாபி சீக்கிய மதம் ஆனால் எனது மதம் கூட தலையை மூடுவதை ஊக்குவிக்கின்றது. இதற்கு மேலாக நான் ஒரு பெண் எது அணிவது என்பதை நானே தீர்மானிப்பேன்".

ஈரானிய நாட்டைச் சேர்ந்த நங்கை, " நான் முஸ்லிம் அல்ல, ஆனால் எனது கலாசார மரபாக நான் மொட்டாக்கு அணிய நான் விரும்பினால் அரசு சட்டத்தின் மூலம் அடக்க முடியாது".

பங்களாதேச பெண்மணி ஒருத்தி," நான் முன்னர் மொட்டாக்கு அணிந்தவள் இல்லை. ஆனால் தற்போது அதை அணிகின்றேன். அது எனது தெரிவு. அரசு தலையிடுவதை நான் விரும்பவில்லை".

இந்திய பெண்மணி ஒருத்தி, "நான் இந்திய இந்து, என் மதம் கூட அடிப்படையில் தலையை மூடுவதை ஊக்குவித்தது. இது சட்டமானால் எதிர் காலத்தில் ஆண்களும் எமது குழந்தைகளும் கூட கலாச்சார உடைகளை பொது இடங்களில் அணிவதை தடுக்கச் சட்டம் வருமா?". அவளது பதிலே கேள்வியாக எதிர் ஒலித்தது.

ஆம்! நமது சமுகத்தின் கலாச்சார வரையறைக்குள், சமுகத்தின் பெண்கள் சார்ந்த உரிமைக்குள், பெண்கள் எவ்வாறு உடை அணியலாம் என்கின்றதை தீர்மானிக்கும் வரையறையை சட்டத்திடம் கையளிப்பது தவாறனது.

இதனை முழுமையாக எதிர்த்து நிற்க நாம் தனியே பெண் ஆகவோ, அல்லது இஸ்லாமியர் ஆகவோ இருக்கத் தேவை இல்லை. மாறாக நாம் நல்ல மனித நேயர்களாக, அனைத்து மனிதர்களின் அபிலாசைகளை மதிக்கத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும்.

HIJAB அரசியல் ஆவது எதிர்க்கப் பட வேண்டிய ஒன்று. பாதிக்கப்படும் ஒவ்வொரு சமூக வடிவங்களுக்குமாய் நாம் குரல் கொடுப்போம்.






# இங்கிலாந்தில் புது வழக்கம்



மைக்கேல் கிளாக், அலிஸ்டெயர் குக்

இங்கிலாந்தில் சில வருடங்கள் வாசித்ததாலோ என்னவோ இடைக்கிடை அங்கிருக்கும் பழைய நண்பர்களுக்கு தொ லைபேசியில் அழைத்து தொல்லை கொடுப்பது எனது வழக்கம். நான் கனடா வந்து இருபத்தி ஐந்துவருடங்கள் ஆகியும் இங்கிலாந்தில் இருக்கும் நண்பர்கள் போல் கனடாவில் ஏனோ அமையவில்லை. உலக புதினங்கள் தொடங்கி ஊர் புதினங்கள் வரை ஒரே அலைவரிசையில் உரையாட எப்பவும் இங்கிலாந்திற்குத்தான் தொலைபேசி அழைக்க வேண்டி இருக்கும் .அதுவும் குறிப்பாக கிரிக்கெட் பற்றி எனக்கு மிக பிடித்த வர்ணணையாளர்கள் TONY GREIG, GEOFF BOYCOTT லெவலுக்கு புள்ளிவிபரங்களுடன் அலசி ஆராய அங்கிருக்கும் சில நண்பர்களை கேட்டுத்தான்.

இங்கிலாந்து நாட்டில் வசிக்கும் எம்மவர் பலர் பிரிட்டிஷ்காரர்களின் அந்த பாரம்பரியம் காக்கும் கடமைகளில் தாமும் இறங்கிவிட்டதால் என்னுடன் முரண்பாடும் இடைக்கிடை வரும். அவர்களுக்கு அதை இரத்தத்தில் கலக்க வைத்த பெருமை பிரிட்டிஷ் ஊடகங்களையே சாரும்.

போன மாதமும் இதுதான் நடந்தது. நான் நண்பனை தொலைபேசியில் அழைக்க, நாட்டில் எவ்வளவோ முக்கிய செய்திகள் இருக்க அவன்,

மச்சான் ASHES தொடங்கிவிட்டது. இரண்டாவது டெஸ்ட் லோட்சில பார்க்க டிக்கெட் வாங்கி வைத்திருக்கின்றேன். முதல் மாட்ச்சில் பெரிய விடயமே ASHTON AGAR இன் 98 ரன்கள் தான். அவன் யார் தெரியுமோ? அவனது தாயார் இலங்கை தகப்பன் ஆஸி . இடது கை சுழல் பந்து வீச்சாளர். பதினோராவது இடத்தில் துடுப்பாட போய் 98 ரன்கள் அடித்து உலக சாதனை ஏற்படுத்தியுள்ளார் என்றான் .

மேற்கிந்திய தீவுகளில் நடக்கும் முத்தரப்பு 50 ஓவர் போட்டிகளில் டோனியின் தனிநபர் சாகசங்கள் பற்றி கதைத்தாலாவது ஆர்வமாக கேட்கலாம், அதுவும் இலங்கையுடன் நடந்த இறுதி ஆட்டத்தில் அந்த கடைசி பந்து சிக்ஸருடன் மாட்சை முடித்த அழகு பற்றி மணிக்கணக்கில் கதைக்கலாம் அதைவிட்டு இப்போ எவனும் பார்க்காத ஐந்து நாட்கள் நடக்கும் டெஸ்ட் மாட்ச் பற்றி கதைக்கின்றான் .இந்த நாளில் எவனுக்கு டெஸ்ட் மாட்ச் பார்க்க பொறுமையிருக்கு. ஐந்து நாட்கள் நடந்த கிரிக்கெட் மாட்ச் ஐம்பது ஓவர்களாகி இப்ப இருபது ஓவர்களில் வந்து நிற்குது .

நான் பெரிதாக டெஸ்ட் மாட்ச் இப்போ பார்ப்பதில்லை என்றேன்

நானும் தான், ஆனால் ASHES என்றால் அது ஒரு தனித்தன்மை வாய்ந்தது, இந்த முறை ASHES மீண்டும் இங்கிலாந்து தக்க வைக்க வேண்டும், கட்டாயம் தக்க வைப்பார்கள், எங்கட (இங்கிலாந்து) அந்த மாதிரி டீம் மச்சான் .

மற்றது கேட் மீடில்டன் பிள்ளை பெறுவிற்கு ஆசுப்பதிரியில் இருக்கும் போது ஒரு இருபது பவுண்சிற்கு பெடியன் என்று பெட் கட்டி கொஞ்ச காசு வென்றேன் என்று சொல்ல நான் கடுப்பேறிBYE என்று தொலைபேசியை வைத்துவிட்டேன் .

மச்சான் லோட்சில டெஸ்ட் மாட்ச் பார்க்க டிக்கெட் வாங்கி வைத்திருக்கின்றார். நானும் LORDS மைதானத்தில் ASHES பார்க்க போன ஆள்தான். அந்த அனுபவமே ஒரு தனி .

வெள்ளைகாரன் தனது பாரம்பரியத்தை எப்படி கட்டி காப்பாற்றுகின்றான் என்று கண்ணால் கண்டு உணர்ந்த நாள் அது. இளவயதினரில் இருந்து பென்சன் எடுத்தவர்கள் வரை அவர்கள் விதம் விதமாக, சிலர் தமக்கு பிடித்த விளையாட்டு வீரர்கள் போல உடுப்பு உடுக்கும் விதமே அழகாக நேர்த்தியாக இருக்கும். மாட்ச் தொடங்க குண்டூசி போட்டாலும் சத்தம் கேட்கும் நிசப்தம். ஒவ்வொரு பந்து வீச்சு முடியவும் ஆரவாரிப்பு. நல்ல பந்து, நல்ல மாட்டையடி அல்லது நல்ல தடுப்பு என்றால் ஒரே குரலில் உற்சாகம் .

பியர் வேறு அருந்திக்கொண்டு அவர்கள் மாட்சை ரசிக்கும் விதத்தையே பார்த்துக் கொண்டு இருக்கலாம் .முடிவு நேரம் நெருங்க எல்லோருமாக தமது நாட்டிற்கே உரித்தான பாடலை ஒருமித்து பாட தொடங்குவார்கள், மைதானம் எங்கும் அது எதிரொலித்து முழு பார்வையாளர்களையும் அது மெய் சிலிர்க்க வைக்கும். இந்த ஒற்றுமை, நாட்டுபற்று, விளையாட்டில் உள்ள ஆர்வம் இவை அனைத்தும் தான் இன்று வரை அவர்கள் பாரம்பரியத்தை கட்டி காத்து உலகையே வியக்க வைக்கின்றது என்று எண்ணத் தோன்றும்

ASHES என்ற பெயர் வந்ததே சற்று சுவாரஸ்யமான கதைதான் . 1882 ஆண்டு லண்டன் ஓவல் மைதானத்தில் ஆஸிஅணி இங்கிலாந்து அணியை முதன் முதன் அவர்கள் மண்ணில் தோற்கடித்தது .இதை நக்கலடித்து இங்கிலாந்து பத்திரிகை ஒன்று (SPORTING TIME ) இப்படித்தான் எழுதியது.

In Affectionate Remembrance of ENGLISH CRICKET which died at the Oval on 29th AUGUST 1882, Deeply lamented by a large circle of sorrowing friends and acquaintances R.I.P.

N.B.—The body will be cremated and the ashes taken to Australia.

இங்கிலாந்து கிரிக்கெட் செத்து போச்சு, அதை எரித்து அதன் சாம்பலை ஆஸி அணியினர் தமது நாட்டிற்கு எடுத்து போகின்றார்கள்.

அடுத்த முறை இங்கிலாந்து அணி ஆஸிக்கு கிரிக்கெட் விளையாட போகும் போது இங்கிலாந்து கிரிக்கெட் அணி காப்டன் IVO BLIGH ஆஸி தனது நாட்டிற்கு எடுத்துச்சென்ற அந்த இங்கிலாந்தின் கிரிக்கெட் சாம்பலை தான் மீட்டு மீண்டும் இங்கிலாந்து கொண்டுவருவேன் என சுளுரைத்தாராம்.

அவர் சொன்னது போலவே ஆஸியில் நடந்த மூன்று ஆட்டங்களில் இரண்டில் இங்கிலாந்து வெற்றி பெற்றது .இந்த போட்டிகளின் முடிவில் மெர்ல்போனை சேர்ந்த சில பெண்கள் இங்கிலாந்து காப்டன் IVO BLIGH இற்கு கிரிக்கெட் விக்கேட்டுக்களின் மேல் வைக்கும் பெயில்சை எரித்து ஒரு டப்பாவில் போட்டு பரிசாக கொடுத்தார்களாம் ,இதில் வேடிக்கை என்னவென்றால் அந்த பெண்களில் ஒருவரைத்தான் (FLORENCY MORPHY) இங்கிலாந்து காப்டன் IVO BLIGH பின்னர் மணம் புரிந்தார். இதன் பின் ஆஸி - இங்கிலாந்து ஆட்டங்கள் ASHES ஐ யார் தக்க வைப்பது என்று உருவாகி விட்டது .

1882 தொடக்கம் 2013 வரை இரு அணிகளும் இதுவரை மொத்தம் 134 SERIES விளையாடியிருக்கின்றார்கள், இம்முறை இங்கிலாந்து வென்ற தொடர் இரு அணிகளையும் தலா 67 ஆட்டங்கள் என்ற கணக்கில் சமநிலைக்கு கொண்டுவந்துள்ளது. மாட்சுகள் என்று பார்த்தால் ஆஸி 123 ஆட்டங்களிலும் இங்கிலாந்து 103 ஆட்டங்களிலும் வெற்றி பெற்றுள்ளார்கள். 89 ஆட்டங்கள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளன.

2013 ASHES ஐ இங்கிலாந்து 3-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. ஆஸி இரு ஆட்டங்கள் வெல்ல கூடிய சந்தர்ப்பங்கள் இருந்தும் கடைசியில் சொதப்பிவிட்டார்கள். இந்த ஆட்ட தொடரில் இங்கிலாந்தை சேர்ந்த IAN BELL மூன்று முறை சதங்கள் அடித்ததுடன் ஆகக்கூடியதாக 562 ரன்கள் எடுத்திருந்தார். ஆஸி சார்பில் SHANE WATSON மொத்த ரன்கள் 418 எடுத்திருந்தார் .

பந்து வீச்சில் ஆகக்கூடிய விக்கெட்டுக்களை (26) இங்கிலாந்தை சேர்ந்த சுழல் பந்து வீச்சாளர் GRAEME SWANN எடுத்திருந்தார். ஆஸி சார்பில் வேக பந்து வீச்சாளர் RYAN HARRIS 24 விக்கெட்டுகளை எடுத்தார் .

இத்தொடர் முடிய நடைபெற்ற இருபது இருபது ஓவர்கள் ஆட்டத்தில் இரு அணிகளும் தலா ஒரு ஆட்டத்தில் வெற்றி பெற்றன .இதில் முதலாவது போட்டியில் ஆசியை சேர்ந்த AARON FINCH 156 ரன்களை அடித்து உலக சாதனை ஒன்றை நிலை நாட்டினார்.

அடுத்து இந்த இரு அணிகளும் ஐந்து ஐம்பது ஓவர்கள் ஆட்டங்கள் ஆட இருக்கின்றார்கள் . இங்கிலாந்தின் கால நிலை எத்தனை ஆட்டங்களை குழப்பபோகின்றது என்று அடுத்த முறை பார்ப்போம் .

-பரதன்-




இன்றைய உலக புதிய உதைபந்தாட்ட நாயகன். உதைப்பந்தாட்ட வரலாற்றில் அதிக பணம் கொடுத்து வாங்கப்பட்ட வீரர் இன்றைய நிலைக்கு இவர்தான். CRISTIANO RONALDO வை 94 MILLION EURO கொடுத்து வாங்கிய அதே REAL MADRID அணிதான் இவரை 100 MILLION EURO விற்கு வாங்கியுள்ளது .

வேல்ஸ் நாட்டை பிறப்பிடமாக கொண்ட பேல் 2006 ஆம் ஆண்டு இங்கிலாந்து முதல்தர அணி சவுத்தாம்ரனில் ஆட்டத்தை தொடங்கிய இவர் 2007 ஆம் ஆண்டு ஏழு மில்லியன் பவுண்சிற்கு TOTTANHAM HOT SPURS ஆல் வாங்கப்பட்டார். ஸ்பேர்ஸ் அணிக்காக 146 ஆட்டங்கள் ஆடி 42 கோல்கள் அடித்த நிலையில் தான் இந்த அணி மாற்றம் 77 மில்லியன் பவுன்சிற்கு நடைபெற்றுள்ளது .

வேகம், திடகாத்திரம், இடக்காலலும் விளையாடும் திறமை, குறுக்காக பந்தை அடிக்கும் வலு என அனைத்தும் சேர்ந்த இவர் ஒரு உதைப்பந்தாட்ட ஆட்டத்தை ஆளுமை செய்பவராக திகழ்கின்றார், இதனால் தான் BALE க்கு இந்த விலைக்கு கொடுத்து REAL MADRID அணி வாங்கியிருக்கின்றது .

இந்த வருடம் இவரின் ஆட்டத்தை நாங்களும் பார்த்து மகிழ்ந்து அவரையும் வாழ்த்துவோம் .

# வம்பில் மாட்டிய சிம்பு



சிம்பு ஒழுங்காய் ஒன்றை பிடித்து மாலையை போட்டு கையை பிடிப்பம் என்றால் பழசுகளை கிளறி உள்ளதை கெடுத்துவிட ஒரு கூட்டமே பின்னால் அலையுது. சிம்புவிற்கு ஹன்சிகாவுடன் இப்போ இரண்டு படங்கள், அப்போ உண்டான நெருக்கம் காதலாகி பின் சிம்புவின் பிறந்தநாளுக்கு பெரிய கேக்கும் வெட்டி, பாட்டியும் போட்டு தம் காதலையும் திருவாளர்கள் பப்ளிகுகளுக்கு அறிவித்தார்கள். டி ஆர் கூட தாடியை தடவியபடி சம்மதம் தெரிவித்த நிலையில் ஆளாளுக்கு ஹன்சிகாவுக்கு போன் போட்டு வாழ்த்து தெரிவிப்பது மாதிரி, சிம்புவைபற்றி உனக்கு தெரியாதா? என்ற குண்டையும் கையோடு போட்டு விட்டார்கள். சிம்பு தன்னைதான் இப்படி விழுந்து விழுந்து காதலிக்கின்றார் என்று நினைத்திருந்த ஹன்சிகா சிம்புவின் பழைய சுயம்வர கதைகள் கேட்டு தொந்து நூடில்ஸ் ஆகி விட்டாராம்.

சிம்புவிற்கு இருக்கும் வசதிக்கு இனி அடுத்த வலையை யாரிடம் வீசப்போகின்றார், அகப்படபோவது யார் என்பதுதான் இப்போ டாலர் கேள்வி?.



# tiff. 38 ஆவது டொரொண்டோ படவிழா

இம்மாதம் ஐந்தாம் திகதி தொடக்கம் பதினைந்தாம் திகதி வரை நடைபெறவுள்ளது. எழுபது நாடுகளில் இருந்து மொத்தம் 366 திரைப்படங்கள் இதில் காண்பிக்கப் படவுள்ளன. முதலாவது படமாக "The Fifth Estate" ஆகும். இது விக்கிலீக்ஸ் இன் உரிமையாளர் ஜூலியன் அசான்ஜே பற்றிய ஒரு கிரைம் திரில்லர் படமாகும்.

ஏதும் இந்தியாவில் இருந்து தமிழ் படங்கள் அல்லது எம்மவரின் படங்கள் வருகின்றதா என்று பார்த்தால், அது வரும் ஆனால் வராது என்பது தான் பதில். இந்தியாவில் இருந்து சில படங்கள் திரையிடுகின்றார்கள். அதாவது டப்பா "Lunch Box" மனைவியை இழந்த ஒரு ஆணிற்கும், சந்தோஷமற்ற வாழ்க்கை வாழும் ஒரு குடும்பத்தலைவிக்கும் சாப்பாட்டு பெட்டி இடம்மாறி போய் சேர்வதால் ஏற்படும் உறவு பற்றியது. இதில் கதாநாயகனாக இர்பான்கான் (Life of Pie actor) நடித்துள்ளார்.

"suddh Desi Romance" என்ற நகைச்சுவை காதல் படமும் திரையிடுகின்றார்கள். இதில் ரிஷி கபூர் நடித்துள்ளார்.

இதை விட, கனடிய இயக்குனரான றிச்சி மேத்தா (தீபா மேத்தாவின் உறவினரல்லர்) சித்தார்த் என்ற படத்தை இம்முறை திரையிட்டுள்ளார். முன்னர் புதுடெல்லியைச் சேர்ந்த ஒரு டாக்ஸி ட்ரைவரின் கதையை அமல் என்ற திரைப்படமாக்கிய இவர், தற்போது சிறுவயதில் வேலைக்குப் போய் காணாமல் போன சிறுவன் ஒருவனைத் தேடும் தந்தையைப் பற்றிய கதை ஒன்றை சித்தார்த் என்ற பெயரில் படமாக்கியுள்ளார்.






லெனின் எம்.சிவத்தின் இயக்கத்தில் உருவாகி, ஷாங்காய் திரைப்பட விழாவில் கலந்து கொண்டு, தங்கக் கிண்ண விருதுப் போட்டிக்கு தெரிவான A Gun and a Ring திரைப்படத்தின் கனடியத் திரையீடு ரொறன்ரோ செப்டம்பர் 28, யோர்க் சினிமாவில் மாலை ஏழு மணிக்கு நடைபெறுகிறது.

ஒரேயோரு பிரத்தியேகக் காட்சி மட்டுமே இடம் பெறுகிறது. இந்தத் திரைப்படத் திரையீடு குறித்த விபரங்களுக்கு 647 427 4407 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

இத்திரைப்படம் மொன்றியல் உலகத் திரைப்பட விழாவிலும் திரையிடப்பட உள்ளது.

# சோனாபரியாவும் கடல் ராசாவும்



யாரவது தனுசிற்கு திருஷ்டி சுற்றி போடுங்கப்பா, மரியான் படம் பார்த்து முடிய மனசில இப்படி ஒரு நினைப்புதான் வந்து போனது.

காதல் கொண்டேன் பார்த்துவிட்டு ஆள் ஒல்லி என்றாலும் கொஞ்சம் புருஸ்லி சாயலுடன் நடிப்பு அசத்தலாய் இருக்கு என்று அப்பவே நினைக்க வைத்தவர். தொடர்ந்து தனுஷின் பல படங்கள் அடுத்தடுத்து வந்து, பல தொலைந்து போயின சில மனதில் நின்றன. மன்மதராசா பாடலுடன் வந்த திருடா திருடி, தொலைத்த மோட்டார் சைக்கிளை தேடியலையும் வெற்றிமாறனின் பொல்லாதவன், நயன்தாராவுடன் கலக்கிய யாரடி நீ மோகினி, விவேக்குடன் இணைந்து செம கொமேடி உத்தமபுத்திரன் என்று வந்தாலும், பாலு மகேந்திராவின் அது ஒரு கனாக்காலமும் செல்வராகவனின் புதுப்பேட்டையும் எதிர்பார்த்ததுபோல் அமையவில்லை. திரும்பவும் வெற்றிமாறன் கூட்டணியுடன் இணைந்த ஆடுகளம் தனுஷ்க்கு தேசியவிருதை பெற்றுகொடுத்ததுடன் பல தரப்பட்டவர்களையும் தனுஷை விரும்பி பார்க்கவும் வைத்தது. அதன் பின்பும் சில மாசாலாக்கள் அவர் நடிப்பில் வந்தன. மீண்டும் செல்வராகவனின் இயக்கத்தில் மயக்கமென்ன ஒரு கலக்கு கலக்கியது. மிக இயல்பாக அதில் தனுஷ் நடித்திருந்தார். பின்னார் உலகமெங்கும் பட்டி தொட்டி எல்லாம் கொலைவெறி பாடலுடனும், ஜோடி சுருதியுடனும் சேர்ந்து திரீ படம் வந்தது. படம் பெரிதாக வெற்றி பெறாவிட்டாலும் தனுஷின் நடிப்பு மிக நான்றாகவே இருந்தது.

தனுஷின் நடிப்பு பெரும்பாலான படங்களில் ஒரே விதமாக குறிப்பாக மனநோயாளி கதாபாத்திரங்களிலேயே இருக்கு என்ற விமர்சனங்களின் மத்தியில் ஹிந்தி படமான ரஞ்சனா தமிழில் அம்பிகாபதியாக வந்தது. அசல் ஹிந்தி படங்களுக்கே உரிய கலர்மயமான காதல் கதை. ரகுமானின் மனதை மயக்கும் பின்னணி இசை அழகிய கதாநாயகி இவை எல்லாவற்றிற்கும் மேலாக தனுஷின் நடிப்பு இந்தியா முழுக்க இருக்கையை விட்டு எழும்பி கை தட்ட வைத்துவிட்டது.

மீனவர் வாழ்வின் பின்னணியில் உருவாக்கி மணிரத்தனம் தந்த கடல் படத்தால் வெறுத்துப்போயிருந்தவர்களுக்கு, அதே பின்னணியில் மரியான் படத்தில் அழகாக தனுஷை கடல்ராசாவாக ஆக்கிவிட்டிருகின்றார் பரத்பாலா.

கன்னியாகுமாரியின் ஆழக்கடலில் மூச்சை அடக்கி ஈட்டியின் உதவியால் மீன் பிடிக்கும் தனுஸ் பார்வதி காதல் கதைதான் மரியான். காதலியின் அப்பா கடனை அடைக்க சூடானுக்கு வேலைக்குப்போகும் தனுஷ் இந்தியாவிற்கு திரும்பி வரும்போது சூடானிலுள்ள கடத்தல் கும்பலினால் கடத்தப்பட்டு பின் அவர்களிடமிருந்து தப்பி வருவதுதான் கதை. பாலைவனத்தில் கடத்தல்காரர்களிடம் சிக்கி தவிக்கும் காட்சிகளில் தனுஷின் நடிப்பு மிக அசத்தல், பனிமலராக நடிக்கும் பார்வதியிடம் அழகும், நடிப்பும் கொட்டிக் கிடக்கு.

ரகுமான் இசையும், பாடல்களும் இனிமையிலும் இனிமை. அதிலும் இன்னும் கொஞ்ச நேரம் இருந்தால் தான் என்ன படமாக்கப்பட்டவிதம் அருமை. மரியான் தனுசிற்குஇன்னுமொரு மைல்கல்.

மனம் விரும்பியது போல் **Brampton & Mississauga** வீடு வாங்க விற்க அழையுங்கள்

## CALL BEFORE YOU LIST & SEE THE DIFFERENCE

Harold / Stanley Crt




98% of Asking
**Brampton ON**

Chinguacousy/N. Of Steel




98% of Asking
**Brampton ON**

Vankirk Dr/Wanless Dr




98% of Asking
**Brampton ON**

Sandalwood & Bramalea




98% of Asking
**Brampton ON**

Bramalea Rd/Alexandria




99% of Asking
**Brampton ON**

Airport Rd & Sandalwood




99% of Asking
**Brampton ON**

Williams Pkwy / Valleyway




99% of Asking
**Brampton ON**

Britannia/Terry Fox




99% of Asking
**Mississauga ON**

Bramalea Rd / Countryside Dr




100% of Asking
**Brampton ON**

**Ruby Thambiah**
Sales Representative

DIR 416.999.5337
BUS 905.456.1000

295 Queen St E
Brampton, ON
L6W 3R1

#1



RE/MAX
Realty Services Inc.
Brokerage*

*Independently Owned and Operated

rubysri@hotmail.com
www.BuyandSellwithRuby.com

# பூபாளம்

**சிறப்பு இணைப்பு**


# மாகாண சபைத் தேர்தல்

வடமாகாண சபைத் தேர்தல் செப்ரம்பர் மாதம் 21ம் திகதி நடைபெறவுள்ளது. 1987 ம் ஆண்டு இந்திய அரசின் அனுசரணையுடன் இலங்கைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 13 வது திருத்தச் சட்டத்திற்கமைய இந்த மாகாண அரசு முறைமை அமுலுக்க வந்தது. இலங்கையில் வாழும் சிறுபான்மை மக்களின் அரசியல் தீர்வுக்காக அதிகாரப் பரவலாக்கம் என்ற கருத்துக்கு அமைய இது உருவாக்கப்பட்டது. இந்திய அரசு இவ்விடயத்தில் இலங்கை அரசுடன் இணைந்து செயற்பட்டபோது இவ் மாகாண முறைமையானது இந்தியாவில் உள்ள மாநில அரசுகளுக்குரிய அதிகார வரம்புகளை கருத்தில் கொண்டே இதனை அறிமுகப்படுத்த இலங்கை அரசை வலியுறுத்தியது என்பது வெளிப்படை. இலங்கையில் தமிழருக்கென தனியாக ஒரு நாடு பிரிதல் என்பதை இந்திய அரசு விரும்பாதபோதும் மாநில சுயாட்சி என்ற கருத்தின் அடிப்படையில் மாகாணசபையை என்ற முன்னெடுப்பை அது வீராப்புடன் முன்னெடுத்தது. ஆனால் இலங்கையின் கபடத்தனமான இராஜதந்திரி ஜே.ஆர் தனது தரப்பு கணக்குகளை சரியாக வரைந்து 13வது திருத்தச்சட்டத்தில் பல அதிகார வரம்புகளில் ஓட்டைகளை வேண்டும் என்றே உருவாக்கி இலங்கை முழுவதற்குமான ஒரு சட்டமூலமாக்கியதன் மூலம் தனது கபடத்தனமான சாணக்கியத்தை நிறைவேற்றினார். மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பாவித்து ஜே.ஆர் செய்த இந்த ஏமாற்று வேலை தமிழ் பேசும் சிறுபான்மை மக்களுக்கு மட்டும் அல்ல சிங்கள மக்களுக்குமான ஏமாற்று வேலையே ஆகும்.

ஆனால் சட்டமூலம் கிடைக்கப் பெற்ற 13வது திருத்தச்சட்ட மாகாண சபை முறைமைகளை ஒரு ஆரம்ப புள்ளியாக ஒடுக்கப்படுகின்ற தமிழ் பேசும் சிறுபான்மை மக்களின் தலைமைகள் ஏற்று தொடர்ந்தும் தமது உரிமைகளுக்காக போராடுவதற்கு பதிலாக தமிழ் மக்கள் மத்தியில் உள்ள அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் பலவும் இதனை நாசம் பண்ணுவதில் தமது தற்காலிக வெற்றிக் கழிப்பில் அன்று ஈடுபட்டனர். இதில் புலிகள் முதன்மை வகித்தாலும் வடக்கு கிழக்கு மாகாண சபையில் அங்கம் வகிக்காத ஏனைய பல மிதவாதக் கட்சிகள் இதனை ஒரு மட்டத்தில் எதிர்த்தனர் என்பதே உண்மை நிலை.

சரி போர் முடிந்தாகிவிட்டது. வடக்கும் கிழக்கும் பிரித்தாகி விட்டது. கிழக்கின் தேர்தலை முதலில் ஏற்காதவர்கள் பின்பு 2012 ல் நடைபெற்ற கிழக்கின் மாகாணசபைத் தேர்தலில் பங்கு பற்றி ஒரு தமிழ் மகனையும் அமைச்சராக்க முடியாத சூழ்நிலைக்கு கிழக்கு மாகாண சபையைக் கொண்டு வந்து மௌனமும் ஆகிவிட்டனர். இன்று மீண்டும் வடமாகாணம் தமிழரின் தன்மானத்தை காக்கவல்ல மாகாணம் என்று கூறிக்கொண்டு களத்தில் யாவரும் இறங்கியுள்ளனர். இதில் தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் போராட்டதிற்கான வழிமுறைகள் என்பதை விட தமது நாற்காலிகள் என்பதே முதன்மை பெற்றிருந்தாலும் ஒரு ஜனநாயக பூர்வமான தேர்தல் முறைமையில் தமிழ் பேசும் சிறுபான்மை மக்களின் பிரச்னைக்களை முகம் கொடுக்க ஒவ்வொருவரும் தமது கருத்தின் அடிப்படையில் கூட்டமைத்தும், தனியாகவும் களம் இறங்கி மக்களிடம் வாக்கு கேட்கின்றனர். இது வரவேற்கத்தக்க விடயம் ஆகும். உருவாகியிருக்கும் ஜனநாயக இடைவெளியில் வடக்கு மகாணசபையை யார் கையில் ஆட்சிக்கு கொடுப்பது என்பதை மக்கள் தீர்மானிக்கட்டும். தேர்தலின் பின்பு நாம் இந்த ஜனநாயக முடிவுகளை ஏற்றுத்தான் ஆகவேண்டும். தொடர்ந்தும் மக்களின் வாழ்வை, உரிமைகளை வென்றெடுக்க யாவரும் கிடைத்திருக்கும் ஜனநாயகத் இருப்பின் அடிப்படையில் போராடுவது அவரவருக்கு இருக்கும் தார்மீக உரிமையாகும்.

இந்த தேர்தலில் பங்குபற்றுகின்ற, பங்குபற்றாமல் தவிர்த்த அரசியல் அமைப்புகளின் நிலைப்பாட்டை கனடிய தமிழ் மக்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு, இந்த சிறப்பு இணைப்பை வெளியிட முனைந்தோம். இதற்காக எல்லா அரசியல் கட்சிகளிடமும் ஐந்து கேள்விகளை முன்வைத்து அவற்றுக்கான பதில்களை கோரியிருந்தோம். கேள்விகளுக்குப் பதிலாக இல்லாமல், தங்களுடைய கருத்துக்களை எங்களுக்கு தெரியப்படுத்தியிருந்தனர். எம் அரசியல்வாதிகளின் நிலைப்பாட்டை அவர்களின் வார்த்தைகளிலேயே கனடிய தமிழ் மக்கள் முன்வைக்கிறோம்.






# மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பு

**மாகாண சபைகள் உருவாக்கப்பட்டு 26 வருடங்கள் முடிவுற்ற போதும் வடமாகாணத்திற்கு இப்போது தான் முதன் முறையாக தேர்தல் நடைபெறுகின்றது. இந்த வடமாகாணசபைத் தேர்தலில் 14 அரசியல் கட்சிகள். 29 சுயேட்சைக் குழுக்கள் போட்டியிடுகின்றன.**

வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 51 பேரை களம் இறக்கியுள்ளது. யாழ். மாவட்டத்தில் 16 ஆசனங்களுக்காக 19 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 4 ஆசனங்களுக்காக 7 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 ஆசனங்களுக்காக 9 பேரும், மன்னார் மாவட்டத்தில் 5 ஆசனங்களுக்காக 8 பேருமாக களம் இறக்கப்பட்டுள்ளனர். அதாவது மொத்தம் 36 ஆசனங்களுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் 51 பேர் போட்டியிடுகின்றனர்.

## யாழ் மாவட்டம்

யாழ். மாவட்டத்தில் முதலமைச்சர் வேட்பாளரான ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் போட்டியிடும் சீ.வி. கே.சிவஞானம், ச.சுகிர்தன், எஸ்.சயந்தன், எஸ்.பரம்சோதி, பா.கஜதீபன், எஸ்.சிவயோகம், ஆர்.ஆர்னோல்ட், எம்.சிவாஜிலிங்கம், விந்தன் கனகரத்தினம், எஸ்.குகதாஸ், த.சித்தார்த்தன், த.தம்பிராசா, க.தர்மலிங்கம், எஸ்.சர்வேஸ்வரன், எஸ்.ஐங்கரநேசன், ஆர்.ஜெயசேகரம், என்.வி.சுப்பிரமணியம், ஏ.ஆனந்தி ஆகியோரின் வேட்பு மனுக்களை சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் செயலாளருமான மாவை சேனாதிராஜா மற்றும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) தலைவர் சித்தார்த்தன் ஆகியோர் யாழ். செயலகத்தில் தாக்கல் செய்தனர்.

## கிளிநொச்சி மாவட்டம்

கிளிநொச்சி மாவட்டத்தில் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் போட்டியிடும் வேட்பாளர்களான த.குருகுலராஜா, ப.அரியரட்ணம், க.திருலோக மூர்த்தி, கே.வினுபானந்த குமாரி, சு.பசுபதிப்பிள்ளை, பூ.தர்மகுலசிங்கம் ஆகியோரின் வேட்ப மனுக்களை தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளரான வீ.ஆனந்த சங்கரி தலைமையில் பாராளுமன்ற உறுப்பினரான சிறீதரன், முன்னாள் கல்விப் பணிப்பாளர்களான குருகுலராஜா, அரியரத்தினம் ஆகியோர் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் தாக்கல் செய்தனர்.

## முல்லைத்தீவு மாவட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் அன்ரனி ஜெகநாதன் தலைமையில் போட்டியிடும் து.ரவிகரன், வீ.கனகசுந்தர சுவாமி, வைத்தியகலாநிதி சி.சிவமோகன், வ.கமலேஸ்வரன், க.சிவனேசன், ஆ.புவனேஸ்வரன், திருமதி கு.கமலகுணசீலன் ஆகியோரின் வேட்பு மனுக்களை அன்ரணினி ஜெகநாதன் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம், டாக்டர் சிவமோகன் ஆகியோர் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் தாக்கல் செய்தனர்.


## வவுனியா மாவட்டம்

வவுனியா மாவட்டத்தில் எம்.தியாகராஜா தலைமையில் போட்டியிடும் ஜீ.ரி.லிங்கநாதன், வைத்திய கலாநிதிப.சத்தியலிங்கம், எம்.பி.நடராஜ், து.நடராஜசிங்கம், க.சந்திரகுலசிங்கம், இ.இந்திரராசா, மு.முகுந்ததரதன், செ.மயூரன் ஆகியோரின் வேட்பு மனுக்களை எம்.தியாகராஜா தலைமையில் பாராளுமன்ற உறுப்பினரான சிவசக்தி ஆனந்தன், வவுனியா முன்னாள் நகரசபைத் தலைவர் ஜீ.ரி.லிங்கநாதன் ஆகியோர் வவுனியா மாவட்டச் செயலகத்தில் தாக்கல் செய்தனர்.

## மன்னார் மாவட்டம்

மன்னார் மாவட்டத்தில் டாக்டர் குணசீலன் தலைமையில் போட்டியிடும் யோ.ஆனந்தன் குரூஸ், சு.சிவகரன், பா.டெனிஸ்ரன், சு.பறிமோஸ் சித்ராய்வா, கி.விமலசேகரம், இ.சாள்ஸ், ஆயுப் அஸ்மி ஆகியோரின் வேட்பு மனுக்களை டாக்டர் குணசீலன் தலைமையில் சிவகரன், ஜூட் ஆகியோர் மன்னார் மாவட்டச் செயலகத்தில் தாக்கல் செய்தனர்.

# நாம் பண்டமாற்று அரசியல் செய்ய விரும்பவில்லை



தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர்

சி.வி.விக்னேஸ்வரன்

தமிழன் அவ்வளவு சுலபமாக துவண்டுவிட மாட்டான். வருவது வரட்டுமென் முன்னேறுவோம். இவ்வாறு புதிய பரிணாமத்தில் எங்கள் போராட்டத்தை நடத்த வல்லவர்கள் நாங்கள் என்பதை உலகத்திற்குச் சொல்ல முயற்சி செய்ய வேண்டும். பிரிந்து நின்று தமிழ்பேசும் மக்கள் வடமாகாண சபை என்ற அலகின் கீழ் எங்கள் ஒற்றுமையினை உலகறியச் செய்ய காலம் கனிந்துள்ளது. அதற்கான மிகச் சிறந்த வாய்ப்பாக வடக்கு மாகாணசபை தேர்தல் அமைந்திருக்கிறது.

எங்கள் ஒற்றுமைக்கு முட்டுக்கட்டையாக இருப்பவர்கள் அரசாங்கத்துடன் இணைந்திருப்பவர்களே. சொந்த மக்களை எதிரிகளாக சித்திரித்து தொடர் யுத்தத்தில் ஈடுபடுத்தி வாழ்வாதாரத்தை அழித்து உயிர்களைப் பறித்து உடல்களை சின்னாபின்னமாக்கிவிட்டு இராணுவத்தைப் பயன்படுத்தி இப்போதும் அடக்கு முறைக்குள் வைத்திருக்கும் அரசாங்கத்தின் தூதர்களான அவர்கள் அரசியலை பண்டமாற்றாக கருதிக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் தெருக்கள் தருகிறோம். நீங்கள் வாக்குகளைத் தாருங்கள் என்று கேட்கிறார்கள்.

டக்ளஸ், தவராசா, அங்கயன் ஆகிய மூவரும் தமிழ் பேசும் சகோதரர்கள் அவர்கள் போகும் பாதை தவறு என்பது எங்கள் கருத்து. எங்கள் அரசியல் வரலாற்றை ஆராய்ந்தால் எங்களை வைத்துக் கொண்டு எப்படியெல்லாம் எங்களை அழித்தார்கள் என்பது புலப்படும். மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது, உலக தமிழாராய்ச்சி மாநாட்டு துயரம், 2009ம் ஆண்டு துயரம் என முக்கியமான சம்பவங்கள் பலவற்றின் போது அரசாங்கத்தில் தமிழ் அமைச்சர்கள் அங்கம் பெற்றிருந்தார்கள். எம்மவர்களைக் கொண்டே எங்களை அழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நாம் பண்டமாற்று அடிப்படையிலான அரசியல் செய்ய விரும்பவில்லை. எங்கள் அரசியலும் நிர்வாகமும் மக்களுடைய நலன்களை அடிப்படையாகக் கொண்ட ஊழலற்ற உயிருள்ள நிர்வாகம். அதன் மூலம் சட்டத்தின் நீதியின் ஆட்சியை நிலை நிறுத்துவோம். இங்கு அதிகார துஸ்பிரயோகத்திற்கு இடமில்லை.

நாம் இரு நோக்குகளைக் கொண்டிருக்கிறோம். ஒன்று, தூரநோக்கு. மற்றது, கிட்டிய நோக்கு.

இங்கு தூர நோக்கு என்பது தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்த அவர்களது பூர்வீகமான வாழ்விடங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். நாம் ஒரு தேசிய அலகு என்ற அடிப்படையில் எம்மை நாம் ஆளும் வகையிலான சுய நிர்ணய உரிமை எமக்கு உரித்தாகின்றது. இதுவே எமது தூரநோக்கு. அதனை நாம் அடைந்தே தீருவோம். கிட்டிய நோக்கைப் பொறுத்தவரையில் இது உடனடித் தேவைகளை கருத்தில் கொண்டு யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுடைய நலன்சார்ந்த நடவடிக்கைகளை நாம் உடனடியாக மேற்கொள்ளல். மேலும், காணாமல் போனோர் பிரச்சினை, நிலபறிப்புப் பிரச்சினை போன்றவற்றுடன் இராணுவத்தை முகாம்களுக்குள் முடக்குவது, படிப்படியாக எங்கள் மண்ணிலிருந்து முழுமையாக இராணுவத்தை அகற்றுவது போன்றவற்றிலும் நாம் அதிகம் கவனம் செலுத்துவோம்.

அதற்காக மத்திய அரசுடன் நம்பிக்கை அடிப்படையில் புரிந்துணர்வை வளர்க்க வேண்டும். அதே போன்று இளைஞர் யுவதிகளின் தொழில்வாய்ப்பு, யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்வு போன்றவற்றுடன் கல்வி பொருளாதாரமென சகல துறைகளிலும் எங்கள் சமூகத்தை வளர்த்தெடுக்க உறுதிபூண்டுள்ளோம்.

# ஜனாதிபதியின் ஆசியுடன் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவோம்



அமைச்சர்

டக்ளஸ் தேவானந்தா

தமிழ் தேசிய கூட்டமைப்பினர் தாங்களே ஆட்சி அமைப்போம் பெரும்பான்மையான ஆசனங்களைப் பெறுவோம் எனக் கூறி வருகிறார்கள். தேர்தல் காலத்தில் எல்லோரும் சொல்வதைப் போலவே அவர்களும் கூறி வருகிறார்கள். எங்களைப் பொறுத்தவரை ஆட்சி அதிகாரத்தை நடத்தக் கூடிய அளவுக்கு வாக்கு எமக்கு கிடைக்கும். மக்கள் நிறைவான ஆதரவு தருவார்கள் என நம்புகிறோம்.

கூட்டமைப்பினர் வடக்கில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன என பொய்ப்பிரச்சாரம் செய்து வருகிறார்கள். அவர்கள் அப்படிக் கூறுமளவிற்கு வடக்கில் பிரச்சினைகள் இல்லை என்பதே உண்மை நிலை. ஒருசில பிரச்சினைகள் இருக்கின்ற போதும் அவை தீர்க்கப்பட்டு வருகின்றன. எமக்கு ஆட்சியமைக்கும் வாய்ப்பு கிடைக்குமானால் வடமாகாணத்தை வளம் கொழிக்கும் செல்வம் கொழிக்கும் மாகாணமாக மாற்றுவோம்.

எது மக்களுக்கு நல்லது என நினைக்கிறோம் அது நடக்க இருக்கிறது. நாம் மாகாண சபைக்கு வரும்போது மத்திய அரசுடன் இணக்கப்பாடும் உறவும் வளர்த்துக்கொள்ளப்படும். அபிவிருத்தித் திட்டங்கள் முழுமையாக மேற்கொள்ளப்படும். இணக்க அரசியலின் ஊடாகவே நாம் பிரச்சினைகளை தீர்க்க முடியும். இது எனது நீண்டகால அரசியல் அனுபவத்தினூடாக கண்ட உண்மை எதிர்ப்பு அரசியலினால் ஒன்றுமே செய்ய முடியாது.

இன்று தமிழ் மக்கள் மத்தியில் காணப்படும் அரசியல் வழிமுறைகள் இரண்டு. ஒன்று, இணக்க அரசியல். அடுத்து எதிர்ப்பு அரசியல். பொதுவாக எதிர்ப்பு அரசியல் எங்களை எங்கு கொண்டு போய் விட்டது என்றால் முள்ளிவாய்க்காலில்தான். ஆனால் இணக்க அரசியல் முள்ளிவாய்க்காலில் இருந்து மக்களை மீட்டெடுத்து அவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுத்தது. இன்று கிளிநொச்சி நகரத்தைப் பார்த்தால் தெரியும் கொழும்பை விட தரமுயர்ந்த நகரமாக அது அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது என்பதை. வறுமை ஒழிப்பில் பிரதான பங்காற்றி வரும் இலங்கை மத்திய வங்கியின் ஐந்தாவது பிராந்திய கிளை கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற திட்டங்கள் இன்னும் மேற்கொள்ளப்படும்.

வடமாகாணசபையின் ஆட்சி எம் கையில் கிடைக்குமானால் ஜனாதிபதியின் ஆசியுடன் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணுவோம்.

# நல்லவர்களை தெரிவு செய்யுங்கள்

வடமாகாண ஐ.தே.க முதன்மை வேட்பாளர்

துவாரகேஸ்வரன்




நாட்டில் உள்ள தேசியக் கட்சிகளிலும் எமது மக்களின் பிரச்சினைகளைப் பேசக்கூடியவர்கள் இருக்க வேண்டும். ஆனால் அக்கட்சிகளில் ஆமாம்சாமி போட்டுக் கொண்டு அடிவருடிகளாக இருக்கக் கூடாது. நான் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்டாலும் எமது மக்களின் குறிப்பாக தமிழ் சமூகத்தின் பாதுகாவலனாகவே செயற்படுவேன். அதற்கு பங்கம் விளைவிக்கின்ற பட்சத்தில் அதற்கெதிராக துணிந்து குரல் கொடுப்பேன். இல்லையேல் கட்சியை விட்டு வெளியேறவும் தயங்க மாட்டேன்.

இன்று விஜயகலா மகேஸ்வரன் அவரது பாணியில் அரசியல் செய்து கொண்டு

போகிறார். நான் எனது சகோதரர் மகேஸ்வரன் மற்றும் ரவிராஜ் போன்றோரின் பாணியில் மக்களுக்காக அச்சமின்றி சேவையாற்ற வேண்டும் என்ற எதிர்பார்ப்புடனேயே அரசியலில் காலடி எடுத்து வைத்துள்ளேன்.

தேசியக் கட்சியில் இருந்து கொண்டு எமது சமூகத்துக்கு எவ்வாறான சேவைகளை செய்ய முடியுமோ அவையனைத்தையும் செய்வேன். அதேபோன்று எமது சமூக கலைகலாசார விழுமியங்களுக்கு ஆபத்து அல்லது எதிரான செயற்பாடுகள் வருமிடத்து அதனை தடுத்து நிறுத்துவதற்கான சகல முயற்சிகளையும் எடுப்பேன்.

தேசியக் கட்சியில் இருக்கிறேன் என்பதற்காக நான் ஒரு தமிழன் எமக்கென்று ஒரு கலை கலாசார பாரம்பரியம் இருக்கின்றதென்பதை நான் ஒருபோதும் மறந்துவிட்டு யாருடைய அடிவருடியாகவும் செயற்பட மாட்டேன். நான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கோ தமிழ்த் தேசியத்துக்கோ எதிரானவன் அல்ல. ஆனால் தமிழ்த் தேசியம் அப்படி இப்படி என்று உணர்ச்சிவார்த்தைகளைக் கூறி மக்களை ஏமாற்றி அரசியல் நடத்துபவர்களுக்கே நான் எதிரானவன். கடந்தகால வரலாறுகளை திரும்பிப் பார்த்து வேட்பாளர்களை எடை போட்டு வாக்களியுங்கள். எனக்குத்தான் வாக்களிக்க வேண்டும் என்று நான் ஒருபோதும் கூறவில்லை. எமது சின்னத்துக்கு வாக்களித்து

# எனது பணிகளை இன்னும் தொடர...



**மக்கள் மறுமலர்ச்சி முன்னணியின் தலைவரும் ஐ.ம.சு.முன்னனியின் யாழ்.மாவட்ட வேட்பாளருமான சுபியான் மௌலவி.**

மக்கள் மறுமலர்ச்சி முன்னணியை அரசியல் கட்சியாக பதிவு செய்ய முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இருந்த போதிலும் வடமாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் யாழ்.மாவட்ட வேட்பாளராக போட்டியிடுகின்றேன்.

மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் வடமாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் கடந்த நான்கு வருடங்களாக நான் யாழ்.மாநகர சபை உறுப்பினராக இருந்து கொண்டு எனக்கு அரசாங்கத்துடனிருந்த நல்ல தொடர்புகள் மூலம் மாநகர சபை உறுப்பினருக்குரிய வேலைத்திட்டங்களை விடவும் மேலதிகமாகப் பல அபிவிருத்திப் பணிகளையும் இன,மத,ஜாதி, வர்க்க வேறுபாடுகளின்றி சகலருக்கும் செய்து வருகின்றேன்.

எனது சேவையினைப் பலரும் அறிவதுடன் பயனுமடைந்துள்ளனர். எனவே என்னை ஆதரித்து வெற்றி வாய்ப்பினை தருவதுடன் ஊடாக இன்றும் பல சேவைகளையும் என் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையில் எனக்கான ஆதரவு பெருகிக் கொண்டிருக்கிறது. இதுவரையில் இந்தத் தேர்தல் தொடர்பாக யாரும் என்னை எவ்வித அச்சுறுத்தலுக்கும் உள்ளாக்கவில்லை. எனது தேர்தல் பிரச்சாரப் பணிகள் எவ்வித தங்குதடையுமின்றி சுமுகமாக வெற்றியை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன.

இங்கு இராணுவத்தினர் அவர்களது முகாமிலேயே இருக்கின்றனர். பிரசார நடவடிக்கைகள் எதிலும் இராணுவத்தினரின் தலையீடுகள் எதுவுமே இருப்பதாகத் தெரியவில்லை. எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகளில் எவ்வித உண்மையும் இருப்பதாகத் தெரியவில்லை.

# நாமே அபிவிருத்தி செய்யக் கூடியவர்கள்



**ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் - அங்கயன் இராமநாதன்**

இன்றைய நிலையில் வடபகுதி மக்களுடைய தேவைகளையும் அவர்களுக்கான அபிவிருத்திகளையும் இனங்காண வேண்டியவர்களாக நாம் இருக்கின்றோம். மக்களுக்கு கொடுக்க வேண்டியவற்றை கொடுப்பதற்கு தயங்கி நிற்பது நியாயமற்ற செயலாகின்றது. உயரத்தில் இருக்கும் இலக்கை அடைவதற்கு எட்டி குதிப்பதைக் காட்டிலும் ஏணி வைத்து ஏறுவதே சாலப் பொறுத்தமானது. அந்த வகையில் எம்மால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அனைத்து அபிவிருத்திப் பணிகள், மக்களின் வாழ்வாதார தேவைகளுக்கான உதவித் திட்டங்கள் அனைத்தையும் மேற்கொள்வதற்கு மாகாண சபைக் கட்டமைப்பு எமக்கு ஏணியாக அமையும் என்பதை தெளிவாக புரிந்துகொண்டவர்களாகவே நாம் இருக்கின்றோம்.

மாகாண சபை என்பது அபிவிருத்திக்கான ஒரு இலக்காகும். இத்தகையத் தேர்தலில் அபிவிருத்தி செய்பவர்களையும் மக்களுடன் நின்று மக்களுக்காக சேவை செய்பவர்களையும் மாத்திரமே வெற்றி பெறச் செய்ய வேண்டும். மாகாண சபையைக் கைப்பற்றி அதனைக் கையாளும் போது மக்களுக்காக முன்னெடுக்கக்கூடிய சேவைகளையும் நிறைவு செய்யக்கூடிய தேவைகளையும் செய்து முடிப்போம் என்ற நம்பிக்கையும் திராணியும் எமக்கு இருப்பதாலேயே நாம் இந்த தேர்தல் களத்தில் நிற்கின்றோம்.

இதுவரை காலமும் மக்கள் தெரிவு செய்த தலைமைகள் என்ன செய்தார்கள்? என்ன சொல்கின்றார்கள்? போன்ற கேள்விகளின் ஊடாக அவற்றுக்கான பதில்களையும் நாம் பெற்றுக் கொள்ளக்கூடிய தருணத்தில் நாம் இருக்கின்றோம். ஏனெனில் தொடர்ச்சியாக ஏமாற்றப்படும் வர்க்கமாக ஏமாற்றும் ஏமாளிகள் கூட்டமாக நாம் இருந்துவிட முடியாது. கடந்தகாலங்களில் மக்களுடைய உரிமைகளைத் தேவைகளை பெற்றுக்கொடுப்போம் என வாக்குறுதிகளை கொடுத்துவிட்டு வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் சென்றவர்கள் இதுவரை என்ன செய்தார்கள்? வாக்களித்த மக்களுக்கு என்ன பதில்களைச் சொன்னார்கள்?

அவர்கள் சொன்னதெல்லாம் எதுவும் கிடைக்கவில்லை. எதையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்பது மட்டுமே. உண்மை அதுவல்ல மக்களுக்கான தேவைகளை உங்களால் நிவர்த்தி செய்ய முடியவில்லை என்பதற்காக அவற்றை யாராலும் செய்து விட முடியாது என்றாகிவிட முடியாது. மாகாண சபையின் மூலம் எதைப் பெற்றுவிடலாம் எனக் கேட்பதிலிருந்து அவர்களின் இயலாமையை அவர்களே ஏற்றுக்கொள்கிறார்கள் என்பது தெளிவாகின்றது. மக்களுக்கான விடிவை ஏற்படுத்திக் கொடுக்க முடியாது என எண்ணினால் எதற்காக இத்தனை வேட்பாளர்களுடன் போட்டியிடுகிறார்கள் என்ற கேள்வி எழுவது இயல்பானதே. இதிலிருந்து அவர்கள் மீண்டும் மக்களை வார்த்தை ஜாலங்களால் ஏமாற்றத் தயாராகி விட்டார்கள் என்பதும் தெளிவாகி விடுகின்றது.

இத்தனை நாட்களாக எதிர்க்குரல்களை மட்டுமே கொடுத்துகொண்டு இருந்தவர்கள் தொடர்ந்து அதையே செய்வோம் என கூறியுள்ளார்கள். எனவே மக்கள் தமது நம்பிக்கைகளை மீண்டும் ஏமாற்றுக்காரர்களின் கையில் கொடுக்கப் போகிறார்களா? இல்லை இன்று அவர்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்து அபிவிருத்தி பாதையை கட்டியெழுப்பும் எங்கள் கைகளில் தரப்போகின்றார்களா? என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும். இத்தேர்தல் மூலம் வெற்றி பெற்று எமது மாகாணத்தை முன்னேற்ற முடியும். எமது மாவட்டத்தை முன்னுரிமைப்படுத்த முடியும். ஏனைய மாகாணங்களை அபிவிருத்தி செய்வது போல் எமது மாகாணத்தையும் அபிவிருத்தி செய்ய முடியும்.



# நான் யாருக்கும் துரோகம் செய்யாதவன்

**வீ.ஆனந்தசங்கரி தலைவர் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர். தமிழ் தேசியக் கூட்டமைப்பு**


வடமாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏழு வேட்பாளர்களில் ஒருவனாக கிளிநொச்சி மாவட்டத்தில் போட்டியிடுகிறேன். எனது அணியை முழு வெற்றியடைய வைத்து வட மாகாண சபையின் ஆட்சியைக் கைப்பற்றி அதன் மூலம் எமது இனப்பிரச்சினைக்கு நல்லதோர் தீர்வு அமையாது போனாலும் தீர்வுக்கு முதற்படியாக எம்மக்களின் அன்றாட பிரச்சினைகள் உட்பட அவர்களின் வறுமை, வீடில்லாப் பிரச்சினை, வேலையில்லாப் பிரச்சினை போன்றவற்றையேனும் ஓரளவுக்கு தீர்த்து வைக்க முடியுமென்ற நம்பிக்கையோடு உங்கள் ஆதரவை நாடி நிற்கிறேன்.

இறுதி மூச்சுவரை கிளிநொச்சி மண்ணிலேயே வாழ வேண்டும் என்ற உறுதியோடு வாழ்ந்து வாழ்ந்த மண்ணுக்கு வாழ முடியாத நிலையில் நான் நாட்டை விட்டு பிறநாடுகளுக்கு ஓடிப்போகாமல் எந்நாட்டின் ஒரு மூலையில் ஒதுங்கியிருந்தேன். நூற்றுக்கணக்கான என் நண்பர்கள் அவர்களின் பலதரப்பட்ட உறவுகளின் மரணச்செய்திகள் என்னை வந்தடைந்த போதெல்லாம் எம்மை விட்டுப் பிரிந்தவர்களின் உறவுகளுக்கு அனுதாபங்கூட கூற முடியாது மௌனமாக அழுதேன். அவர்களுடைய பழகிய நாட்களையும் பழகிய முறையையும் என்னும்போதெல்லாம் என் கண்கள் இன்னும் பனிக்கும். அவ்வாறு பழகியவர்களில் சிலர் என்னைக் கண்டும் காணாதது போல் இருக்கும்போது என்னுள்ளம் குமுறும். ஆனாலும் அவர்களின் அன்பையே நான் வேண்டி நிற்கிறேன். நான் என்ன தவறு செய்தேன்? என என்னையே பலதடவைக் கேட்டுள்ளேன். எனக்கும் என் குடும்பத்தினரையும் தவிர வேறு எவருக்கும் எத்தகைய குற்றமும் செய்யவில்லை.

யுத்தம் நடைபெற்ற காலத்தில் ஒருநாள் தமிழ் தலைவர்களை வரவழைத்த ஜனாதிபதி யுத்தப் பிரதேசத்திலிருந்து 55 ஆயிரம் பேர் நலன்புரி நிலையங்களுக்கு வந்துவிட்டனர். இன்னும் 85ஆயிரம் பேர் மட்டும் தான் மாத்தளனில் தங்கியுள்ளனர் எனக் கூறும்போது அப்படி இல்லை இன்னும் 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட

மக்கள் அங்கு இருக்கின்றனர் என்று மறுத்துரைத்து ஜனாதிபதியின் சீற்றத்திற்கும் ஆளானேன். இதுபோன்று பலதடவைகள் நான் துணிச்சலுடன் செயற்பட்டுள்ளேன். துரதிஷ்டவசமாக இவை அனைத்தும் இருட்டடிப்பு செய்யப்பட்டு வந்தன. என்னைப் பற்றி தவறாகப் பலவிதமான செய்திகள் உங்கள் மத்தியில் உலகம் பூராவும் பரப்பப்பட்டன. அவை ஒவ்வொன்றிற்கும் பதில் தந்து உங்கள் உள்ளங்களில் இருக்கும் இடத்தை உறுதி செய்வதோடு தவறாக என்னை எண்ணியவர்களின் உள்ளத்திலும் மீண்டும் இடம்பிடிப்பேன்.

தேர்தல் முடிவதற்கு முன்பு காலத்திற்கு காலம் என் கடந்த கால செயற்பாடுகளுக்கு விளக்கம் தருவேன் நான் என்றும் எம் மக்களுக்கு எதுவித துரோகமும் செய்தவனல்ல. இனி செய்யப்போவதுமில்லை. வரும் தேர்தல் மீண்டும் மக்களுக்கு நிறைவான நன்மைகளைச் செய்ய எனக்கு ஒரு சந்தர்ப்பமாக அமையப் போகிறது. நிச்சயமாக நன்மைகளையே செய்வேன்.



# வடமாகாணசபைத் தேர்தல் தமிழ் தேசிய மக்கள் முன்னணி பகிஷ்கரிப்பு

எமது அன்பிற்கும்! பெரு மதிப்பிற்குமுரிய தமிழ் மக்களே!!

சிறிலங்கா அரசும் அதனுடைய சர்வதேச ஆதரவு சக்திகளும் தமிழ் அரசியலின் தேசியவாத சிந்தனையை இல்லாதொழித்து பதின்மூன்றாம் திருத்தத்திற்குள்ளும் மாகாணசபை முறைக்குள்ளும் முடக்கும் நோக்கில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் இந்த தருணத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி எதிர்வரும் வடமாகாணசபைத் தேர்தலை புறக்கணிப்பதான அறிவிப்பை இவ்வறிக்கையூடாக வெளிப்படுத்துகின்றது.

1987ஆம் ஆண்டு தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைகளுக்கான தீர்வு என்ற பெயரில் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டு எம்மீது திணிக்கப்பட்ட நாளில் இருந்து அதனைத் தமிழ் மக்கள் நிராகரித்து வந்துள்ளார்கள். காரணம் மாகாண சபைகள் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை துளியேனும் திருப்திப்படுத்தாதது மட்டுமல்ல பேரெழுச்சி பெற்று நிற்கும் சிங்கள-பௌத்த பேரினவாதத்தின் கொடூர கரங்களிலிருந்து எமது தேசத்தின் இருப்பை பாதுகாக்க எந்த வழியிலும் உதவப்போவதுமில்லை என்பதுமாகும்.

இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களின் தாயக பூமி என்பது எமது திண்மமான நிலைப்பாடு. தமிழர் தேசத்தை இருகூறிவிட்டு வடமாகாண சபைத் தேர்தலை நடாத்தி தமிழ் மக்களின் தேசிய அரசியலை வடமாகாணத்திற்குள் முடக்கிவிட சிங்களம் கங்கணம்கட்டி நிற்கின்றது.

எமது சம்மதமின்றி எம்மீது திணிக்கப்பட்ட ஓர் அரசியல் தீர்வை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதுமில்லை, அதனைத் தொட்டுப் பார்க்கத் தயாராகவும் இல்லை. மாகாண சபை முறைக்கு அங்கீகாரம் வழங்குவதனை எத்தகைய காரணங்களினாலும் நியாயப்படுத்திவிட முடியாது என்பதே உமது உறுதியான நிலைப்பாடு. இது எமது தேசிய உரிமைப் போராட்டத்தின் ஆன்மாவை உலுக்கும் செயலாகவே நாம் பார்க்கின்றோம்.

அறிவிக்கப்பட்டுள்ள மாகாணசபைத் தேர்தலின் புறச்சூழலை அவதானிக்கும்போது உரிமைக்கான எமது போராட்டம் பதவிக்கான போராட்டமாக மாற்றப்பட்டு விட்டதென்ற வேதனையான உண்மை எம்மை கலங்க வைக்கிறது. மேலதிகமாக, தமிழ்த் தேசிய அபிலாசைகளை பிரதிபலிக்கின்றோம் என்று கூறிக்கொண்டிருக்கும் தரப்புக்கள் இந்த மாகாண சபை முறைக்கு அங்கீகாரம் கொடுப்பதன் ஊடாக ஒரு இன அழிப்பில் இருந்து தமிழ்த் தேசத்தை காப்பாற்ற வேண்டும் என்ற இனப்பிரச்சினையின் பரிமாணத்தை மாற்றி மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையில் இருக்கக்கூடிய ஓர் அதிகாரப் போட்டி என்ற புதிய வடிவத்தை கொடுப்பதற்கு துணைபோகின்றனர்.

எம் உறவுகளே...வெளிசக்திகள் தத்தமது நலன்களை இத்தீவில் நிலைநிறுத்திக் கொள்வதற்காக இத்தேர்தலில் தமிழ் மக்களை முழுமையாகப் பங்கேற்க வைத்து மாகாண சபையை தீர்வாக ஏற்றுக்கொண்டுள்ளனர் எனக் காண்பிக்க முயல்கின்றன. அந்த யதார்த்தத்தினை உணர்ந்து தமிழ் மக்களின் நலன்களை மையமாக வைத்து இத்தேர்தலை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முழுமையாக புறக்கணித்து நிற்கின்றது. எமது ஆதரவு எந்த ஒரு கட்சிக்கோ, சுயேட்சைக் குழுவிற்கோ இல்லை. நாம் இத்தேர்தலில் தம்மை ஆதரிப்பதாக கூறுபவர்களிடத்தில் விழிப்பாக இருக்குமாறும் தயவாக வேண்டுகின்றோம்.

இத்தேர்தலில் பங்கெடுப்பதன் மூலம் மாகாண சபைகளைத் தமிழ்மக்கள் தீர்வாக ஏற்றுக்கொண்டு விட்டார்கள் என யாரும் காட்ட முற்படின் அது 26 ஆண்டுகாலம் மாகாண சபைகளை நிராகரித்து நடைபெற்ற உரிமைப் போராட்டத்தில் உயிர் நீர்த்த அனைத்து ஆன்மாக்களுக்கும் செய்யும் மன்னிக்க முடியாத துரோகமாகவே நாம் பார்க்கின்றோம். இத்தேர்தலில் பங்குபற்றுவதா? வாக்களிப்பதா? யாருக்கு வாக்களிப்பது? போன்ற தீர்மானங்களை நாம் ஒவ்வொரு தமிழ் மக்களின் மனச்சாட்சிக்கே விட்டுவிடுகின்றோம்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம்
தலைவர்

செல்வராசா கஜேந்திரன்
பொதுச் செயலாளர்



# ஈ.பி.ஆர்.எல்.எப் பத்மநாபா அணி சுகு சிறீதரன்

கேள்வி:- உங்கள் கட்சி வடமாகாண சபைத் தேர்தலில் பங்குபற்றுவதன் - பங்குபற்றாததன் நோக்கம் என்ன?

பதில் :- இலங்கையின் அரச முறைமையில் மாகாண மட்டத்தில் தமிழர்கள் பங்குபற்ற வேண்டும் அவ்வாறு பங்குபற்றுவதன் ஊடாக மாகாண மட்டத்தில் 13வதின் கீழான அதிகாரங்களை காரிய சாத்தியமாக்க முயல்வது வெட்டிப் பேச்சுக்களைவிட இது மிகவும் பிரயோசமானது.

போதனா வைத்தியசாலைகள் தவிர்ந்த வைத்தியசாலைகள் தேசிய பாடசாலைகள் தவிர்ந்த பாடசாலைகள் உள்ளூர் போக்குவரத்து, மீன்பிடி விவசாயம் சிறு கைத்தொழில்களை நிறுவுதல் அபிவிருத்தி செய்தல் மத்திய அரசின் கீழ் வராத வீதிகளை செப்பனிடல் உள்ளக கட்டமைப்பு வசதிகளை நடைமுறைபடுத்தல் சட்டம் ஒழுங்கு மற்றும் நில அதிகாரத்தை காரியசாத்தியமாக்க முனைதல், நிதி ஆதாரங்களை பிராந்திய மட்டத்தில் ஒருங்கிணைத்தல், சுற்றாடலை பாதுகாத்தல்

கேள்வி:- மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களைக் கொண்ட (சிறப்பாக காணி, பொலிஸ்) மாகாண சபை அரசு ஊடாக, தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்ய எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போகிறீர்கள்?

பதில்:- தமிழ் மக்களின் அபிலாசைகள் தற்போது பலவீனமடைந்திருக்கும் மாகாணசபை அமைப்பு முறையால் சடுதியாக பூர்த்தி செய்ய முடியாது. அதுவொரு பரிணாம நிகழ்ச்சியாகவே நிகழும். இலங்கையின் அரசியல் சூழல் தற்போது இருப்பது போல்தான் எதிர்காலத்திலும் இருக்கும் என்றில்லை. இடையறாத வலியுறுத்தல்கள் கோரிக்கைகள் போராட்ட வழிமுறைகளின் ஊடாக அரசியல் அதிகார பரவலாக்கலை முழுமையாக்கும் நடவடிக்கை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும்.

கேள்வி:- வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்பு பற்றிய உங்கள் நிலைப்பாடு என்ன? அதை இணைப்பதற்கான உங்கள் முயற்சிகள் எவ்வாறானதாய் அமையும்?

பதில்:- வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைப்பது பற்றி கடந்தகாலம் போல் நாம் சிந்திக்க முடியாது. அது கிழக்கு மாகாணம் அழுத்தமான பல்லினத் தன்மையை பெற்றுள்ளது. குறிப்பாக அங்கு வாழும் முஸ்லீம் மக்களின் ஆதரவு முஸ்லீம் சிங்கள மக்களின் ஆதரவு தேவை இதனை ஒரு யாழ் மையநிலையிலிருந்து அணுகமுடியாது. அங்குவாழும் தமிழ் மக்களில் ஒரு பிரிவினரும் இணைப்பை ஆதரிக்கவுமில்லை. இரண்டு மாகாணங்கள் சுயாதீனமாக இணைந்து செயற்படுவது பற்றிய ஒரு பிரிவு 13வது திருத்தச் சட்டத்தில் காணப்படுகிறது. இரு மாகாணங்களும் விரும்பினால் அந்த வகையிலேயே இணைய முடியும்.

கேள்வி:- மாகாண சபைத் தேர்தலில் சிறுபான்மை அரசு ஏற்படும் பட்சத்தில், உங்கள் செயற்பாடு எவ்வாறானதாய் இருக்கும்? (நீங்கள் ஆட்சியில் அல்லது எதிர்க்கட்சியில் இருக்கும் நிலைப்பாடுகளில்)

பதில்:- ஏற்கனவே கூறியது போல் இந்த அரசியல் முறையில் தமிழ் மக்கள் பங்குபற்ற வேண்டும். ஆட்சியில் இருந்தாலும் எதிர்கட்சியில் இருந்தாலும் நாங்கள் இணைந்து செயற்பட வேண்டிய தேவை இருக்கிறது.

சமூகத்திற்கு பாதகமான விடயங்களில் விழிப்புணர்ச்சி ஆக்கபூர்வமான விமர்சனங்கள் அழுத்தங்கள் அவசியப்படுகின்றன


கேள்வி:- தற்போதைய மகிந்த தலைமையிலான அரசு தமிழ் பேசும் (சிறுபான்மை) மக்களின் பிரச்சனையைத் தீர்க்குமா? அவ்வாறாயின் அது எப்படி அமையப் போகிறது? இல்லையாயின் உங்கள் நடவடிக்கைகள் எவ்வாறானவையாய் அமையும்?

பதில்:- இதில் பல பிரச்சனைகள் இருக்கின்றன. இடதுசாரி கட்சிகள் முஸ்லீம் தமிழ் கட்சிகள் தமிழ் மலையக கட்சிகள் அரசியல் அதிகாரப்பகிர்வை ஆதரிக்கின்றன. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் கூட அரசியல் அதிகாரப்பகிர்வை ஆதரிக்கும் ஒரு பிரிவினர் இருக்கிறார்கள். விமல் வீரவன்சாவின் கட்சி, ஹெல உறுமய போன்ற கட்சியில் அதிகாரப் பரவலாக்கலை தீவிரமாக எதிர்க்கின்றன. இதில் அரசுக்குள்ளும் ஒரு ஊசலாட்டம் நிலவுகிறது.

அண்மையில் 13வது கீழான மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை நீர்த்துப் போகச்செய்யும் முயற்சிகளுக்கு எதிராக இடதுசாரி கட்சிகள், சிறுபான்மை சமூகங்களின் கடுமையான ஆட்சேபனையை தெரிவித்திருந்தன. அண்டைநாடு மற்றும் சர்வதேச அளவிலும் தமிழர்களுக்கு அதிகாரப்பரவலாக்கல் முக்கியத்துவம் பெற்ற ஒரு விடயமாக இருக்கிறது.

அரசு அமைத்த உண்மைகளை கண்டறியும் குழுவின் அறிக்கையும் அதிகாரப்பரவலாக்கலையே பரிந்துரைத்திருக்கிறது. உள்ளூர் தேசிய இன சமூகங்களும், நாட்டின் ஜனநாயக சக்திகளும் அதிகார பரவலாக்கலை இடையறாது வலியுறுத்துகின்றன. இத்தகையஅகப்புறச் சூழலில் இந்த அரசு இனப்பிரச்சினை தீர்விலிருந்து நழுவ முடியாது.

அதிகார பரவலாக்கலை ஏற்றுக்கொள்ளும் தென்னிலங்கை சக்திகளின் நட்பையும் நெருக்கத்தையும் நாம் அதிகரிக்க வேண்டும். நிராகரிக்கும் அரசியல் போக்கை தவிர்க்க வேண்டும். சாதகமான விடயங்களில் இணங்கியும் பாதகமான விடயங்களை ஆட்சேபத்தும் செயற்பட வேண்டிய இரட்டை நிலை இருக்கிறது. அவ்வாறு பிரச்சனையை தீர்க்காவிட்டால் நாம் அகிம்சை வழியில் அதிகாரப்பரவலாக்கலுக்கான விழிப்புணர்வு நிலையை மேற்கொள்வதை விட மாற்றுவழி கிடையாது.




யோகநாதன் கண்ணாடி முன்னால் நின்றபடி வளைந்து நெளிந்து தன்னை முழுவதுமாகக் கண்ணாடியில் பார்த்துவிட முனைந்து கொண்டிருந்தார்.அதுவும் தனது தலைக்கும் மீசைக்கும் அடித்த டையையும் மீறி எங்காவது வெள்ளை முடி தெரிந்து விடக்கூடாது என்பதுதான் அவரது கவலை.அதற்காக கன்னத்தின் ஓரங்களையும் மீசையையும் சீப்பால் மேலும் கீழுமாக பல தடைவை கிழறிப்பார்த்து சரி செய்து கொண்டவர் தனது பிடரிப்பக்கத்தையும் முன்னும் பின்னுமாக இரண்டு கண்ணாடியை பிடித்து பார்த்துக் கொண்டவரிற்கு அப்பாடா ஒரு இருபது வயது குறைந்தமாதிரி இருக்கு என்று தனக்கு தானே சொல்லி சமாதானமாகிக் கொண்டாலும் முதன் முதலாக குமுதினியை பார்க்கப்போகிறோம் அவள் தன்னுடைய வயதை 56 எண்டு எடை போட்டு விடுவாளா? என்கிற கவலை அவரது மனதை அரித்துக்கொண்டேதான் இருந்தது. விடுதியின் அறையை விட்டு வெளியேற முதலும் ஒருதடைவை தன்னை கண்ணாடியில் பார்தது்க் கொண்டவர் குமுதினிக்காகவும் அவரது மகளிற்காகவும் வாங்கிய உடைகளின் பையை எடுத்ததோடு குமுதினிக்காக கொடுக்க எடுத்து வைத்திருந்த பணத்தை ஒரு என்பலப்பில் போட்டு சட்டைப்பையில் வைத்துக்கொண்டு வெளியே வீதிக்கு வந்து ஆட்டோக் காரன் ஒருவரை அழைத்து குமுதினியின் விலாசத்தை நீட்டினார். ஆளைப் பார்த்ததுமே ஆட்டோக் காரன் ஐயா எந்த நாடு என்றான்.அவன் ஐயா என்றது எரிச்சலாக இருந்தாலும் வெளிநாடு எண்டு எப்படி கண்டு பிடித்தான் என்று யோகநாதன் ஆச்சரியத்தோடு பிரான்ஸ் என்றார்.ஓ அப்பிடியா நல்லது நானும் சுவிசிலை இருந்தனான் விசா இல்லாததாலை நாட்டிலை பிரச்சனையும் முடிஞ்சிட்டுதெண்டு பிடிச்சு டிப்போட் பண்ணிட்டாங்கள் என்றபடி ஆட்டோவை இயக்கினான். யோகநாதனோ ஆட்டோக் காரனின் கதையை காதில் வாங்காமல் குமுதினியோடு எப்படியெல்லாம் கதைக்கவேண்டும் என்னவெல்லாம் சொல்லாம் எது சொல்லக் கூடாது என்று மனதிற்குள் ஒரு ஒத்திகையே பார்த்துக் கொண்டிருந்தார் அவ்வப்பொழுது ஸ்பீட் பிறேக்கர் வந்து ஆட்டோ அதில் ஏறி விழும்போதெல்லாம் பிரான்சிலிருக்கும் அவர் மனைவி கனகமணி நினைவிற்கு வந்து போய்க்கொண்டிருந்தாள்.

---

87 ல் பிரான்சிற்கு போயிருந்த சங்கானையை சேர்ந்த யோகநாதனின் மனைவி கனகமணி பருத்தித் துறையை சேர்ந்தவர் .ஒப்பிறேசன் லிபறேசனை சாட்டாக வைத்து தான் குடும்பமாய் பருத்தித் துறையிலைதான் இருந்தாகவும் ஆமிக்காரன் வீட்டை உடைச்சு தரைமட்டமாக்கிட்டான் தன்னையும் பிடிச்சு பூசாவிற்கு ஏத்துறதிற்காக கொண்டு போன நேரம் தப்பி வந்திட்டன் மனிசி பிள்ளையை காணேல்லை என்று சொல்லி அசைலம் அடிச்சு விசா எடுத்ததோடை காணாமல் போயிருந்த அவரது மனைவி கனகமணியையும் மகனையும் கண்டுபிடித்து பிரான்சிற்கும் கூப்பிட்டிருந்தார்.இத்தனைக்கும் யோகநாதன் கலியாணம் முடிந்த கையேடையே கொழும்பிற்கு வந்து சேர்ந்தவர் கோயில் திருவிளாவிற்குத்தான் சங்கானைக்கோ பருத்தித் துறைக்கோ போயிருக்கிறார் என்கிற விடயம் பிரான்ஸ் அகதி விண்ணப்பங்களை பரிசீலிக்கிற ஒவ்றாகாரனிற்கு(O.F.P.R.A) தெரியாமல் போனது யோகநாதனது அதிஸ்ரமே.கனகமணியும் வந்துசேர பிறகு ஒரு மகன் ஒரு மகள் என இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். இப்பொழுது யோகநாதனிற்கு வெளிநாடுகளில் வாழும் சராசரித்தமிழ்க்குடும்பங்களைப்போல ஆசைக்கு ஒண்டு ஆஸ்த்திக்கு ஒண்டு அலெக்கேசனுக்கு(உதவித்தொகை) ஒண்டு என்று மூன்று பிள்ளைகள். அடுத்தது என்ன சொந்தவீடு வாங்கவேண்டும் ஆனால் சொந்த வீடு வாங்க யேகநாதனின் தனிச்சம்பளம் காணாது அதாலை கனகமணியும் வேலைக்கு போகவேண்டிதாய் பேச்சுது.இரண்டு பேரின் சம்பள பணத்தையும் கூட்டிக் கழிச்சுப் பார்த்த கடன்தருகிற வங்கிக் காரன் காணாது என்று வாயைப்பிதுக்க.என்ன செய்யலாமென தலையை சொறிந்து கொண்டு நின்ற யோகநாதனிற்கு ஒருதன் சொன்னான் பாரிஸ் லா சப்பலிலை புத்தகக் கடை கவைச்சிருக்கிற சந்திரனை போய் பார் எல்லாம் வெண்டு தருவான் என்றான். அமெரிக்கா கஸ்ரப்பட்டு ஆம்ஸ்ரோங்கை அனுப்பி பார்த்த சந்திரனை விட புத்தகக்கடை சந்திரனை சந்திப்பது சிரமமாகவே இருந்தது எப்போ போனாலும் முதலாளி இல்லை என்கிற வேலைக்காரனின் பதில் ஆனாலும் யோகநாதனின் விடா முயற்சியால் முன் தலையில் முழுச் சந்திரனை தாங்கிய புத்தகக் கடைச சந்திரனை சந்தித்தார்.

---

கடன் வாங்கித் தரலாம் எனக்கு பத்து வீதம் உனக்கு மிச்சம் என்கிற டீலோடு இல்லாத கொம்பனியின் பேரில் கள்ள சம்பள கணக்கு போட்டு வட்டிவீதம் கூடின கடனும் வாங்கி வீடும் வாங்கியாகிவிட்டது.ஆளிக்கொரு அறையென பிள்ளைகளிற்கு மகிழ்ச்சி ஆனால் அறா வட்டி வங்கிக் கடனை நினைத்தே யோகநாதனும் கனகமணியினதும் படுக்கையறையில் நித்திரை காணாமல் போய் விட்டிருந்தது.அதே நேரம் அவர்களிற்கு பொருளாதாரமே குறியாக இருந்ததால் ஊரில் நடக்கும் சண்டையைப் பற்றி எவ்வித கவலையும் இல்லை. ஆயுதம். போராட்டம்.விடுதலை .தமிழீழம் என்கிற சொற்கள் எல்லாம் அன்னியமானவையாகவே இருந்தது இப்படியாகப் போய்கொண்டிருந்த ஒரு நாளில் யோகநாதனோடு வேலை செய்யும் ஆனந்தன் ஆனந்தமாய் ஆடியபடியே வேலைக்கு வந்திருந்தான். என்னடா விசயம் என்று கேட்தற்கு அண்ணை இயக்கம் ஆனையிறவை பிடிச்சிட்டாங்களாம் அப்பிடியே போய் இப்ப சாவச்சேரியிலை சண்டை நடக்குதாம் அடுத்தது யாழ்ப்பாணம்தான் . அதையும் பிடிச்சால் எல்லாரும் ஊருக்கு போலாம் எனறதும்தான் யோகநாதனுக்கு முளையில் பொறி தட்டியது இயக்கம் யாழ்ப்பாணத்தை திரும்ப பிடிச்சால் பருத்துறையிலை இருந்த அவரின்ரை சீதண வீடு வளவும் சங்கானையிலை வாங்கி விட்ட பனங்காணியின்ரை நிலைமையும் என்னவாகும் எண்டு யோசித்துப் பார்த்தவர் அதுகளை முதலில் வித்துத் தொலைக்கவேண்டும் என நினைத்தவர் அதே நேரம் ஊர் செய்திகளையும் தேடிப்பிடித்து படிக்கவும் தொடங்கியிருந்தார்.

---

அவர் பிரான்சிற்கு வந்ததிலை இருந்து இயக்கத்திற்கு ஒரு யுரோ கூட குடுத்தது கிடையாது இவங்கள் யாழ்ப்பாணத்தை பிடிச்சா ஊருக்கு போகேக்குள்ளை ஏதும் பிரச்சனை தருவாங்களோ எண்டு யோசித்தவர் ஆனந்தனிடம் தயங்கிய படியே தம்பி..உண்மையாவே யாழ்ப்பாணத்தை பிடிச்சிடுவாங்களோ என்றார். என்னண்ணை விசர் கதை கதைக்கிறியள் ஆனையிறவே விழுந்திட்டுது யாழ்ப்பாணம் சின்னப் பிரச்சனை என்ரை மருமகன் காரன் ஒருத்தன் இயக்கத்திலை பெரிய ஆளா இருக்கிறான் அவனோடை கதைச்சனான் பிடிச்சிடுவம் எண்டு சொன்னவன் என்று இயக்கத்திற்கு போய் எங்கே இருக்கிறான் என்றே தெரியாத மருமகனோடு கதைத்தாய் கதைவிட்டான் ஆனந்தன்.இப்போதைக்கு யேகநாதனிற்கு ஆனந்தன்தான் அன்ரன் பாலசிங்கம் அவனிட்டை ஆலோசனை கேக்கிறதைத் தவிர வேறை வழியில்லை.

தம்பி நான் இங்கை வந்திலையிருந்து இவங்களுக்கு காசு குடுத்ததேயில்லை ஊருக்கு போகேக்கை ஏதும் பிரச்சனை தருவாங்களோ என்றர். என்னது ஒரு சதம்கூட குடுத்ததேயில்லையா நீங்கள் எல்லாம் தேச துரோகியள் உங்களையெல்லாம் போட்டுத் தள்ளவேணும் என்றவனிடம். சரி ஏதோ தெரியாத்தனமாய் பிழை விட்டிட்டன் ஏதாவது பரிகாரம் இருக்கா என்று கேட்டவரிற்கு. சரி சரி அவங்கடை அலுவலக்துக்கு போய் உங்கடை பங்களிப்பை செய்திட்டு அவங்கள் தாற பற்றுச்சீட்டை பத்திரமாய் வைச்சிருந்கோ ஊருக்கு போகேக்குள்ளை அதை கொண்டு போனால் ஒரு பிரச்சனையும் இல்லை ஊருக்கு போகேக்குள்ளை சொல்லுங்கோ என்ரை மருமகனிட்டையும் சொல்லி விடுறன் ஒரு பிரச்சனையும் இல்லையென்றான். இப்ப யோக நாதனிற்கு கொஞ்சம் நிம்மதி ஆனால் வேலைப்பழு அதே நேரம் காசு குடுக்க மனமில்லாததாலும் நாட்கள் இழுபட்டுக்கொண்டே போக நோர்வேயின் அனுசரணையுடன் சமாதானப் பேச்சு வார்த்தை என்று செய்தியில் படித்தார்.ஆனந்தன் வேறை ஊருக்கு போய் விட்டிருந்தான் எதுக்கும் அவன் வரட்டும் ஊர் நிலைமையை கேட்டு காணி என்ன விலை போகுது எண்டு அறிஞ்சு பிறகு இயக்கத்திக்கு காசு குடுகக்லாமென முடிவெடுத்திருந்தார்.

---

ஊருக்கு போயிருந்த ஆனந்தனும் திரும்பி வந்து யேகநாதனிற்கு கதை கதையாய் சொல்லத் தொடங்கியிருந்தான் அண்ணை ஒரு பிரச்சனையுமில்லை ஏ 9 பாதையாலை யாழ்ப்பாணம் போங்கோ கிளிநொச்சியிலை இறங்கி பியரும் அடிச்சிட்டு சேரனிலையோ பாண்டியனிலையோ சாப்பிட்டு போகலாம் சாப்பாடு அந்த மாதிரி.ஆனா கட்டாயம் திரும்ப சண்டை திரும்ப தொடங்கும் அதுதான் கடைசி சண்டை யாழ்ப்பாணத்தை பிடிச்சிடுவம் எண்டுதான் எல்லாரும் சொல்லுறாங்கள் நீங்கள் காசு குடுத்த றிசீற்றை கொண்டு போங்கோ இல்லாட்டி அங்கை வைச்சு பெரிய தொகையா கேட்பாங்கள். கனடாவிலை இருந்த வந்த ஒருத்தர் கனடாவிலை ஒரு சதமும் குடுக்கேல்லையாம் ஓமந்தையிலையே ஆளை மறிச்சு காசு கேட்டிருக்கிறாங்கள் அவரும் குடுக்கேல்லை பாஸ்போட்டை பிடுங்கிபோட்டாங்களாம்.ஆனா கனடா காரரோ காசு குடுக்கிறேல்லையெண்டு அடம்பிடிச்சு கண்காணிப்புக் குழுவிட்டைப்போய் முறைப்பாடு செய்து கடைசியிலை கண்காணிப்புக் குழுக்காரர்தான் கிளிநொச்சி நந்தவனம் அலுவலகத்திலை போய் பாஸ்போட்டையும் வாங்கிக் குடுத்து ஓமந்தைவரைக்கும் கொண்டு வந்து விட்டவங்காளாம் என்று புளியை வேறு கரைத்துவிட்டிருந்தான். யோகநாதனிற்கு ஒரு சந்தேகம் ஏனடா சாப்பாட்டுக் கடையளின்ரை பெயரெல்லாம் சேரன். சோழன்

பாண்டியன் என்று பெயர் வைச்சிருக்கிறாங்களே ஏன் எங்கடை நாட்டிலை அரசர்மார் ஒருத்தரும் இருக்கேல்லையோ??சங்கிலியன் பண்டார வன்னியன் எண்டெல்லாம் இருந்தவங்கள்தானே என்றதற்கு. அண்ணை இப்பிடி கேணைத்தனமான கேள்வி ஒண்டையும் அங்கைபோய் கேட்டிடாதையுங்கோ பிறகு பங்கருக்கை போட்டு பாம்பும் பல்லியும் விட்டிடுவாங்கள் என்று ஆலோசனை கூறி அனுப்பி வைத்தான்.

தமிழர் ஒருங்கிணைப்பக் குழு அலுவலகத்திற்குள் நுளைந்து அங்கிருந்த ஒருவரிடம் போய் தயங்கிய படியே தம்பி உங்களிற்கு பங்களிப்பு செய்ய வந்திருக்கிறன் என்றபடி இரண்டாய் மடித்திருந்த 50 யுரோவை விரித்து நீட்டவே அவரை ஆச்சரியத்தோடு நிமிர்ந்து பார்த்தவன் பற்றுசீட்டுப் புத்தகத்தை எடுத்து யோகநாதனது பெயர் விபரம் விலாசம் எல்லாம் கேட்டு எழுதி யவன் அவரிடம் 50 யுரோவை வாங்கிவிட்டு பற்றுச் சீட்டை நீட்டினான். அதை வாங்கியவர் இலக்கம் தலைவரின் கையெழுத்து எல்லாம் சரியா இருக்கா என பார்த்து பத்திரப் படுத்திக்கொண்டு அங்கிருந்து போய்விட்டார்.ஆனால் அவர் ஊருக்கு நேரமாய்பார்த்து மாவிலாறில் சண்டை தொடங்கிவிட்டிருந்தது யாழ்ப்பாணம் விழட்டும் பிறகு போலாமென காத்திருந்தவரிற்கு முள்ளிவாய்க்காலில் எல்லாம் முடிந்து போய்விட்டது என்று தெரியவந்ததும் ப்ச்.....50 யுரோ அனியாயமாய் போயிட்டுதே என்று பொச்சுக்கொட்டியர் அந்த றிசீற்றை எடுத்து கிழித்து எறியலாமென நினைத்துக்கொண்டிருந்தபோதுதான் தமிழ்நாட்டுத் தலைவர் ஒருவர் எங்கள் தலைவர் தென்னாபிரிக்காவில் தங்கியிருக்கிறார் விரைவில் வருவார் என்று சொன்னதாய் இங்கத்தைய இணையத் தளம் ஒன்று வெளியிட்ட செய்தியை படித்தவர் றிசீற்றை எறியாமல் பொலித்தீன் ஒன்றில் போட்டு பத்திரப் படுத்திக்கொண்டார்.இப்ப உங்களிற்கு யோகநாதனைப்பற்றி ஓரளவு உங்களிற்கு புரிந்திருக்கும் இனி அவரது மனைவி கனகமணியை பற்றி பார்ப்பம்.

---

கடனை கட்டுவதற்காக ஓடியோடி இரண்டு வேலை இடையில் கிடைக்கிற நேரத்தில் மெகா சீரியல்களை ஒரேயடியாகப் பார்த்துமுடிப்பது தீவிர கடவுள் பக்தி கொண்டகொஞ்சம் அப்பாவித்தனம் அவ்வளவுதான். வேலைக்கு போய்விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த ஒரு குளிர் மாலைப் பொழுதில் சலையோரத்தில் குவித்திருந்த பனியில் கால் கால் வழுக்கிவிழுந்த கனகமணிக்கு முதுகு வலி.வலிக்கு விக்சை தடவிக்கெண்டு வேலைக்கு போய்க்கொண்டிருந்தவர் சில மாதம் கழித்து ஒரு நாள் காலை கட்டிலை விட்டு எழும்பமுடியாமல் போகவே அம்புலன்சிற்கு போனடித்து வைத்தியசாலைக்கு போய் ஸ்கான் எடுத்த பார்த்தபோதுதான் அவரது முள்ளந்தண்டு எலும்பு ஒண்டு வெடித்து இரத்தம் கண்டிப்போயிருந்தது. விழுந்த உடனேயே வைத்தியம் பாக்கததால் இப்பொழுது சத்திர சிகிச்சை செய்து பழுதடைந்த முள்ளந்தண்டு எலும்பைஎடுத்து அதுக்கு பதிலாக செயற்கை முள்ளந்தண்டை பொருத்தவேண்டும். அதுவும் பொருத்தியாகி விட்டது ஆனால் இப்பொழுது கனகமணிக்கு இரண்டு வேலையில்லை ஒரு வேலைக்குகூட ஒழுங்காய் போக முடியாத நிலை பாரம் தூக்க முடியாது நீண்ட நேரம் கதிரையில் இருக்க முடியாது முடிந்தளவு படுத்தே இருக்கவேண்டும்.இப்பவெல்லாம் அவரிற்கு சீரியல் பார்க்கவும் அக்கம் பக்கம் இருந்த தமிழ் குடும்பங்களோடு அரட்டை அடிக்கவும் அதிகளவு நேரம் கிடைத்திருந்தது.அதே நேரம் தான் தெரியாமல் செய்த பாவம்தான்தான் ஏதோ தனக்கு இப்படி வருத்தம் வந்து விட்டது என நினைத்து அதற்கு பரிகாரமாக ஊரில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் சிலரிற்கு உதவியும் செய்யத் தொடங்கியிருந்ததோடு இப்போ சண்டையும் முடிந்து நாலுவருசமாகி சனமெல்லாம் ஊருக்கு போய் வருவதால் யோகநாதனையும் ஊருக்குப் போய் வீடு காணிகளை வித்துப்போட்டு வரும்படிநச்சரிக்கத் தொடங்கியிருந்தார்.

பிரான்சில் நடந்த ஊர்வலங்களிலையெல்லாம் புலிக் கொடியோடைமுன்னுக்கு நின்ற ஆனந்தன்கூட அதே ஏ.9 பாதையாலை ஊருக்குப் போய்விட்டு வந்து அண்ணை ஒரு பிரச்சனையும் இல்லை றோட்டெல்லாம் அந்தமாதிரி போட்டிருக்கிறாங்கள் கிளிநொச்சியிலை சேரன் இல்லாதது மட்டும்தான் சின்னக்குறை என்று சொன்னதன் பின்னர்தான் ஊருக்குப் போகும் முடிவினை யோகநாதன் எடுத்திருந்தார்.அந்தநேரம்தான் வழக்கமாக அரட்டை அடிக்கப்போகும் சங்கீதா வீட்டிலிருந்து ஒரு படத்தோடைவந்த கனகமணி யோகநாதனிம் இஞ்சாருங்கோ இந்தப் பிள்ளை இயக்கத்திலை இருந்ததாம்

> **பிரான்சில் நடந்த ஊர்வலங்களிலையெல்லாம் புலிக்கொடியோடைமுன்னுக்கு நின்ற ஆனந்தன்கூட அதே ஏ.9 பாதையாலை ஊருக்குப் போய்விட்டு வந்து அண்ணை ஒரு பிரச்சனையும் இல்லை றோட்டெல்லாம் அந்தமாதிரி போட்டிருக்கிறாங்கள் கிளிநொச்சியிலை சேரன் இல்லாதது மட்டும்தான் சின்னக்குறை என்று சொன்னதன் பின்னர்தான் ஊருக்குப் போகும் முடிவினை யோகநாதன் எடுத்திருந்தார்.**

புருசன் காரனும் இயக்கத்திலை இருந்து கடைசி சண்டையிலை செத்துப் போனானாம்.5 வயதிலை ஒரு மகள் இருக்காம் சொந்தத்தொழில் தொடங்க உதவி கேட்டிருக்கு எண்டு சங்கீதாவுக்கு தெரிந்த ஆரோ கேட்டிருந்தவையாம் நான் ஒரு நூறு யுரோ தாறன் அனுப்பி விட்டிட்டு நீங்கள் உருக்கு காணி விக்கப் போறீங்கள் தானே காணி வித்து வாற காசிலை கொஞ்சத்தை இந்தப் பிள்ளைக்கு குடுத்து ஏதாவது தொழில் தொடங்கிற வசதி செய்து குடுத்திட்டு வாங்கோ என்று இதிலை அந்த பிள்ளையோடை தொடர்பு கொள்ள ஒரு கொமினிக்கேசன் நம்பரும் விபரமும் இருக்கு எண்டு ஒரு பேப்பரையும் நீட்டினாள். அதனை பெரிய அக்கறையில்லாமல் வாங்கி மேசையில் வைத்தவர்.இரவு கிளாசில் விஸ்கியை ஊற்றி கோலாவை கலக்கத்தொடங்கியபோது இந்தாங்கோ நாளைக்கு அந்தபக் பிள்ளைக்கு அனுப்பிற காசு என்று கனகமணி நூறு யுரோவை மேவையில் வைத்துவிட்டு சீரியல் பாக்கப் போய்விட்டிருந்தாள். பிள்ளைகள் எல்லோரும் வளர்ந்து விட்டதால் இப்பொழுதெல்லாம் அவர்கள் எங்கே போகிறோம் எத்தனை மணிக்கு வருகிறோம் என்றெல்லாம் சொல்வதில்லை அதனால் யாரும் வீட்டில் இல்லை.இரண்டாவது கிளாசையும் முடித்து விட்டவரிற்கு கனகமணி கொடுத்த படம் நினைவிற்கு வர அதனை எடுத்துப் பார்த்தார் மெல்லிதாய் நெற்றியில் திருநீற்று குறி இழுத்த முகம் அளவான அழகான உடல்வாகு கையில் தூக்கிய குழந்தை.

படத்தில் அவளது கையில் இருந்த குழந்தை தனது கட்டை விரலால் மறைத்தபடி மீண்டும் உற்றுப் பார்த்தார். கனகமணியை விட ஒரு நாப்பது கிலோவாவது குறைவாய் இருக்கும். கலர் கொஞ்சம் குறைவுதான் ஆனாலும் களையான முகம் கனகமணி வருத்தம் வந்து படுக்கையிலை விழுந்ததுக்கு பிறகு அவளிற்கு பக்கத்திலை படுத்ததே பல வருசமாகிது ..சே ..வேண்டாம் என்று மேசையில் படத்தை போட்டுவிட்டு மீண்டும் ஒரு கிளாசை நிரப்பி ஒரே மடக்கில் குடித்தவரிற்கு மீண்டும் படத்தை பார்க்கவேண்டும் போல் இருந்தது. படத்தை எடுத்தார் சந்தர்ப்பமும் சூழ்நிலையும் சரிவராதவரைக்கும்தான் ஒருவன் யோக்கியன் .இரண்டுமே சரிவந்துவிட்டால் அனைவருமே அயோக்கியன்தான் இப்பொழுது தான் யோக்கியனா??அயோக்கியனா ??என்கிற குழப்பம் யோகநாதனிற்கு. மறுநாள் கனகமணி கொடுத்த விபரத்திற்கு பணத்தை அனுப்பிவிட்டு அவள் கொடுத்த விபரத்தில் இருந்த கொமினிக்கேசன் இலக்கத்திற்கு போனடித்து குமுதினியை வரவளைத்து பணம் எடுப்பதற்கான விபரங்களை கொடுத்திருந்தார். குமுதினியுடன் கதைத்த பின்னர் நீண்ட நேரமாகியும் குமுதினின்குரல் அவரது காதிற்குள்ளேயே நின்றிருந்தது.அதற்கு பின்னர் கனகமணிக்கு தெரியாமலேயே ஒருதடைவை பணம் அனுப்பி விட்டு சில தடைவைகள் கொமினிக் கேசனிற்கு வரச்சொல்லி கதைத்தும் இருந்தவர் விரைவில் நேரடியாக சந்திப்பதாய் கூறியிருந்தார்.அவர் ஆழ்மனதின் மூலையில் இத்தனைநாள்வரை ஓரமாய் உறங்கிக் கிடந்த மிருகம் மெதுவாய் எழுந்து தனது முன்னங்கால்களை நீட்டி சோம்பல் முறிந்துக்கொண்டது.

கோப்பாய் சந்தியில் இருந்த கொமினிக்கேசனிற்கு முன்னால் ஆட்டோ வந்து நின்றதும் ஐயா இதுதான் நீங்கள் சொன்ன கொமினிக்கேசன் என்றதும் யோகநாதன் ஆட்டோக்காரன் தன்னை மீண்டும் ஐயா என்று அழைத்த எரிச்சலுடன் இறங்கி பணத்தை கொடுத்து விட்டு இறங்கினார். குமுதினிக்கு தான் வரும் விபரத்தை ஏற்கனவே சொல்லி இருவரும் கொமினிக் கேசனில் சந்திப்பதாக ஏற்பாடு செய்திருந்தனர்.இதுவரை தொலைபேசியில் அண்ணா என்று அழைத்த குமுதினி தன்னை நேரில் பார்த்ததும் ஆட்டோக் காரனைப்போல ஐயா என்று கூப்பிட்டு விடக் கூடாது என்கிற ஒரு பயம்வேறு யோகநாதனிற்கு இருந்தது. கொமினிக்கேசனிற்குள் மகளோடு இருந்த குமுதினியை இலகுவாக அடையாளம் கண்டு கொண்டார்.படத்தில் பார்த்தை விட அவள் அதே திறு நீற்றுக் குறியுடன் நேரில் இன்னமும் அழகாகவே இருந்தாள் மிருகம் இப்பொழுது கொட்டாவி விட்டுக்கொண்டது.

அங்கேயே அவரை சந்தித்து கதைத்துவிட்டுப்போகும் திட்டத்தோடு வந்திருந்த குமுதினியிடம் வீட்டிற்கு போகலாமா என்றதும் அவள் தயங்கிய படியே அண்ணா நீங்கள் வாற அளவுக்கு வசதியான வீடு இல்லை என்றதும் பரவாயில்லை கட்டாயம் வீட்டை கூட்டப்போகவேணும் என்று வற்புறுத்தியதால் அங்கேயே கைதடி வீதிப் பக்கமாக அழைத்துப் போனாள் அங்கு தென்னங்காணி ஒன்றை அடுத்து இருந்த வெளியில் பல குடிசைகள் இருந்தது அனைத்துமே இறுதி வன்னி யுத்தத்தால் பாதிக்கபட்டு வந்தவர்களிற்கு தொண்டு நிறுவனத்தால் அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தது அதில் ஒன்றுதான் குமுதினியினுடையது. குடிசை வாசலில் ஒரு பிளாஸ்ரிக் கதிரையை போட்டு அண்ணை இதிலை இருங்கோ என்று சொன்னதும் என்னை அடிக்கடி அண்ணை எண்டாமல் யோகன் எண்டே கூப்பிடலாமென்றபடி தான் கொண்டு வந்த பொருட்களை அவளிடம் நீட்டினார் மகளிற்கோ புது உடுப்பக்களை பார்த்ததும் ஒரே மகிழ்ச்சி அவற்றையே புரட்டிப் புரட்டி பார்த்துக்கொண்டு நின்றவளிடம் குமுதினி பணம் கொடுத்து ஓடிப்போய்


**மாகாண நீதிமன்றுகளிலும் சபைகளிலும் வழக்காடுதல்,**
**சத்தியப்பத்திரம் தயாரித்தல், ஸ்பொன்சர் படிவங்கள்**
**நிரப்புதல், பிரதிகளை அத்தாட்சிப்படுத்துதல்,**
**மொழிபெயர்ப்புப் பணிகள்**

**இவை அனைத்திற்கும்**

**கனக மனோகரன்**

சட்டத்தரணி (இலங்கை)

சத்தியப்பிரமாண ஆணையாளர்- கனடா

ஒன்றாறியோ சட்டசபையின் அங்கீகாரம் பெற்ற சட்டவாதி

416.531.1650 Cell: 647.990.1650

Fax: 416.531.3466

Legal Counsel Licensed By The Law Society of Upper Canada

**720, Kennedy Road, #311, Scarborough**

பெப்சி வாங்கி வா என்று அனுப்பி விட்டிருந்தவள் யாரெண்டே தெரியாத எங்களிற்கு கடவுள் மாதிரி வந்து எவ்வளவோ உதவியள் செய்யிறீங்கள் நன்றி எனும்போதே அவளது கண்கள் கலங்கி தொண்டை லேசாய் அடைத்தது.

செருமி சமாளித்தபடி எங்களைப் பற்றி போனிலை எல்லாம் சொல்லிட்டன் ஆனா உங்களைப் பற்றி எதுவுமே கேக்கேல்லை உங்களுக்கு எத்தினை பிள்ளையள்? மனிசி சுகமாய் இருக்கிறாவோ ?என்றதும். பொய் சொல்லுவதை அவள் கண்டு பிடித்துவிடாமல் இருக்க அவளிடம் இருந்து பார்வையை திருப்பியவர் எனக்கு ஒரேயொரு மகன் மனிசி .. மனிசி வந்து ..என்று இழுத்தவரிற்கு கனகமணி கண்முன்னே வந்ததால் எதுவும் பேசாமல் வலக் கையை நீட்டி வானத்தை நோக்கி காட்டவே ..ஓ மன்னிச்சுக் கொள்ளுங்கோ என்ன நடந்தது என்று குமுதினி பரிதாபமாக கேட்டாள்.அக்சிடன்ட் ....ஒரு நாள் காலைமை வேலைக்கு போறதுக்காக பஸ்சுக்கு காவல் நிண்டநேரம் தண்ணியடிச்சிட்டு வந்த லொறிக்காரன் ஒருத்தன் அடிச்சு விட்டிட்டான் என்று இதயத்தை தடவினார். மிருகம் தனது நாவால் உடலை நக்கத் தொடங்கியிருந்தது .

மகள் கொண்டு வந்த பெப்சியை வாங்கி குடித்துவிட்டு விடை பெற்றவர் அடுத்தடுத்த நாட்களும் தொடர்ச்சியாக குமுதினியை சந்தித்ததோடு மட்டுமல்லாமல் அவளையும் மகளையும் வெளியே கோயிலிற்கும் கடைகளிற்கு அழைத்துசெல்லவும் தொடங்கியிருந்தார். இது ஆரம்பத்தில் குமுதினிக்கு சங்கடமாக இருந்தாலும் பிறகு அவளிற்கும்இது ஒருமாற்றமாகவும் கணவனின் நினைவுகளில் இருந்தும் போராளியாக இருந்து காதலித்து சாதிக் கட்டமைப்புக்களை உதறி திருமணம் செய்ததால் இப்பொழுது தனது உறவுகளாலேயே ஏற்கப்படாமல் தனித்துப்போன கடந்தகால மன அழுத்தங்களில் இருந்தும் விடுபட்டு ஒரு ஆறுதலையும் கொடுத்திருந்தது.

ஒவ்வொரு நாளும் குமுதினியை சந்திக்கப் போகு முன்பு மீசையிலும் தலையிலிலும் நரை தெரிகின்றதா என்று பரிசோதனை செய்வதே யோகநாதனிற்கு பெரும் வேலையாய் இருந்தது ஆரம்பத்தில் நல்லூர் கோயிலிற்கு வருவதற்கே தயங்கிய குமுதினி நாலு நாள் கழித்து இன்று கடற்கரைக்கும் பின்னர் படத்திற்கு வர சம்மதித்திருந்தாள்.இந்த மாற்றத்திற்காகத்தான் அவரும் காத்திருந்தார்.படம்பாக்கப்போகமுதல் கடற்கரையில் வைத்தே குமுதினியை வழிக்கு கொண்டுவந்துவிடுவது இதுதான் அவரது திட்டம்.

காரைநகர் கசோரனா கடற்கரையில் வாங்கிக் கொடுத்த பட்டத்தோடு குமுதினியின் மகள் ஓடிக்கொண்டிருந்தாள். அவள் நல்லா வரவேணும் நல்லா படிக்கவேணும் நல்லதொரு எதிர்காலம் அவளிற்கு கிடைக்கவேணும் ஆனால் நீ இங்கையிருந்து இந்த சமூகத்திலை தனியாளாய் உன்னாலை அதை செய்ய ஏலுமா??என்று குமுதினியின் அனைத்துகவலைகளையும்யோகநாதன் தன்னுடைய கவலைகளாக்கி சொல்லிவிட்டு இதெல்லாம் எப்பிடி செய்யப்போறாய் என்று விட்டு அவளைப் பார்த்தார். அவளின் பதிலோ பெரு மூச்சோடு குனிந்து கடற்கரை மணலில் கால் பெருவிரலால் கீறுவதாகவே இருந்தது.இதயத் துடிப்பு கொஞ்சம் அதிகரிக்க அவளிடம்.

அதுக்கு ஒரு வழி இருக்கு வெளிநாடு போகவேணும் அங்கை போனால் எல்லாமே நடக்கும்.

எப்பிடி??

போறது சுலபம் ஆனால் அது உன்னிலைதான் இருக்கு

என்னிலையா??

ம்....

எப்பிடி ??

எனக்கும் துணை இல்லை உனக்கும் துணை இல்லை..

அவளையறியாமலேயே அவளது கை இடுப்பை நோக்கிப் போனது அங்கு பிஸ்ரல் இல்லை பழைய பழக்க தோசம் என்று புரிந்தது.தலையை சாய்த்து அவனை பார்த்தாள்...

உனக்காவும் உன்ரை மகளின்ரை எதிர் காலத்துக்காவும்தான் சொல்லுறன் மற்றபடி எனக்கொண்டும் இல்லை நீ விரும்பினால் வெளிநாடு வரலாம் அவ்வளவுதான்.

பட்டம் குத்தி கடல்நீரில் விழுந்ததில் கிழிந்துபோக அதைத் துக்கியபடியே அவள் அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தாள்.

பேருந்து யாழ் நகரை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது இறுகிய முகத்தோடு அமர்ந்திருந்த அவர்களிற்கு நடுவில் குமுதினியின் மகள் சந்தோசமாய் சொக்லேற் சாப்பிட்டபடி அமர்ந்திருந்தாள். தனது மகளின் எதிர்காலம் பற்றிய பெரியதொரு கேள்வியும் அதைப்பற்றிய பயமும் நிரவியிருந்த இடத்தை மெல்ல மெல்ல வெளிநாட்டுக் கனவு விழுங்கத்தொடங்கியிருந்தது.பேருந்து நகரத்தில் நின்றிருந்தது மெதுவான குரலில் குமுதினி நீ விரும்பாட்டில் போகலாம் ஓட்டோ பிடிச்சு விடுறன் என்றார்.ஆனால் அவள் அங்கேயே மௌனமாய் நின்றிருந்தாள். தனது சட்டைப்பையில் ஏற்கனவே எடுத்திருந்த பட றிக்கற்றுக்ளோடு யோகநாதன் தியேட்டரை நோக்கி நடக்க ஆரம்பிக்க குமுதினி மகளோடு பின்தொடரத் தொடங்கியிருந்தாள்.

---

கெழும்பில் பிரபல நட்சத்திர விடுதியொன்றில் தனித்தனியாக இரண்டு கட்டில்கள் போடப் பட்டிருந்த அறை ஒன்றில் பகல் முழுதும் கொழும்பை சுற்றி பார்க்க அலைந்ததில் குமுதினியில் மகள் உறங்கிப் போயிருந்தாள். குமுதினியும் களைத்துப் போயிருந்தாள்.நாளைக்கு பாஸ்போட் எடுக்கிறதுக்கு போகலாம் எனக்கு தெரிஞ்ச ஒரு பெடியன் இருக்கிறான் அவனிட்டை காசைக் குடுத்தால்சரி அலுவல் எல்லாம் கெதியா முடிச்சுத் தருவான் என்றபடி கிளாசில் இருந்த விஸ்கியை ஒரே மடக்கில் குடித்தவர் குமுதினியை திரும்பிப் பார்த்தார். மகளிற்கு பக்கத்தில் சுவரில் சாய்ந்தபடி அமர்ந்திருந்தவள் ம்...என்கிற பதிலை மட்டும் கொடுத்தாள். இன்றைய இரவின் இந்த தனிமைக்காகத்தான் யோகநாதன் அவளை கொழும்பிற்கு அழைத்து வந்திருந்தார். மகளை விட்டிட்டுவந்திருந்தால் இன்னும் நல்லாயிருந்திருக்கும் ஆனால் தனிய விடமாட்டன் எண்டு அடம் பிடிச்சு கூட்டியந்திட்டாள் என்கிற சின்ன கோவமும் யோகநாதினிற்கு இருந்தது. வெளிநாட்டு கனவையும் அவளது மகளது எதிர் காலம் பற்றியும் திரும்ப திரும்ப சொல்லி குமுதினியை மூளைச் சலவை செய்து அவர் என்ன சொன்னாலும் தலையாட்டும் நிலைக்கு குமுதினி வந்திருந்தாள்.இரண்டாவது கிளாசையும் முடித்தவர் மெதுவாக எழுந்து அறை விளக்கை அணைத்துவிட்டு குமுதினிக்கு அருகில்போய் அவளது கன்னத்தை மெதுவாக தனது விரல்களால் தடவத் தொடங்கவும் மற்றைய கட்டிலில் மாறி இருந்தவள்.

பயமாயிருக்கு...

நான் தான் இருக்கிறனே பிறகென்ன

என்னை கைவிட்டிட மாட்டீங்களே..

எத்தனையாவது தரம் இதையே கேக்கிறாய் சத்தியமா கைவிடமாட்டன் என்றபடியே அவரது கைகள் கழுத்துவழியாக கீழே இறங்கத் தொடங்கியிருந்தது.

மகள் இருக்கிறாள் வேண்டாம்.

அவள் நல்ல நித்திரை..

பாதுகாப்பு உறையெல்லாம் இருக்கா.

இன்பம் எப்பவும் இயற்கையா இருந்தால்தான் எனக்கு பிடிக்கும் என்றபடி தனது பையில் இருந்து எடுத்த குளிசைகளில் ஒன்றை அவளது உள்ளங்கையில் வைத்து இதைப் போடு என்று தண்ணீர் போத்தலையும் நீட்டினார். உணர்வுகள் என்பது தூண்டப் படாதவரை மட்டுமே கட்டுப் படுத்தமுடியும் குமுதினி குளிசையை வாயில் போட்டு தண்ணீரை குடித்து முடித்து படுக்கையில் சரிந்து கொண்டாள். இரை இப்போது மிருகத்தின் கால்களிற்கிடையில்...

---

கொழும்பில் பத்துநாட்கள் மகிழ்ச்சியாக கழித்தவர்கள் ஊருக்கு திரும்பியிருந்தார்கள். யோகநாதனும் பருத்துறை வீடு காணியை விற்றுவிட்டிருந்தார். சங்காளை பனங்காணிக்கு விலை சரிவரவில்லை காரணம் காணிக்குள் பனைகளே இருக்கவில்லை.திரும்பவும் ஒரு ஆறு மாதத்தால் அதை சாட்டாக வைத்து திரும்பவும் வருவதாக முடிவு செய்திருந்தார்.குமுதினியும் குடிசையை விட்டு வாடகை வீட்டிற்கு மாறியிருந்தாள்.அடுத்தடைவை வரும்போது ஸ்பொன்சர் அலுவல் எல்லாம் செய்து கலியாணம் எழுதுவதாக சத்தியம் செய்து விட்டு பிரான்சிற்கு திரும்பிவிட்டிருந்தார் அதற்கு பிறகு வாரத்தில் ஒரு தடைவை தொலைபேசிமட்டும் குமுதினிக்கு வரும். நாட்கள் ஓடிக்கொண்டிருந்த ஒரு பொழுதில் திடுக்கிட்ட குமுதினி யோகநாதன் வந்து போன மாதங்களில் இருந்து கைவிரலில் திரும்ப திரும்ப எண்ணிப் பார்த்தாள்.இதயத் துடிப்பு அதிகரிக்கத் தொடங்கியிருந்தது.ஊரில் இருந்த ஒரு வைத்தியரிடம் போனதும் அவரும் உறுதி செய்திருந்தார் .பயம். மகிழ்ச்சி .கோபம். என்று எல்லாம் கலந்த கலவையாய் அவசரமாக கொமினிக்கேசனிற்குள் புகுந்து யோகநானிற்கு போனடித்து எடுக்கச் சொல்லி விட்டு காத்திருந்தவளிற்கு அழைப்பு வந்தது.தயங்கியபடி விடயத்தை சொன்னதும் ஏன் குளிசை ஒழுங்கா போடேல்லையோ எனத் தொடங்கியவர் கருவை உடனடியாக கலைத்துவிடும்படியே பதில் வந்தது. நாலு மாதமாகிவிட்டது உள்ளூரில் செய்யமுடியாது செய்தால் விடயம் ஊர. முழுக்க பரவி விடும் வெளியூரில் போய் செய்வதற்கு தனக்கு ஆட்களைத்தெரியாது நீங்கள் தானே கலியாணம் செய்யிறதாய் சத்தியம் பண்ணீங்கள் பிறகெதுக்கு அழிக்கச் சொல்லுறியள் என்று அழுதாள் கெஞ்சினாள் அழித்துவிடு என்பது மட்டுமே பதிலாக வந்து கொண்டிருந்தது இறுதியில் ஊரிலை யாரிட்டையோ வாங்கின பிள்ளைக்கெல்லாம் நான் அப்பாவாக முடியாது என்கிற வசனத்தோடு தொலைபேசி துண்டிக்கப்பட்டது. குமுதினிக்கோ இரண்டு கிபீர்கள் பறந்து வந்து பக்கத்தில் குத்துக்கரணமடித்து குண்டு போட்டதைப்போல ஒரு உணர்வு திரும்ப போனடித்துப் பார்த்தாள் வேலை செய்யவில்லை. கோபத்தில் ஏதாவது அவர் அப்படிச் சொல்லியிருக்கலாம் அடுத்தநாள் போன் வரும் என எதிர்பார்த்தாள் வரவில்லை தானே கொமினிக்கேசனிற்கு போய் போனடித்துப்பார்தாள் வேலை செய்யவில்லை இப்படியே ஒவ்வொரு நாளும் போனடித்துப்பார்த்தே இரண்டு வாரங்கள் கழிந்து விட்டிருந்தது.

அன்றும் வழைமைபோலமகளுடன் கொமினிக் கேசனிற்குள் நுழைந்ததுமே அங்கிருந்தவன் """என்ன வழைமையான நம்பருக்குத்தானே என கேட்டபடி இலக்கங்களை அழுத்தியவன் உதட்டைப் பிதுக்கி தலையாட்டியபடி வேலை செய்யவில்லையென்றவன் என்ன ஏதும் பிரச்சனையோ என்றான். ஓம் இருக்கிறதை விட்டிட்டு பறக்கிறதக்கு ஆசைப் பட்டிட்டன் என்றபடி அங்கிருந்து வெளியேறியவள் வயிற்றைத்தடவிப் பார்த்தாள் கொஞ்சம் வெளியே தெரியத் தொடங்கியிருந்தது. மகளிற்கு பிடித்தமான ஐஸ்கிறீம் சொக்லெற் எல்லாம் வாங்கிக் கொடுத்துவிட்டு ஒரு உணவகத்தினுள் புகுந்து இரண்டு பிரியாணி பாசல்களும் வாங்கிக் கொண்டு வீதியில் இறங்கி நடக்கத் தொடங்கியிருந்தாள்.

பக்கத்து வீட்டிற்கு அரட்டையடிக்கப் போயிருந்த கனகமணி பதட்டத்தோடு என்னப்பா செய்தி அறிஞ்சனியளோ என்றபடி வந்தவளை இடை மறித்து நான் ஊரிலை இருந்து வந்த உடைனையே சொல்ல நினைச்சனான் அவள் சரியில்லையெண்டு ஆனா நீ கவலைப் படுவாயெண்டு விட்டிட்டன் என்றபடி தனது கையிலிருந்த ஐ பாட்டினை தட்டி தமிழ்த்தேசிய முன்னணி செய்தித் தளம் ஒன்றில் இருந்த செய்தியை படித்துக் காட்டத் தொடங்கினார்.

முன்னைநாள் பெண்போராளி மகளை கொலை செய்து தானும் தற்கொலை.

கோப்பாய் பகுதியில் வசித்தவரும் முன்னை நாள் பெண் போராளியுமான குமுதினி வயது 34 உணவில் விசம் கலந்து கொடுத்து தனது 5 வயது மகளை கொலை செய்து விட்டு தானும் தற்கொலை செய்து கொண்டுள்ளார். மருத்துவ பரிசோதனைகளில் இவர் கர்ப்பம் தரித்துள்ளதாக உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. இவர் புனர்வாழ்வு முகாமிலிருந்து விடுதலையாகி வந்த பின்னர் இராணுவப்புலனாய்வாளர்களுடன் நெருங்கிய தொடர்புகளை கொண்டிருந்ததாகவும் அதுவே அவரது கர்ப்பத்திற்கு காரணம் என்றும் விடயம் வெளியே தெரியவந்ததும் தற்கொலை செய்து கொண்டுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றது. யாழ்ப்பாணத்தின் கலாச்சாரச் சீரளிவுகளிற்கு இவரைப் போன்றவர்களும் காரணம் என்பதும் குறிப்பிடத் தக்கது.

---

**கதை உண்மைச் சம்பவத்தை தழுவியது.**



# மக்கள் தமது உரிமையை நிலைநாட்டுவதன் மூலம் தமக்கான தீர்வுகளை கண்டடைவர்

**வடமாகாண சபையின் யாழ் மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளரும் புளொட் இயக்கத்தின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன்.**

வடமாகாண சபையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையான வெற்றி எடுப்பதன் மூலம் தமிழ் மக்கள் தோற்றுவிட்ட இனமல்ல தங்களுடைய அபிலாசைகளை, கோரிக்கைகளை இன்னும் வலுவாக பெற்றிருக்கின்றது என்பதை உலகிற்கு பறைசாற்றும். அவ்வாறான நிலையில் அரசாங்கம் இதற்கு எதிராக பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் இருக்கின்ற காணி, பொலிஸ் அதிகாரங்கள் உட்பட்ட அதிகாரங்களில் கைவைக்குமாக இருந்தால் சர்வதேச கண்டனத்திற்கும் அலுத்தத்திற்கும் உள்ளாகும். இந்நிலைமையிலேதான் வடமாகாண சபை முக்கிய இடத்தைப் பெறுகின்றது. முன்னதாக நடைபெற்ற ஏனைய மாகாண சபைத் தேர்தல்களின் போது அமைதியாக இருந்த பெரும்பான்மை சக்திகள் வடமாகாண சபைத் தேர்தல் என்றவுடன் அதிகாரங்களை குறைக்க வேண்டுமென எதிர்ப்புக்களை முன்வைப்பதானது அவர்களை எந்தவொரு அதிகார பரவலாக்கத்திற்கும் தயாரில்லை என்பதையே காட்டுகின்றது.

தமிழ் பிரதேசமெங்கும் இராணுவப் பிரசன்னம் எங்கும் நிலைபெற்றுள்ளது. இது இராணுவத்தின் தலைமீடுகள் அதிகாரத் துஷ்பிரயோகம் என்பதையே குறித்து நிற்கின்றது. வடக்கில் வாழும் பொதுமக்கள் ஒவ்வொருவரும் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுகின்றார்கள். மறைமுகமான ஒரு பயம் மக்களிடையே உருவாக்கப்பட்டிருக்கின்றது. இங்கு இராணுவம் தேவைக்கும் அதிகமாக குவிக்கப்பட்டுள்ளது. இன்று யுத்தம் முடிந்துவிட்டதாக அரசாங்கம் கூறுகின்றது. அப்படியானால் இவ்வளவு இராணுவ பிரசன்னம் ஏன் வடக்கில் நிலவுகின்றது. ஆயுத யுத்தம் ஒன்று வருவதற்கு சந்தர்ப்பம் இல்லையென பல அமைச்சர்கள் கூறுகின்றார்கள். அவ்வாறாயின் இவ்வளவு பாரிய இராணுவ குவிப்பு தேவையில்லையே. இவையெல்லாம் அறியாமல்தான் இவர்கள் இருக்கிறார்களா? இல்லை இராணுவத்தைக் கொண்டு மக்களை அடக்கி ஒடுக்க முடியும் என இவர்கள் நம்புகிறார்கள். சிவில் நிர்வாகத்தில்கூட இராணுவத் தலையீடு வலுவாக உள்ளது. இராணுவப் பிரசன்னத்தின் மூலம் மக்களை அடிமைப்படுத்தப்பட்ட இனமாக மாற்றியமைக்கும் சுயநல அரசியலின் கோரத்தாண்டவம்தான் வடக்கில்.

வடமாகாணசபையில் நாம் வெற்றிபெற்றதன் பின்னர் ஆளுனரின் தலையீடே முக்கியமான சவாலாக இருக்கும். வடமாகாண சபையில் பெரியளவில் அதிகாரிகரங்கள் இல்லை என்று கூறினாலும் இருக்கக் கூடிய அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கும் சபையை சீராக நடத்துவதற்கும் இடையூறாக ஆளுனரின் தலையீடு இருந்து கொண்டு இருக்கும். கிழக்கு மாகாணத்தில் அரசாங்கத்தின் சபையாக இருந்தும் கூட அங்கிருக்கும் உறுப்பினர்கள் மிகப் பெரிய அளவிலே முறைப்பாடுகளைச் செய்து கொண்டு இருக்கிறார்கள். சிறிது காலம் சபையை பகிஷ்கரிக்கும் நிலைமை கூட இருந்தது. இதுவரை காலமும் நடைபெற்ற மாகாண சபையில் ஆளும் கட்சியே சபைகளை அலங்கரித்தது. ஆனால் வடக்கில்தான் முதன் முதலாக எதிர்க்கட்சியொன்று ஒரு சபையை அமைக்க இருக்கின்றது. அத்தோடு இங்கு வரவிருக்கும் முதலமைச்சர் சட்டம் தெரிந்து சர்வதேசம் அறிந்து தமிழ்மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். அவ்வாறான ஒருவரின் ஆளுமையில் நாம் அரசாங்கத்தை அமைக்கும்பொழுது நிச்சயமாக பல்வேறு பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர்கொள்ள முடியும்.

இந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிச்சயம் வெற்றி பெறும் இந்த வெற்றி மிகப் பெரிய அரசியல் மாற்றத்திற்கு காரணமாக இருக்கும். ஏனென்றால் சர்வதேச அழுத்தங்களின் பிரகாரம்தான் இந்த தேர்தல் கொண்டு வரப்பட்டுள்ளது. ஆகவே, இத்தேர்தலை சர்வதேச நாடுகள் மிக உன்னிப்பாக அவதானித்துக்கொண்டு இருக்கின்றன. எமது பிரச்சினைகளுக்கான தீர்வுகளை கண்டடைவதற்கு அரசாங்கத்துக்கு நிர்ப்பந்தங்களை வழங்க தயாராக உள்ளன. ஆகவே இத்தேர்தலில் கிடைக்கும் வெற்றி தீர்வை நோக்கிய பயணத்தின் ஒரு மைல் கல்லாக அமையும். யுத்தம் நிறைவடைந்து தமிழ் மக்கள் எதுவுமே செய்யமுடியாத ஒரு பலவீனமான நிலைக்குச் சென்றுவிட்டார்கள் என்று நினைக்கப்படும் நேரத்திலே மக்கள் தமது ஒற்றுமையை காட்டுவதன் மூலம் தீர்வு நோக்கிய பயணத்திற்கு வழிசமைக்கும். ஆகவே இந்தத் தேர்தலில் தமிழ்பேசும் மக்கள் தமது வாக்களிக்கும் கடமையை தவறாமல் செய்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றிபெறச் செய்வார்கள்.

---

முதலமைச்சர் வேட்பாளராக ஒய்வு பெற்ற நீதியரசரை என்ன நோக்கத்திற்காக நியமித்தோமோ அந்த நோக்கம் நிறைவேறுவதற்குரிய கௌரவமான வெற்றியை பெறவேண்டியதும் அவசியமாகும்.



**ஜனநாயக மக்கள் முன்னணி பிரதித் தலைவர் கலாநிதி குமரகுருபரன்**

இனப்பிரச்சினைக்கு நியாயமான அதிகார பகிர்வுடன் கூடிய நிரந்தர தீர்வு காணப்படும் வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒன்றுபட்ட தலைமையே தமிழர் தம் தலைமையாக இருக்க வேண்டும். இதற்கான மக்கள் ஆணையை தமிழ் மக்கள் முன்னரும் தொடர் தேர்தல்கள் வாயிலாக உறுதிப்படுத்தி இருக்கிறார்கள். இதுவரை அரசியல் தீர்வு எட்டப்படாததனால் ஒவ்வொரு தேர்தலும் முக்கியமான ஒன்றாகவே அமைந்து விடுகிறது॰

இனப்பிரச்சினைக்கு நியாயமான அதிகார பகிர்வுடன் கூடிய நிரந்தர தீர்வு காணப்படும் வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒன்றுபட்ட தலைமையே தமிழர் தம் தலைமையாக இருக்க வேண்டும்.இந்த தேர்தலிலும் தமிழர் தம் ஒருமைப்பாட்டை குலைத்து தென் இலங்கை அரசின் ஆட்சியை வடபகுதியில் ஏற்படுத்தினால் வடபகுதி தமிழ் மக்கள் உரிமைகள் எதனையும் கோரவில்லை என சர்வதேசத்திற்கு எடுத்து காட்டவே அரசு கடபடத்தனமாக முனைகிறது.

இந்த கடபடத்தை அறியாத அரசியல் கற்றுக்குட்டிகள் வரலாறு தெரியாத குழந்தைகள்.அரசிடம் இணைந்து அபிவிருத்தி செய்வோம் எனும் மாயையில் விழுந்து தேர்தலில் நிற்கிறார்கள். இந்த பின்னணியில் வடபகுதி தமிழ் மக்களை பொறுத்தவரை பல்வேறு தமிழ் கட்சிகளும் மூத்த அரசியல் வாதிகளும் ஒருமைப்பாட்டுடன் பேதங்களை மறந்து தமிழ் தேசிய கூட்டமைப்பாக இணைந்ததோடு விட்டுக் கொடுப்புகளோடு ஒன்றுபட்டு நிற்கின்றார்கள்.

தமிழ் அன்னையின் பெயரால் தமிழ் மக்கள் இந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு அமோக ஆதரவை வழங்க வேண்டியது காலத்தின் கட்டாய கடமையாகும். தமிழ் மக்கள் விரும்பியோ விரும்பாமலோ ஒரு மாகாணத்தை பொறுத்தவரை பாடசாலைகளின் நிர்வாகம், சுகாதார சேவை, போக்குவரத்து, சமூக சேவைகள் கூட்டுறவு, சிறு நீர்ப்பாசனம், சிறுகைத்தொழில் போக்குவரத்து என இன்னும் பல சேவைகள் மாகாண நிர்வாகத்தின் ஊடாகத்தான் நடைபெற்று வருகின்றது. இவற்றின் நிர்வாகங்களை தமிழ் மக்கள் தமது விருப்பிற்கு ஏற்ப நிர்வகிக்க வேண்டும்.

மாறாக வேடதாரிகளும் அண்டி பிழைப்பவர்களும் அரசிற்கு வக்காளத்து வாங்குபவர்களும் மாகாண நிர்வாகத்திற்குள் போய் விடுவதை தடுக்க வேண்டும் எனும் கடமைப்பாடு தமிழ் மக்களுக்கு உண்டு. அதனால் தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபைத் தேர்தலில் போட்டி இட்டு மக்கள் ஆணையை பெற்று தமிழரை தமிழரே நிர்வகிக்கின்ற நிலைமை ஏற்பட வேண்டும். அல்லாது விடின் மாகாண சபைகளின் சலுகைகளை அனுபவித்துக் கொண்டு இனப்பிரச்சினை ஒன்று இந்நாட்டில் இல்லை என்று சர்வதேசத்திற்கு எடுத்துக் கூறுவதற்கு காரணமாக அமைந்து விடும். இந்த அரசியல் நாடகத்தினை அரங்கேற்றாது தடுப்பதற்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் பிரதி நிதிகளாக இத்தேர்தலில் போட்டியிட வேண்டியதும் வெற்றி பெற வேண்டியதும் காலத்தின் அத்தியாவசிய தேவையாகும்.

வரலாற்றின் ஆரம்பம் முதல் சேர். பி.இராமநாதன் அருணாசலம், ஜீ.ஜீ. பொன்னம்பலம் கியூசி, எஸ்.ஜே. வி. செல்வநாயகம் எனும் தமிழ் தலைவர்கள் என்றும் இலங்கையர் என்கின்ற உணர்வுக்குள் நின்று தான் சம உரிமையையும் அதிகார பகிர்வையும் சமஷ்டியையும் கோரி நின்றனர்.

அதே அடிப்படையில் தான் பண்டாரநாயக்க -செல்வா ஒப்பந்தமாயினும், டட்லி - செல்வா ஒப்பந்தமாயினும் மாவட்ட சபைகள், வட்ட மேசை மாநாடு, திம்பு மாநாடு மற்றும் சர்வ கட்சிகளின் மாநாடுகள் இலங்கை - இந்திய ஒப்பந்தம் என்பவற்றை சந்தித்தனர். ஆனால் சிங்களத் தலைவர்கள்தான் ஸ்ரீலங்காவை மறந்து பௌத்தவாத அடிப்படையில் 1915 முதல் 1956, 1961 சிங்கள ஸ்ரீ 1971, 1977, 1983 என திட்டமிட்ட இனக்கலவரங்களைத் தூண்டினர்.

இன்றும் பௌத்தத்தின் பெயரால் ஏனைய ஆலயங்கள் தாக்கப்பட்டு கொண்டு இருக்கின்றன. எனவே பௌத்த சிங்கள இனவாதம் பேசி சிங்கள பௌத்த நாடு எனும் பிரிவினையை ஏற்படுத்த முயன்று வருபவர்கள் சிங்களத் தலைவர்களே அன்றி தமிழ், முஸ்லிம் தலைவர்கள் அல்ல. இது வரலாறு.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலைப் பொறுத்தவரை சட்டத்தை முற்றறிந்த நீதியை நன்கு உணர்ந்த, இறைப்பக்தி மிக்க ஒருவல்லவரைத்தான் முதன்மை வேட்பாளராக நாம் காண்கிறோம். அந்த வகையில் அவரது வெற்றி மாபெரும் வெற்றியாக அமைய வேண்டும்.

முதலமைச்சர் வேட்பாளராக ஓய்வு பெற்ற நீதியரசரை என்ன நோக்கத்திற்காக நியமித்தோமோ அந்த நோக்கம் நிறைவேறுவதற்குரிய கௌரவமான வெற்றியை அவர் பெறவேண்டியதும் அவசியமாகும். எனவேயாழ்ப்பாணத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் விருப்பு வாக்குகள் மூன்றில் ஒன்றை எமது முதலமைச்சர் வேட்பாளருக்கும் தவறாமல் அளிக்க வேண்டும்

அதேபோல் இக்கூட்டத்தை ஒழுங்குசெய்திருக்கும் என் மண்ணின் மைந்தன், சாவகத்தின் மைந்தன் தம்பி சட்டத்தரணி சஜந்தன் மற்றும் இங்கு வருகை தந்திருக்கின்ற என் இனிய நண்பர் அன்பிற்குரிய மூத்த அரசியல்வாதி முன்னாள் பா.உ அண்ணன் சித்தார்த்தன்,கற்றறிந்த என் நண்பர்கள் பலர் ,யாழ் இந்துவின் மைந்தன் ஐங்கரநேசன், கலாநிதி சர்வேஸ்வரன் என் நண்பர் சிறந்த அரச நிர்வாகி சி.வி கே .சிவஞானம்என இன்னும் பலர் வேட்பாளராக மற்றும் பலர் இருக்கின்றார்கள். இவர்கள் எல்லோரும் பெரும் வெற்றி பெற வேண்டும்.கற்றார் வல்லார் தமிழர் தம் பிரதிநிதிகளாக வேண்டும்

# போராட்டங்கள் தோற்பது ஏன்?

## பரம் ஜி பார்வையில்...

இலங்கைத்தீவில் தமிழ் மக்கள் 1956ம் ஆண்டு முதல் தமது உரிமைகளுக்காக ஜனநாயக முறைப்படி போராடி வந்தனர். அது தோற்று போனதை அடுத்து ஆயுதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதென வடமாகாணசபையின் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் திரு. சி.வி. விக்கினேஸ்வரன் அண்மையில் தெரிவித்திருந்தார்.

ஒரு போராட்டத்தின் முடிவில், முக்கியமாக அது தோல்வியை தழுவியபின் அதிலிருந்து அடுத்த கட்டத்திற்கு நாம் முன்னேறி செல்ல வேண்டுமாயின் முதலில் கடந்து வந்த பாதையில் சந்தித்தவற்றை அலசி ஆராய்ந்து உண்மைகளை அறிந்து இயன்ற வரையில் நாம் செய்திருந்த தவறுகளை ஏற்றுக்கொண்டு முறையாக அவற்றிற்கான பிராயச்சித்தங்களை தேடிக்கொள்ளவேண்டும்.

உண்மைகளை மூடி மறைக்க முயற்சிப்பதும் அல்லது மற்றவர்மீது பழிகளைப் போடும் வகையில் சாயங்கள் பூச முனைவதும் பின்நாளில் நாம் துன்பங்களை அனுபவித்த அதே பாதையிலேயே எமது எதிர்கால சந்ததியினர் தொடர்ந்து பயணிக்க வழிவகுக்கும் என்பதுடன் பெரும் அழிவுகளை மீண்டும் சந்திக்கவும் இடம் கொடுக்கும் என்பதை நாம் உணர்ந்து செயற்பட வேண்டும்.

போராட்டங்கள் அவசியமானவை. ஆனால் எம் தமிழர் போராட்டங்கள், ஜனநாயகம், ஆயுதம் 1956-2009, தோல்விகளையே தழுவின.

அன்று ஈழத்தமிழர்கள் முன்னெடுத்திருந்த ஜனநாயக முறை போராட்டம் பற்றிய போதிய அறிவோ அனுபவங்களோ இல்லாதிருந்த தமிழ் இளைஞர்கள் சிலர் ஆயுதங்களை மட்டும் நம்பி அவற்றின் உதவியுடன் எடுத்த கண்மூடித் தனமான முடிவுகள் நடவடிக்கைகளால் எமது இனம் அழிக்கப்பட்டது.

அனர்த்தங்களில் இருந்து தப்பி ஓட்டி எஞ்சி வாழும் தமிழர்கள் தாம் வாழும் பகுதிகள் எல்லாம் நாம் வரவைத்த இலங்கை இராணுவம் முற்றுகையிட்டுள்ள நிலையில் இன்று இயல்பு வாழ்க்கைக்காக ஏங்கி ஜனநாயகம் எனும் விடியலை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

ஈழத்தமிழர்களின் எதிர்காலம் பற்றிய நல்லதொரு நம்பிக்கை நட்சத்திரமாக இருக்க வேண்டிய விக்கினேஸ்வரன் அவர்கள், எம்மக்களின் இன்றைய இழிவு வாழ்க்கைக்கான காரணம் பற்றி கொடுத்து இருக்கும் விளக்கமானது, தான் சார்ந்திருக்கும் தமிழ் அரசியல் குழுவின் கடந்தகால குதர்க்க பின்னணியை, அதாவது ஆயுதக் குழுக்களின் துதிபாடிகளாக காலம் கழித்து குளிர் காய்ந்து தமிழினத்தின் அழிவுகளுக்கு காரணமாக இருந்த உண்மைகளை மூடி மறைக்க எத்தனிக்கும் முயற்சி என்பதாகவே தென்படுகின்றது.

மறுக்கப்பட்டு பறிக்கப்படும் மனித உரிமைகளை மீளப்பெறும் வகையில் முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் தோற்பதற்கு காரணம், அவற்றை ஆதாரமாக கொண்டு பல வழிகளிலும் ஆதாயம் அடைய முற்படும் அரசியல் வாதிகள், தீவிரவாத மற்றும் ஆயுதப்போராளிகளின் கைங்கரியங்கள்தாம் என்பதே உண்மையாகும்.

காரணங்கள் இவைதான்!

அரசியல்வாதிகள் எனில் எல்லோருமே காந்திஜி காமராசர் ஆபிரகாம் லிங்கன் போன்றும், விடுதலைப்புரட்சியாளர்கள் எனில் எல்லோருமே சேகுவெரா நெல்சன் மன்டெல்லக்கள் போன்றும், மக்கள் தலைவர்களாக தம்மை முன் நிறுத்துபவர்கள் எல்லோருமே கருப்பினத்தலைவர் டாக்டர் மார்ட்டின் லூதர் கிங் ஆகியவர்களை போன்று சுயநலமற்ற மக்கள் சேவைகள் மட்டும் செய்பவர்களாக பொதுமக்கள் நம்பிவிடுகின்றனர்.

ஜனநாயக வழிகளில் அதிகாரப் பதவிகளை பெற்ற பலர் அவற்றை வாழ்க்கை காலம் முழுவதும் அனுபவிக்க வேண்டி தாம் அப்பதவிகளை அடைவதற்கு காரணமாகவிருந்த அதே மக்களுக்கு எதிரான சர்வாதிகாரிகளாக மாறியதை உலக சரித்திரத்தில் எத்தனை தடவைகள் நாம் பார்த்து விட்டோம். தற்போது சிரியா எகிப்து போன்ற மத்திய கிழக்கு நாடுகளில் நடைபெறுவனவற்றை நாம் தினம்தோறும் செய்திகளாக காணுகிறோம்.

> தமது நாட்டு அரசுகளின் மக்களுக்கெதிரான அராஜக போக்குகளை சாதகமாக்கி உரிமைகளை மீளப் பெறவும் விடுதலை வேண்டியும் தீவிரமாக போராடுவதாக கூறி களத்தில் குதிப்பவர்களில் பெரும்பாலானோர் ஆயுதங்கள் மூலம் மக்களிடையே தாம் பெற்றிருக்கும் ஆதரவையும் அதிகார பலத்தையும் தமது வாழ்க்கை காலங்கள் முழுவதும் அனுபவிக்க எண்ணி விடுவதனாலேயே அவர்களை நம்பிய பொது மக்களுக்கு எதிராக அதே ஆயுதங்களை திருப்புகின்றனர்.

மக்களால் ஜனநாயக வழியில் தெரிவு செய்யப்பட்ட சிரியாவின் தலைவர் பஷர் அல் அசாட் ஒரு கண்வைத்தியராக பட்டம் பெற்றவர். வைத்திய துறையில் எதற்காக கண்வைத்தியத்தை தெரிவு செய்தீர்கள் என முன்பு அவரிடம் ஒருமுறை கேட்கப்பட்டபோது அவர் தந்திருந்த பதில், பார்வையின் முக்கியத்துவமும், குறைவான இரத்த இழப்பும் என்பதாக இருந்தது. இன்று அவரது ஆட்சியில் எத்தனை ஆயிரம் கண்கள் பறிக்கப்படுவதும் மனிதக்குருதி அம்மண்ணில் ஆறாக பெருகி ஓடுவதையும் பார்க்கின்றோம்.

வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு உள்நாட்டு விவகாரம் போல தோற்றம் அழித்தாலும் இன்றைய சிரியாவில் நடைபெறும் அனர்த்தங்களுக்கு பஷர் அல் அசாட் மட்டுமே காரணம் என்பதை விடவும் மத்திய கிழக்கு நாடுகளின் மசகு எண்ணை வளமும் அந்நாடுகளுடனான வர்த்தகங்கள் மூலம் பெறக்கூடிய ஆதாயங்களை தம்வசப்படுத்த தமது பலத்தை அப்பகுதியில் நிரூபிக்க முனையும் வல்லரசுகள் உட்பட்ட மற்றய நாடுகள் பின்னணியில் இருக்கின்றன.

அண்மையில் சிரிய நாட்டு மக்கள் ஆயிரக்கணக்கில் நச்சுப்புகை எரி குண்டு தாக்குதலில் மரணித்ததை கண்டித்து ஐ.நாவின் பாதுகாப்பு சபை உடனே சிரிய அரசுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாதிருக்கின்றது. காரணம் எரிவாயு குண்டுகளை உபயோகித்தது அல் அசாடினது இராணுவமா அல்லது இராணுவத்திற்கு எதிராக வெளி உலக சக்திகளின் உதவிகளுடன் போரிட்டு இயங்கிக்கொண்டிருக்கும் தீவிரவாத குழுக்களா என்ற உண்மைகளை கண்டறிய வேண்டிய தேவை இருப்பதனாலாகும்.

இதுபற்றி ஐ.நாவோ அல்லது மற்றய நாடுகளோ வேண்டிய நடவடிக்கைகளை அச்சம்பவத்திற்கு காரணமானவர்களுக்கு எதிராக எடுக்காவிட்டால் இப்போது இரகசியமாக நடாத்தப்படும் மக்களுக்கு எதிரான இவ்வகை தாக்குதல்களை அரசுகளோ அல்லது தீவிரவாத குழுக்களோ வெளிப்படையாக செய்யும் காலம் விரைவில் வரும்.

உரிமைகள் விடுதலைகள் கோரி தீவிரவாதிகளாக, போராளிகளாக தம்மை வரித்துக் கொள்பவர்களை தமது இனத்தின் ஆபத்பாந்தவர்களாக ஏற்றுக் கொண்ட எத்தனை மனித இனங்கள், ஈழத்தமிழர்கள் உட்பட, அவர்களால் சொல்லெணா துயரங்களையும் அழிவுகளையும் சந்தித்துள்ளனர் என்பதனை நாம் அறிவோம்.

தமது நாட்டு அரசுகளின் மக்களுக்கெதிரான அராஜக போக்குகளை சாதகமாக்கி உரிமைகளை மீளப் பெறவும் விடுதலை வேண்டியும் தீவிரமாக போராடுவதாக கூறி களத்தில் குதிப்பவர்களில் பெரும்பாலானோர் ஆயுதங்கள் மூலம் மக்களிடையே தாம் பெற்றிருக்கும் ஆதரவையும் அதிகார பலத்தையும் தமது வாழ்க்கை காலங்கள் முழுவதும் அனுபவிக்க எண்ணி விடுவதனாலேயே அவர்களை நம்பிய பொது மக்களுக்கு எதிராக அதே ஆயுதங்களை திருப்புகின்றனர்.

ஜனநாயக வழிகளில் அடையக்கூடிய பதவிகளை பெறுவதற்கும் அவற்றை காப்பதற்கும் மக்களை ஏமாற்றும் பல தந்திரங்களை பலர் கையாளுகின்றனர்.

மாகான சபை தேர்தலில் பதவியை பிடிக்கும் நோக்குடன் ஆனந்தி சசிதரன் என்ற வேட்பாளர் கூறியிருப்பது என்னவெனில், நாங்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்ட இனம், ஐ.நா அதனை பார்த்து கொண்டு சும்மா இருந்தது என்கிறார் அவர். ஐ.நா கொடுத்த உறுதி மொழியிலா நாம் ஆயுதங்களை தூக்கினோம்? நாமாக ஆயுதங்களை தூக்கி அவற்றால் அழிந்தோம். உண்மைகளை ஏற்று கொள்ள வக்கற்ற தமிழர்களை தன்பக்கம் இழுத்து பதவியை அடைய முனைகிறார் அவர்.

ஜனநாயகத்தின் அத்திவாரமாக இருக்க வேண்டிய அகிம்சை வழிப் போராட்டங்களான சத்தியாக்கிரகம் ஒத்துழையாமை பகிஸ்கரிப்பு போன்றவற்றை முன்னெடுத்து பல ஆண்டுகாலங்கள் போராடிய இந்தியமக்கள் இறுதியில் மகாத்மாவின் தலைமையில் பிரித்தானியரிடமிருந்து சுதந்திரத்தை பெற்றனர்.

அடிமைகளாக கொண்டுவரப்பட்டு அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு வந்த தமது இனத்திற்காக மகாத்மாவின் அகிம்சை வழியில் போராடி ஐக்கிய அமெரிக்காவில் கருப்பினத்தவர்களுக்கு மறுவாழ்வு தேடிக்கொடுத்ததுடன் இன்று பராக் ஒபாமா அதிபராவதற்கும் அடித்தளம் அமைத்து வைத்தார், டாக்டர் மார்டின் லூதர் கிங்,

தமிழர்களின் ஜனநாயக முறைப் போராட்டங்களை தடுத்து ஆயுத விடுதலைப்போராட்டத்தால் தமிழ் மக்கள் அழிவதற்கு காரணமாக இருந்தவர்களின் கைங்கரியத்தால் 2005ம் ஆண்டில் நடைபெற்ற சிறிலங்கா ஜனாதிபதி தேர்தலிலும் தமிழர்களின் வாக்குரிமை தட்டிப்பறிக்க பட்டதன் பலனாக பதவிக்கு வந்த மகிந்த அரசினால் எமது இனம் அழிக்கபட்டதுடன் விடுதலை போராட்டத்திற்கும் முடிவு கட்டப்பட்டது.

வெலிவேரியாவில் குடிப்பதற்கு நல்ல தண்ணீர் கேட்ட தனது சிங்கள இனத்தவர்களை கொலை செய்து பதவியை தக்கவைத்து கொள்ள முயலும் இராஜபக்ச ஜனாதிபதியாக அரசகட்டில் ஏறுவதற்கு காரணமாக இருந்தவர்களும் ஜனநாயக தேர்தலை அன்று புறக்கணித்து அவமதித்த எம்மினத்தவர்கள்தான் என்பதனை நாம் ஒரு போதும் மறந்துவிடக்கூடாது.

ஜனநாயகம் எனும் பொன்விளையும் பூமியில் இருக்கும் களைகளை அகற்ற வேண்டியது எமது கடமையாகும்.

போராட்டங்கள் அவசியமானவை. அவை ஒருபோதும் தோற்பதில்லை. அவற்றை முன்னெடுத்து செல்பவர்களின் முறையற்ற அணுகுமுறைகளால் அவை தோற்கடிக்கப்படுகின்றன என்பது தான் உண்மையாகும்.

பார்வைகள் தொடரும்...

# நன்றி கொல்லும் தமிழன்

செய்நன்றி கொன்ற மகர்க்கு உய்வில்லை என்று வள்ளுவர் சொல்லிச் சென்றார். அதையும் அவர் தமிழர்களுக்குத் தான் சொல்லியிருக்கிறார். தமிழனைப் போல செய்நன்றி கொன்றவர்கள் யாரும் இல்லை என்பது வள்ளுவருக்கும் தெரியும். தங்கள் வாழ்க்கையைத் தியாகம் செய்து, போராடப் போய், கடைசியில் எல்லாம் முடிந்து நொந்தவர்களை, குப்பி கடித்து மாவீரர்கள் ஆகவில்லை என்பதற்காகக் கைகழுவிச் செய்நன்றி கொன்றவர்களை வள்ளுவர் அன்றே தீர்க்கதரிசனமாய் அறிந்து தான் இப்படிச் சொன்னார். அதனால் தான் தமிழன் இன்று வரைக்கும் உய்வில்லாமல் அலைகிறான்.

அதிருக்கட்டும். இதையெல்லாம் சொல்லப் போனால், குரங்குக்குப் புத்திமதி சொன்ன தூக்கணாங்குருவிக் கணக்கில் அல்லல்பட வேண்டியதுதான்.

நன்றி கூறுதல் என்பது, ஆங்கிலத்தில் தாங்க்ஸ் என்ற வார்த்தை தமிழனுக்குத் தெரியும் வரைக்கும் தமிழன் வாயில் வந்ததில்லை. கொடுத்ததை வாங்கிக் கொண்டு, ஹி ஹி என்ற பல்லிளிப்பு, அல்லது தலை குனிந்து இரு கைகளாலும் பெற்றுக் கொள்ளல்.

கியூறியஸ்க்குக் கூட, சிறுவயதில் டீச்சர்மார்கள் 'மெத்தப் பெரிய உபகாரம்' என்று தான் சொல்ல வைத்தார்கள். நன்றி என்ற அழகான வார்த்தையைக் கூடப் பயன்படுத்தாமல், ஏதோ தமிழ்க் கொடைவள்ளல்கள் எல்லாம் செத்தும் கொடை கொடுத்த சீதக்காதி மாதிரிக் கொடுத்ததாயும், அந்தப் பரோபகாரிக்கு 'மெத்தப் பெரிய உபகாரம்' சொல்ல வேண்டும் என்றும் சொல்லித் தந்தார்கள்.

ஆங்கிலம் தமிழில் புகுந்து தமிழன் வாயில் புகுந்து, தாங்க்ஸ் தமிழ் வார்த்தையாகவே மாறியது.

அதிலும் ஆங்கிலத்தில் தாங்க்ஸ் சொன்னால், அந்தப் பரோபகாரியும் 'டோன்ற் மென்ஷன்' என்று, நமக்கு இதெல்லாம் ஒரு கொசுறு, இதையெல்லாம் சொல்ல வேண்டுமா என்ற பணிவு கலந்த தன்னடக்கத்துடன் கூறிச் செல்வார்.

பின்னால் யாரோ 'யூ ஆர் வெல்கம்' என்பதைக் கண்டுபிடித்து இறக்குமதி செய்ய, நன்றி கூறியவர்களின் நன்றியை ஏற்றுக் கொள்ளும் பெரும் பண்பும் தமிழனுக்கு வளர்ந்தது.

ஆங்கிலம் சுட்டுப் போட்டாலும் வராத ஒருவர் நியூயோர்க்கில் நண்பர் ஒருவரோடு போன போது, இவர்கள் கதவைத் திறந்து பிடிக்க, வெள்ளையர் நன்றி சொல்லிச் செல்ல, 'யோக்கம்' சொல்லடா என்று நண்பரை அதட்டியதாக கதை உண்டு. இவ்வாறாக படித்தோரும் பாமரரும் 'யோக்கம்' சொல்லி, நன்றியை ஏற்றுக் கொண்டனர்.

ஆனால் யாருமே 'இற் இஸ் மை பிளெஷர்' என்று, உனக்கு உதவி செய்ததால் எனக்கு மகிழ்ச்சி என்று சொன்னதைக் காணவில்லை. ஆக மொத்தத்தில் உதவி என்பது நன்றியை எதிர்பார்த்தே என்பதாக தமிழ் கூறு நல்லுலகில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறை ஆகி விட்டது. கடமையைச் செய், பலனை எதிர்பாராதே என்று பார்த்தசாரதி சொன்னாலும், உதவிக்குப் பிரதியுபகாரம் கிடைக்காவிட்டால், நன்றி கெட்ட நாய் என்று திட்டி தமிழன் தன் உதவிக்கான கடவுள் அருளைப் பெற்றுக் கொள்வான்.




பேராறுஞர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

மேடைகளில் 'முதற்கண் நன்றியைத் தெரிவித்து'க் கும்பிடு போடுகின்ற பிரசாரப் பீரங்கிகள், செருப்பை வீசாமல் பொறுமையோடு பேச்சைக் கேட்டவர்களுக்கு நன்றி கூறாமல், 'வாய்ப்புக்கு நன்றி கூறி' விடை பெறுவர். அப்புறமாய், திருமணங்கள், மரணங்களுக்கு வந்தவர்களுக்கான நன்றி நவிலல்கள் பத்திரிகை அறிக்கையானது தவிர, தமிழனுக்கும் நன்றிக்கும் எட்டாப் பொருத்தம் தான்.

நன்றி ஒருபுறம் இருக்கட்டும்.

வணக்கம் இன்னொரு பக்கம் துன்பம்.

மேற்குலகில் சந்திக்கும்போது, நாளோ, மாலையோ நல்லதாக இருக்கட்டும் என்று வாழ்த்துகிறார்கள். பிரியும்போது கூட, இரவு நல்லதாக இருக்கட்டும் என்று வாழ்த்திச் செல்கிறார்கள்.

கிழக்குலகிலோ பெரும்பாலும் வந்தனங்கள் ஒரு வார்த்தையிலேயே அடங்குகின்றன.

நமஸ்தே தொடக்கம் ஆயுபோவன் வரைக்கும் சந்திக்கும்போது காலை, மாலை வேறுபாடின்றி கைகளைக் கூப்பி வணக்கம் செலுத்தப்படும்.

மொழியின் வறுமையோ, அல்லது இதற்கெல்லாம் அனாவசியமாக எதற்கு புதிய வார்த்தைகள் என்ற மிதப்போ, சந்திக்கும்போது கைகளைக் கூப்பி வணக்கம் சொன்னால் போதும் என்ற எண்ணம்.

தமிழனும் தன் பங்குக்கு வணக்கத்தைக் கண்டுபிடித்தான். அதையும் 'அவையோருக்கு வணக்கம்' என்று மேடையில் மட்டும் சொன்னானே தவிர, மற்றும்படி வணக்கம் எல்லாம் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கின்ற விளையாட்டு மட்டும் தான்.

சிங்களவர்கள் போல, பெற்றோரை வணங்குதலோ, ஆசானை வணங்குதலோ, நல்ல நாள் பெருநாளில் சந்திப்போர்களை வணங்குவதையோ சம்பிரதாயமாகக் கூட கண்டதில்லை.

ஆனால் கடவுளுக்கு மட்டும் கை கூப்பி வணக்கம் செலுத்துவான் தமிழன். ஆனால், கடவுளுக்குக் நன்றி சொல்லியிருப்பானா? ஹ்ம். கிடையாது.

கடவுளே, எனக்கு ஒரு நல்ல வாழ்க்கையைத் தந்திருக்கிறாய், உனக்கு நன்றி என்று சொல்வது கிடையாது. இந்தா உண்டியலில் ஒரு டொலர், அர்ச்சனைக்கு ஐந்து டொலர், எனக்கு லொட்டோ விழப் பண்ணு என்று கடவுளுக்கு லஞ்சம் கொடுப்பதைத் தவிர, நன்றி சொல்வது கிடையாது. ஒன்றும் கிடைக்காவிட்டால், கடவுளையும் திட்டி, யாகத்திற்கு கொடுத்த மூவாயிரம் டொலர் நட்டம், கடவுளுக்குக் கண்ணில்லை என்று கணக்குப் பார்ப்பதில் நன்றியுணர்வு நிறையும்.

சரி, சந்திக்கும்போது வணக்கம் சொல்கிறோம். பிரியும்போது, கைகளைக் கூப்பி நன்றி சொல்கிறோம். உங்களுடைய பிரசன்னத்தால் எங்களைப் பெருமையுற வைத்தமைக்கான நன்றி. சில நேரம், வந்தவர்கள் போகிற நோக்கம் இல்லாமல் அறுத்துக் கொண்டே இருந்தால், கை கூப்பி ஆளை அப்புறப்படுத்தலாம். நேரமாச்சு என்பதை நினைவுபடுத்த வரும் குறியீடு இது.

அதற்குப் பிறகென்ன, இன்னொரு வணக்கம்? இன்னொரு வணக்கம் சொன்னால், போகப் புறப்பட்டவன், திரும்பவும் உட்கார்ந்து அறுக்க மாட்டானா?

வானொலியைத் திருப்பினால் என்ன? வானொலிக்கு போன் அடிப்பவர்களாக இருந்தால் என்ன? மேடையில் மைக்கைத் தூக்கியவர்கள் என்றால் என்ன?

ஒரு கண்டறியாத நன்றி வணக்கம்!

நன்றி சொல்லும்போது எப்படி அது அடி மனதில் இருந்து வரவில்லையோ, அதே போல, இந்த வணக்கமும் ஏதோ சம்பிரதாயத்திற்காகச் சொல்லித் தொலைக்க வேண்டும் என்று நன்றி வணக்கம். ஏதோ இரண்டுமே இணைபிரியாத ஜோடி என்பது போலத் தான், எந்த வித உணர்வும் இல்லாமல், நன்றி வணக்கம்!

மேலைநாட்டில் குட்மோர்ணிங் சொல்லி வாழ்த்தி விட்டு, பிரியும்போதும் குட் மோர்ணிங் சொன்னால், உங்களை ஒரு மாதிரிப் பார்ப்பார்கள். பிறகெதற்கு இன்னொரு வணக்கம்?

இதற்கெல்லாம் காரணம் இந்த வானொலியில் பந்தா காட்டும் அறிவுக் கொழுந்துகள் தான். இந்த அறிவுக் கொழுந்துகள் தான் இந்த நன்றி வணக்கக் கலாசாரத்தைத் திணித்தவர்கள். இவர்களுக்குத் தமிழும் புரியாது, பண்பும் தெரியாது. அதிலும் இந்த நன்றி வணக்கம், கனடா ரமில்ஸ்க்கு மட்டும் தான் உரிய வியாதி போல இருக்கிறது. மற்ற புலன் பெயர்ந்த ரமில்ஸ்க்கு இன்னும் தொத்தியதாகத் தெரியவில்லை.

வெறுமனே உளமார்ந்த நன்றி சொல்லிக் கை கூப்பினாலே போதும். கோடி புண்ணியம் கிடைக்கும். வார்த்தைக்கு வார்த்தை அர்த்தமில்லாமல் நன்றி சொன்னால் என்ன? வணக்கம் சொன்னால் என்ன? நன்றியுணர்வு ஆழ்மனதில் இருந்து வராமல் வெறும் உதட்டளவோடு தான் நின்றால், அதற்குப் பெறுமதியுண்டோ? சொல்லித் தொலைக்க வேண்டிய கட்டாயம் போல வணக்கத்தை உச்சாடனம் செய்தால் அதற்குப் பெருமை உண்டோ.

வெறும் கூச்சலும் கோஷமும் போட்டுப் பழக்கப்பட்ட தமிழனுக்கு இந்த நன்றி வணக்கமும், உள்ளத்திலிருந்து வராத ஒரு பிதற்றலே!

# வடமாகாண சபையில் முஸ்லிம் குரல் நேசக் குரலாக ஒலிக்கும்,



## நீதியமைச்சர் றவூப் ஹக்கீம் - தலைவர் முஸ்லிம் காங்கிரஸ்

வடக்கில் அரசாங்கம் கோடிக்கணக்கான பணத்தை செலவிட்டு பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்த போதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது சுய கௌரவம் சுய நிர்ணயம் என்பவற்றைப் பொறுத்தவரை விடாப்பிடியாக தமது கொள்கையில் உறுதியாக உள்ளனர். சில முஸ்லிம் கட்சிகளை சேர்ந்த அரசியல் வாதிகள் சூடு சுரணையற்றவர்களாக சமூகத்தைப் பற்றிச் சிந்திக்காது தமது சொந்த அரசியல் இலாபத்திற்காக எல்லாவிதமான விட்டுக்கொடுப்புகளையும் செய்து விடுகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்துவதோ அரசாங்கத்தைப் பலவீனப்படுத்துவதோ எமது நோக்கமல்ல. எங்களது கட்சியைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே நாங்கள் மரச்சின்னத்தில் தனித்துப் போட்டியிடுகின்றோம். யாரையும் பலப்படுத்துவதோ பலவீனப்படுத்துவதோ எமக்கு அவசியமில்லை. எருக்கலம்பட்டி மக்கள் மன்னார் மாவட்டத்தின் ஏனைய கிராமங்களைச் சேர்ந்த மக்களைப் போல அரசாங்கத்தில் இருக்கும் போது எங்களை ஆதரிப்பது போன்ற நாம் எதிர்கட்சியிலிருந்த போதும் ஆதரவு வழங்கினீர்கள். சமூகங்களுக்கிடையிலான நிரந்தர பகையுணர்வை வளர்க்க வேண்டுமென சில அரசியல் கட்சிகள் நினைக்கின்றன. இந்தத் தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்து போட்டியிட வேண்டுமென மேற்கொண்ட முடிவினால் அவை நிலைத்தடுமாறி போயுள்ளன.

வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதை காரணமாக வைத்து யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் தமிழ் முஸ்லிம் உறவில் விரிசல்கள் ஏற்பட்டன. யுத்தம் முடிவடைந்துள்ள சூழ்நிலையிலும் இரு சிறுபான்மைச் சமூகங்களையும் பிரித்து வைப்பதற்கு சில சக்திகள் எத்தனிக்கின்றன. அதற்காக நாம் வேதனைப்படுகின்றோம். சிறுபான்மை சமூகங்களில் மட்டுமல்ல பெரும்பான்மை சிங்கள சமூகத்திலும் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளனர். வெளிவேரிய சம்பவம் இதற்கு ஓர் உதாரணம் ஆகும்.

இனங்களுக்கிடையில் புரிந்துணர்வு ஏற்பட வேண்டும் சகல சமூகத்தவரும் சகவாழ்வு வாழ்ந்து தமது நியாயபூர்வமான உரிமைகளை

30ம் பக்கம்...

# தொழிற் சங்க மோதலாக மாறியுள்ள மத்திய மாகாண சபைத் தேர்தல்.

## தாயகத்திலிருந்து விஜய்

மத்திய மாகாண சபைத் தேர்தல், வழமை போல மலையகத் தொழிற் சங்கங்களுக்கிடையிலான சிறுசிறு மோதல்களுடன் ஆரம்பித்து இன்று பெரும் வன்முறைச் சம்பவங்களாக வெடித்துள்ளன. கொட்டகலை கொமர்ஷல் பிரதேசத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர்கள், வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல், இம் மோதல்களின் உச்ச வன்முறையாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

இரு சாராரும் கொட்டகலை கொமர்ஷல் பிரதேசத்தில் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்ட நிலையில், கற்கள், கம்புகள், போத்தல்கள் கொண்டு பரஸ்பரம் தாக்குதல்களை மேற் கொணடுள்ளனர். இச்சம்பவத்தில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பி.திகாம்பரம், பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பி.இராஜதுரை ஆகியோரின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுமுள்ளனர். ஏற்பட்ட பதட்ட நிலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட போதிலும் இரு கட்சியினருக்கிடையிலான மோதல்கள் தொடரும் நிலையே காணப்படுகிறது.

சம்பவத்தை அடுத்து அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான், காங்கிரஸ் வீணான வம்புக்குப் போகாது. சீண்டி விட்டால் சும்மாவும் இருக்காது எனச் சீறியிருக்கிறார். சம்பவம் நடைபெற்ற இரவு ஹட்டன் நகரில் அமைந்துள்ள தொ.தே.சங்கத்தின் பிரதான காரியாலயம் 200க்கு மேற்பட்டவர்களால் தாக்கப் பட்டிருக்கிறது. பொகவந்தாலவை மற்றும் மஸ்கெலியா காரியாலயங்களும் தாக்கப்பட்டுள்ளன. வேட்பாளர்கள் அச்சுறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

இதேவேளை திகாம்பரமும், ஆறுமுகன் தொண்டமான் மோதவேண்டுமானால் என்னோடு தனித்து மோதலாம். அதை விடுத்து அப்பாவி மக்களோடு மோதக் கூடாது எனச் சீண்டியிருக்கிறார். அத்துடன் பொலிஸாரும் பக்கச் சார்பாக செயற்படுவதாகவும் குற்றம் சாட்டியிருக்கிறார். ஹட்டனில் தமது காரியாலயத்திற்கு இரு பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த போதும், நகரில் 3 மணி நேரம் வரை தாக்குதல் நடாத்தப்பட்டதாகவும், சம்பவம் தொடர்பில் நான்கு பேரே கைது செய்யப்பட்டுள்ளதாகவும் திகாம்பரம் தெரிவித்திருக்கிறார்.

மூத்த தொழிற் சங்கமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிற்கும், செல்வாக்குப் பெற்றுவரும் தொழிற் சங்கமான தொழிலாளர் தேசிய சங்கத்திற்கும் இடையிலான மோதல் தேர்தலுக்கு முன்னரே ஆரம்பித்து விட்டது. கடந்த வாரம் இ.தொ.கா.வைச் சேர்ந்த நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இராஜதுரையும் அம்பகமுவ பிரதேச சபை உறுப்பினர் நகுலேஸ்வரனும் தத்தமது ஆதரவாளர்களுடன் இ.தொ.கா.விலிருந்து விலகி தொ.தே.சங்கத்துடன் இணைந்து கொண்டிருந்தார்கள். இந்த இணைவை தொழிலாளர் தேசிய சங்கம் ஹட்டனில் பெரு விழாவெடுத்துக் கொண்டாடியுமிருந்தது.

இத் தேர்தலில், இரண்டு தொழிற் சங்கங்களும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்திருப்பதுடன், நுவரெலியா மாவட்டத்தில் ஐ.ம.சு.கூட்டமைப்பின் வெற்றிலைச் சின்னத்திலேயே போட்டியிடுகின்றன. இ.தொ.காவின் ஆறு வேட்பாளர்களும், தொழிலாளர் தேசிய சங்கத்தின் மூன்று வேட்பாளர்களும் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

அரசாங்கத்துடன் இணைந்து பேரம் பேசும் அரசியலைச் செய்யும் இரண்டு தொழிற் சங்கங்களிற்கும் இத் தேர்தல் பெரும் பலப் பரீட்சையாக அமைந்திருக்கிறது. இரு தொழிற் சங்கங்களும் ஒரே கட்சியில் போட்டியிடும் நிலையில் தமது செல்வாக்கு நிலையை நிலைநிறுத்துவதற்கும், வெளிப்படுத்தவதற்குமான ஒரு களமாக இத்தேர்தல் அமைந்து விட்டது. இந்தப் பின்னணிகளே வன்முறைக்கான அத்திவாரத்தினை இட்டிருக்கிறது.

இம் மாகாண சபைத் தேர்தலில் பலராலும் பேசப்படும் விடயமாக இந்த வன்முறைகள் அமைந்து விட்டன. இவ் வன்முறைச் சம்பவங்களை கண்டித்து மலையகப் பட்டதாரி சமூகமும் புத்தி ஜீவிகளும் கண்டன அறிக்கைகளை வெளியிட்டிருக்கிறார்கள். மலையகப் பட்டதாரி சமூகம், “மலையக மக்களின் அடிப்படையான பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுத்தர மறுத்து வரும் தொழிற்சங்கங்க அரசியல் தலைமைகள் இன்று வன்முறை அரசியல் கலாசாரத்தை மலையக மக்களின் மீது திணிக்கும் வன்மைத்தையும் ஆரம்பித்துள்ளனர்” எனத் தெரிவித்துள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் இரண்டு தொழிற் சங்கங்களுக்கிடையிலான மோதலுக்கு ஆளும் ஐ.ம.சு. கூட்டமைப்பின் “பிரித்தாளும் தந்திரம்” தான் காரணமா? சிவில் உடையில் இருந்த பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது ஏன்? என்ற வினாக்களும் முன்வைக்கப்பட்டள்ளன.

எதிர்க் கட்சியின் பிரதம கொறடா ஜோண் அமரதுங்க, அன்று துட்டைகைமுனுவுக்கும் எல்லானனுக்கும் இடையே தான் இலங்கையில் மோதல்கள் ஏற்பட்டன. ஆனால் இன்று தொண்டமானுக்கும் திகாம்பரத்துக்கும் இடையே மோதல்கள் இடம் பெறுகின்றன என வர்ணித்திருக்கிறார். விடயம் ஜனாதிபதியின் கவனத்திற்கும் சென்றிருக்கிறது. ஜனாதிபதி இம் மோதல்கள் தொடர்பில் விசனம் தெரிவித்ததாகவும் அறிய முடிகிறது.

இந்த வேறுபாடுகளும் வன்முறைகளும் மலையகத் தமிழர்களை பிளவு படுத்தி விடுவதுடன், மாகாண சபையில் மலையகத் தமழிர்களின் பிரதிநிதித்துவத்தினை குறைத்து விடும் எனவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.



# அரசுக்கோ முதலாளித்துவ பேரினவாத சிந்தனை கொண்டவர்களுக்கோ வாக்களிக்க வேண்டாம்



*சி.கா. செந்திவேல்*
*பொதுச் செயலாளர் புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சி*

எதிர்வரும் செப்டெம்பர் 21ம் திகதி வடக்கு வடமேல் மத்திய மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெற உள்ளன. நிறைவேற்று அதிகாரம் கொண்ட சர்வாதிகாரத்தின் கீழ் அதிகாரப்பலம் பணபலம் ஜனநாயக விரோத வழிமுறைகளைக் கொண்டு இத்தேர்தலை அரசாங்கம் நடத்துகின்றது. அதேவேளை அபிவிருத்தி சலுகைகள் பண நன்கொடைகள் என்பவற்றை தாராளமாக வழங்கி ஆளும் தரப்பு வேட்பாளர்கள் வாக்குகள் பெற்றுக்கொள்ள முன்னின்று வருகின்றனர். இத்தேர்தல்களில் அரசாங்கம் வெற்றி பெறுவதன் ஊடாக மக்கள் தமக்கு ஆணையும் அங்கீகாரமும் வழங்கியுள்ளதாக காட்டி இப்போது மக்கள் மீது சுமத்தி வரும் கடுமையான பொருளாதார சுமைகளையும் தேசிய இனங்கள் மீதான பேரினவாத ஒடுக்கு முறைகளையும் தொடர்ந்து முன்னெடுப்பதற்கே முன்னிற்கின்றது.

அதேவேளை எதிர்தரப்புக் கட்சிகள் உழைக்கும் மக்களும் தேசிய இனங்களும் எதிர்நோக்கும் இனவர்க்க ஒடுக்குமுறைகளுக்கு எதிரான எவ்வித கொள்கை வேலைத்திட்டங்களும் இன்றி இத்தேர்தல்களில் போட்டியிடுகின்றன. வெறுமனே மாகாண சபைகளில் பதவிகள் பெறுவது அல்லது ஆளும் தரப்பாக்கிக் கொள்வது எனும் குறுகிய இலக்குகளுடனேயே தேர்தல்களில் பங்குகொள்கின்றன. மேலும் பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிரான பட்டறிவுடனான சமகால யதார்த்தத்திற்குப் பொருந்தக்கூடிய புதிய கொள்கை வேலைத்திட்டங்கள் எதுவுமின்றி தொடர்ந்தும் பலமைவாத ஆதிக்க அரசியல் நிலைப்பாட்டுடனேயே தமிழ் தரப்புக் கட்சிகள் இணைந்து நின்று போட்டியிடுகின்றன. இது தமிழ் மக்களை அரசியல் மயப்படுத்தி சரியான வெகுஜன போராட்டப் பாதையில் அணிதிரட்டுவதே திசை திருப்பி வெறும் வாக்குப் போடுபவர்களாக மட்டும் வைத்திருக்கும் பழைய நிலையை புதுப்பித்துக் கொள்வதாகவே உள்ளது. இத்தகைய சூழலில் மேற்படி தேர்தலில் பங்குகொள்வது அர்த்தமற்றதும் பயன்தரக்கூடியதுமல்ல என்பதால் எமது புதிய ஜனநாயக மாக்ஸிய லெனிச கட்சி தேர்தலில் பங்குகொள்வதில்லை என ஏற்கெனவே தீர்மானித்துகொண்டது.

இப்போது தேர்தல் பிரசாரங்கள் வேகமடைந்துள்ள சூழலில் எமது கட்சிக்கு கடந்தகால தேர்தல்களில் ஆதரவு தெரிவித்து பிரச்சாரப் பணிகளில் ஈடுபட்டவர்களும் வாக்களித்த மக்களும் வாக்களிப்பில் எத்தகைய நிலைப்பாட்டைக் கொள்வது என கட்சியிடம் கேட்டு நிற்கின்றனர். எனவே வாக்களிக்க விரும்புவோர் எக்காரணம் கொண்டும் பேரினவாத ஒடுக்குமுறையினை முன்னெடுத்து வரும் அரசாங்கத் தரப்பிற்கும் ஏனைய பெரும் முதலாளிய பேரினவாத நிலைப்பாட்டைக் கொண்டவர்களுக்கும் உழைக்கும் மக்களுக்கு எதிரானவர்களுக்கும் வாக்களிக்க கூடாது.

எனவே பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிராகவும் உழைக்கும் மக்களுக்கு ஆதரவாகவும் ஜனநாயக முற்போக்கு இடதுசாரி நிலைப்பாட்டிற்கும் உழைக்கும் மக்கள் சார்பாகவும் இருக்கக் கூடியவர்களை அடையாளங் காணுமிடத்து அத்தகையோருக்கு வாக்களிப்பதே சரியான நிலைப்பாடாக இருக்க முடியுமென்பதே கட்சியின் நிலைப்பாடாகும்.

---

## முஸ்லிம் காங்கிரஸ்...

வென்றெடுப்பதற்கான சாத்வீக போராட்டத்தில் ஈடுபட வேண்டும் அதற்கான காலம் கனிந்து வருகின்றது. இன ஐக்கியத்திற்காக எந்தவிதமான தியாகத்தையும் செய்வதற்கு முஸ்லிம் காங்கிரஸ் தயாராக இருக்கின்றது.

முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட வடமாகாண மாவட்டங்களில் அவர்களது விருப்பத்திற்குரியவர்களாய் இருக்க வேண்டும். வடமாகாணசபையில் முஸ்லிம்களின் குரலும் ஒலிக்க வேண்டும். அது நேசக் குரலாகவும் இருக்க வேண்டும். பகையுணர்வுடன் முஸ்லிம்களைப் பார்ப்பதற்கு நாம் இடமளிக்கக் கூடாது.

முஸ்லிம் காங்கிரசிலிருந்த சில புல்லுருவிகளின் சதி வேலை வடமாகாணசபைத் தேர்தலில் மன்னார் வவுனியா முல்லைத்தீவு மாவட்டங்களில் அரங்கேறியுள்ளது. எமது கட்சிக்குள் ஊடுருவியிருந்த இந்த புல்லுருவிகள் கட்சிக்கு எதிராக சதி செய்வதற்கு திட்டம் தீட்டியிருந்தார்கள். அவர்கள் வெற்றிலைச் சின்னத்தில் அரசாங்கத்தின் அடிவருடி அமைச்சரின் வழிகாட்டலின் கீழ் அவரது கையாட்கள் சிலர் போட்டியிடும் பொழுது அதே வெற்றிலைச் சின்னத்தில் முஸ்லிம் காங்கிரசின் மாற்றுக் குழு என்று கூறிக்கொண்டு இந்த மாவட்டங்களில் போட்டியிடுகின்றனர். போதாக் குறைக்கு அவர்கள் மறைந்த வன்னியின் மைந்தன் முன்னாள் அமைச்சர் நூர்தீன் மர்சூரின் படத்தையும் தங்களது சுவரொட்டிகளில் இடம்பெறச் செய்துள்ளனர். இவ்வாறு முஸ்லிம் காங்கிரசை காட்டிக்கொடுத்து அரசாங்க கட்சிக்கு சேவகம் புரிவோரை தோற்கடிக்க வேண்டும். வடமாகாண சபையில் முஸ்லிம்களின் குரல் நியாயமானதாக ஒலிக்க வேண்டும். தமிழ் மக்களுடன் இணைந்து செயலாற்றுவதற்கான நேசக் குரலாகவும் அது ஒலிக்க வேண்டும்.

---

# தொடரும் அப்புக்காத்து அரசியல் தமிழ் மக்களின் உரிமைகளை மீட்டுத்தருமா?

*சிவா ஈஸ்வரமூர்த்தி*

சேர் பொன் இராமநாதன் காலம் தொடக்கம் சம்மந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காலம் வரை பெரும்பான்மையான தமிழர்கள் அப்புக்காத்துகளிடம் தங்களின் தலைமையை ஒப்படைத்துவிட்டு தமக்கு விடிவு வருமா? என்று காத்திருக்கும் வரலாறு தொடர்ந்து கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு காலகட்டத்திலும் தமது பாராளுமன்ற நாற்காலிகளை நிரப்புவதற்காக தமிழ் மக்களிடம் ஆணை கேட்டுக் கொண்டு தேர்தலில் குதிப்பது இனவாத தமிழ்த் தலைமைகளின் வழமையாகிவிட்டது. தமிழ் மக்களும் தமது பெரும்பான்மையான வாக்குகளை இவர்களுக்கே அளித்து ஆணையை வழங்குவர் இவர்கள் ஆணையைப் பெற்றுக் கொண்டு சென்று (ஐக்கிய தேசியக் கட்சி) ஆனையிடம் சரணடைந்தமையே வரலாறு. அரசியற் தீர்வுகள்தான் கிடைத்தபாடில்லை. ஆனையும் தமிழ் மக்களின் நண்பேன்டா என்று கூறிக் கொண்டே தன்பாட்டிற்கு அவ்வப் போது கலவரங்களை நடத்தி முடித்ததுதான் கடந்துகாலங்களில் நடந்தவை. கடந்த 15 வருடங்களுக்கு மேலாக ஆனை தனது சவாரியை செய்ய முடியாவிட்டாலும் அமெரிக்காவின் தலைமையிலான ஏகாதிபத்திய குழாத்தின் அபிலாசைகளுக்கு தரகு ஏஜண்டுகளாக தமது கடமைகளை நிறைவேற்றி வருகின்றனர்.

இராணியின் நம்பிக்கைகுரிய அப்புக்காத்து இராமநாதன் கரங்களில் இருந்து இராணி அப்புக்காத்து பொன்னம்பலத்தார் கரத்திற்கு தலைமை மாறியது. பின்பு பொன்னம்பலத்தார் துரோகியாக்கப்பட்டு அப்புக்காத்து செல்வநாயகம் கரத்திற்கு மாறியது தமிழ் மக்களின் தலைவிதி. இந்த மூன்று தலைமை அப்புக்காத்துக்களும் தமிழ் மக்களின் உரிமைகளை கூட்டுச்சேர்ந்து காட்டிக்கொடுத்தனர். இதனால் தமிழ் மக்களிடம் அம்பலப்பட்ட பெரும் புள்ளிகள் பலர் 1970 களில் பாராளுமன்றத் தேர்தலில் மக்களால் தோற்கடிக்கப்பட்டனர். இப்படியே போனால் எங்கள் யாபேரையும் மக்கள் காலி பண்விடுவார்கள் என்று அஞ்சிய இவர்கள் கூடிச்சேர்ந்து தனி நாடு என்று மக்களிடம் ஆணையைக கேட்டு தேர்தலில் நின்றனர். அப்புக்காத்து அமிர்தலிங்கங்களும் அமோக வெற்றியை ஈட்டினர்.

வழமைபோல் ஆணையைமறந்து ஆனையிடம் மண்டியிட்டு மாவட்ட சபையை ஏற்றனர். இவர்களின் வேகம் காணாது என்று இவர்களால் உசுப்பேத்தப்பட்ட இளைஞர்களும் ஆயுதத்தை தூக்கி இவர்களுக்கு துரோகிகள் பட்டத்தைச் சூட்டினர். தொடர்ந்து மக்களை நம்பி மக்களை அணி திரட்டிய போராளிகள் பிரபாகரன் என்ற மேதகுவினால் துரோகிகளாக்கப்பட்டு கொல்லப்பட்டனர். தொடர்ந்து தேசியத்தலைவர என்று தனக்கு தானே பட்டத்தைச் சூட்டி தமிழ் மக்களை ஏதேச்சாகாரமாக சிறைப்பிடித்து போர் முனையின் முன்னரங்கத்தில் பலியிட்டார். எஞ்சியவர்கள் முள்ளிவாய்கால் வரை சாய்த்துச் செல்லப்பட்டு பலிகொடுக்கப்பட்டு தானும் உடுக்க உடையின்றி அழிந்து போனார் மேதகு பிரபாகரன். அழிவுடன் அது முடிவுற மீண்டும் எழுந்தது சம்மந்தன், சுமத்திரன் என்ற அப்புக்காத்து அரசியல்.

இறுதியாக வடபகுதியின் மணம் கூடத் தெரியாத கொழும்பு கறுவாக் காட்டு அப்புக்காத்து தரகரை தேடிப்பிடித்துக்கொண்டு வந்து முதல் அமைச்சருக்கான வேட்பாளராக நிறுத்தியுள்ளனர். அதற்குக் கூறுகிற காரணம் அவர் பென்னம் பெரிய நீதவானாக இருந்தவராம் ஐ. நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனோடு பேசுமளவுக்கு ஆங்கிலம் தெரிந்தவராம். மாகாணசபையின் முதலமைச்சருக்கு அப்படியான படிப்புத் தகுதியும், ஆங்கிலப் புலமையும் உள்ளவர்தான் சரியென்றால் இந்தத் தீவிரத்தை இன்றைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் போது ஏன் காட்டவில்லை என்பதை இங்கு நாம் கவனத்திற் கொள்ளல் வேண்டும். கிழக்கு மாகாண மக்களின் சபைக்கு வெறும் ஒரு வாத்தியார் அறிவு மட்டும் போதும் என்று கணக்குப் போட்டார்களா?.

இதேவேளை தமிழர்கள் மத்தியில் நிலவும் போலி வேடதாரித்தனங்களையும் இங்கு சொல்லித்தான் ஆக வேண்டும். மற்றவர்கள் கூறும் கருத்துக்களை கேட்டு பக்கத்தில் வந்து நல்லாத்தான் இருக்குது சரியாகத்தான் சொல்கிறீர்கள் என்று ரகசியமாகச் சொன்னாலும் பிறகு தேர்தல் என்று வந்தவுடன் நித்திரையால் எழும்பினாலும் விளிக்காமலே போய் பாழ் கிணற்றில் விழுபவனைப் போல போடு புள்ளடியை வீட்டுக்கு நேரே என்று தமது தேசியக் கடமையை நிறைவேற்றி மீண்டுமொரு ஆணையை கூட்டமைப்புக்கு வழங்கவே செய்வர். இப்படித்தான் கண்மூடித்தனமாகப் போய் முள்ளிவாய்க்காலில் அவலப்பட வேண்டியேற்பட்டது என்பதைப் புலம்பினாலும் அந்த அனுபவங்களை விரைவாகவே மறந்து மீண்டும் ஒரு முள்ளிவாய்காலை நோக்கி அழைத்துச் செல்லும் கூட்டமைப்புக்காரர்களுக்கு நிபந்தனையற்றரீதியில் ஆதரவு வழங்கத் தயாராகவே உள்ளனர். தமிழர்களின் ஏமாளித்தனங்களை நன்கு புரிந்து கொண்டுள்ள கூட்டமைப்புக்காரர்களுக்கு பாராளுமன்றக் கதிரைகள் பரம்பரைச் சொத்தாக ஆகிவிட்டது. வாரிசு அரசியலையும் தொடருகின்றனா். தமது பெண்டிர், பிள்ளைகளை பணக்கார வெளிநாடுகளிலும், கறுவாக்காட்டிலும் சுகமாக வாழவைத்துக் கொள்கின்றனர். அதற்குத் தேவையான உதவிகளையும், சலுகைகளையும் ஆட்சியில் இருக்கும் அமைச்சர்களையும், அதிகாரிகளையும் பின்கதவால் சென்று சந்தித்து எந்த வெட்கமுமில்லாமல் பெற்றுக் கொள்கின்றனர். வடக்கில் தமிழ் மக்கள் மத்தியில் மாவீரர்களாக அரசுக்கு எதிரான சவால்களை விட்டு புலிக் கொடி ஏந்துவதிலும் தெற்கின் கொல்லைப் புறங்களில் தமது சுயநல தேவைகளுக்காக சிங்கக் கொடி பிடிப்பதலும் இவர்கள் மகாவல்லவர்.

இதேவேளை கூட்டமைப்பை தமிழ்

மக்கள் மத்தியில் விரட்டும் வல்லமை கொண்ட முற்போக்கான மாற்றுக் கருத்தாளர்களின் அணியையோ, அரசியல் இயக்கத்தையோ காணமுடியவில்லை. தமக்கிடையே ஜனநாயக அடிப்படையில் ஒரு பரந்துபட்ட மக்கள் இயக்கமொன்றைக் கட்டியமைப்பதில் அக்கறை கொண்ட செயற்பாட்டாளர்கள் தமிழ் மக்கள் மத்தியில் அரிதாகவே உள்ளனர். ஆங்காங்கே சபைகள் கிடைக்கையில் முற்போக்கான மாற்றுக் கருத்துக்களை முழங்கும் பல தமிழர்கள் உள்ளனர். இவர்களும் தேர்தற் பந்தயத்தில் வெல்லும் குதிரையில் காசு கட்டத் தயாராக உள்ளவர்களாகவே இருக்கின்றனர். தாமும் களத்தில் இறங்கி சரியான குதிரைகளை வலுவாக ஓட வைக்கும் கடமைக்குத் தயாராக இல்லை. அதற்கு நொண்டிச் சாட்டாக சேறுபடியாத புரட்சிக் குதிரைகளைத் தேடிக் கொண்டிருப்பதாகக் கூறுகின்றனர். இதனாற்தான் தமிழர்கள் மத்தியில் கடந்த 80 வருடகால தேர்தல் அரசியலானது உயர்சாதி வெள்ளாள அப்புக்காத்துகளின் தலைமைகளைக் கொண்டதாகவே சுழற்சியில் நடைபெற்றுவருகிறது. 1980க்கும் 1990க்கும் இடைப்பட்ட காலத்தில் அந்தப் போக்கை மாற்றி ஒரு முற்போக்கான அரசியல் வளர்வதற்கான அத்திவாரத்தை இடும் நோக்கில் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் அது வெற்றியளிக்காமற் போனதே உண்மை.

இதற்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்

முப்பது வருடகாலத்து ஆயுதப் போராட்டத்தின் தியாகங்களை அரசியல் வியாபாரம் ஆக்கும் கூட்டமைப்பை இன்று நிறைத்த நிற்பவர்கள் இந்தக் காலகட்டத்தில் தமிழர்களின் நலன்களுக்காக ஒரு சிறு கல்லைக்கூட நகர்த்தாத அல்லது தம்மை எந்தவகையிலும் அந்தப் போராட்டக் களங்களில் அடையாளப்படுத்திக் கொள்ளாத அப்புக்காத்துக்களுக்கெல்லாம் அப்புக்காத்தான விக்னேஸ்வரனை தற்போது எமது புதிய தேசியத் தலைவராக தமிழ் மக்கள் மத்தியில் நிறுத்தியுள்ளனர். இலங்கை அரச துறையில் உயர்பதவி வகித்த இவர் தனது பதவிக்காலத்தில் தமிழ் மக்களுக்கான நீதி எதனையும் வழங்க முயற்சிக்காத ஏன் இலங்கை மக்களுக்கு பொதுவாக என்று கூட நீதித்துறையில் எதனையும் சாதிக்காத இவர் மற்றொரு அப்புக்காத்துக்கெல்லாம் அப்புக்காத்தாக இருந்த சிவா பசுபதி இளைப்பாறிய பின் தமிழீழம் பேசியது போலவே இன்று தமிழ் மக்களின் தலைவராக மாறியுள்ளார். அந்த சிவா பசுபதியானவர் இப்போது அவுஸ்திரேலியாவில் தமது கடைசிக் காலத்தைக் கழித்துக் கொண்டு தமிழீழத்துக்கான சேவையை வழங்கிக் கொண்டிருக்கிறார். சிலவேளை அவர் தற்போதும் கொழும்பில் வாழ்க்கையை தொடர்ந்திருப்பாரேயானால் அவருக்கே இந்த அதிர்ஷ்டம் அடித்திருக்கும். யாராயிருந்தாலும் இப்படியான அரை முதுகெலும்பு கொண்ட அப்புக்காத்துகளின் தலைமைகளினால் தமிழ் மக்களுக்கு எந்த பிரயோசனமும் ஏற்படப்போவது இல்லை. இவ்வாறானவர்களின் சட்ட அறிவும், ஆங்கிலப் புலமையும், சிங்களப் பாண்டித்தியமும் ஒடுக்கப்பட்ட மக்களின் நலன்களுக்குப் பயன்படப் போவதில்லை. அதிலும் இவர்கள் பதவியில் ஒட்டியிருந்தவரை இலங்கையை ஆண்ட பேரினவாத அரசுகளுக்கு விசுவாசமாக வால் பிடித்து வாழ்ந்துவிட்டு இப்போது மக்களின் மீட்போனாக தம்மைக் காட்டிக்கொண்டு புறப்பட்டிருக்கிறார்கள். தமிழ் மக்களின் தலைமைப் பொறுப்பை இப்படிப்பட்டவர்கள் தமது ஓய்வுகால பொழுதுகளைப் போக்குவதற்கான களியாட்ட விடயமாக்க அனுமதிக்கக்க கூடாது. அது இலங்கையில் தமிழ் மக்களின் எதிர்காலத்தை இன்னுமொரு நூறு வருடகாலத்துக்கு பின்தள்ளிவிடும்.

# நாம் தான் 13ஐ பாதுகாக்கக் கூடியவர்கள்



## ஈ.பி.டி.பி முதன்மை வேட்பாளர் தவராசா

வடமாகாணசபைத் தேர்தலில் வெற்றி கொள்வோமென்ற நம்பிக்கையுடன் நாம் களமிறங்கியுள்ளோம். வடக்கில் எமக்குப் போட்டியாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு உள்ளது. மாகாணசபைக்கு எம்மை அனுப்பினால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று கூட்டமைப்பு கூறி வருகின்றது. உண்மையில் கூட்டமைப்பினர் ஏன் இவ்வாறு கூறிவருகின்றனர் என்று தெரியவில்லை.

இனப் பிரச்சினைத் தீர்வுக்கும் மாகாணசபைத் தேர்தலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. மாகாணசபைத் தேர்தலில் வெற்றி பெற்றால் 13வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தலாம். பொதுவாக மாகாணசபை உள்ளது. இதற்கென்று ஒரு அதிகார வரம்பும் உள்ளது. இதற்கும் அரசியல் பிரச்சினைக்கும் தொடர்பில்லை. அரசியல் பிரச்சினைக்கு பாராளுமன்றத் தெரிவு குழு நியமிக்கப்பட்டுள்ளது. நாம் அரசியல் தீர்வு காண வேண்டுமாயின் அங்குதான் செல்ல வேண்டும்.

உலக நாடுகளுக்குச் சென்று இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சு நடத்தியாக வேண்டும். இங்கு மத்தியில் ஆட்சியிலிருப்பவர்களுடன் நாம் பேசியாக வேண்டும். மாகாணசபைக்குச் செல்வதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. மாகாண சபையில் மாகாண சபையை நடத்தலாம். அதன் மூலம் அந்த மாகாண மக்களுக்கு உருப்படியான நலத் திட்டங்களை அபிவிருத்திச் செயன்முறைகளை மேற்கொள்ள முடியும்.

தற்போது வடமாகாண மக்களுக்கு ஜனநாயக சூழலில் பங்கெடுக்கும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அதனை வடக்கு மக்கள் சரியாகப் பயன்படுத்த வேண்டும். அண்மையில் 13ஆவது திருத்தச் சட்டத்தை நீக்க முற்படும்போதே எமது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்வந்து அரசாங்க அமைச்சர்கள் உள்ளிட்டவர்களிடமே 13க்கு ஆதரவாக கையெழுத்து வாங்கும் செயற்பாட்டை முன்னெடுத்தார். அவ்வாறு நாங்கள் எமது மக்களைப் பாதிக்கும் எந்த முயற்சிகளையும் தடுத்து நிறுத்தவும் போராடவும் செய்கிறோம்.

மாகாணசபையில் இயங்குவதற்கும் மக்கள் நமக்கு முழுமையான ஆணை தரவேண்டும் அவ்வாறு மக்கள் நமக்கு ஆணை தந்தால் நிச்சயமாக 13ஆவது திருத்தச் சட்டத்தை வலுகுறைக்க விடாமல் பாதுகாப்போம். நடைமுறைக்கு ஏற்க மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டிய தேவையும் உள்ளது அது குறித்தும் ஆராயலாம். அதாவது 13வது திருத்தச் சட்டத்தில் சில குறைபாடுகள் இருக்கின்றன. இவற்றை அரசாங்கங்கள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி வந்துள்ளன. இந்த இடத்தில் நாம் எமது அணுகுமுறையான இணக்க அரசியலின் ஊடாக தீர்வுகளை கண்டு வந்துள்ளோம். 13வது திருத்தச் சட்டத்தை எம்மால் அமுல்படுத்த முடியும். 13ஐ உறுதியாக பாதுகாக்க எமக்கான ஆணையை மக்களிடம் வேண்டியுள்ளோம்.

# தென்னிலங்கை இனவாதிகளுக்கான உந்துசக்தி



## ஜே.வி.பி முன்னாள் எம்.பி இராமலிங்கம் சந்திரசேகரன்

தென்னிலங்கையில் தற்போது தோற்றம் பெற்று வரும் இனவாதத்திற்கு உந்துசக்தியாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் அமைந்துள்ளது. அதில் வடக்குக் கிழக்கு தமிழர்களின் தாயக பூமியெனக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு இவர்கள் கூறினால் தென்னிலங்கை அடிப்படை இனவாதிகள் அங்குள்ள தமிழர்களை உங்கள் தாயக பூமியான வடக்கு கிழக்குக்கு செல்லுங்கள் என்று கூறமாட்டார்களா?

இனவாதம் பேசி மக்களை சாக்கடைக்குள் தள்ளாமல் இனவாத அரசுக்கெதிராக போராடுங்கள் மீண்டும் இனவாதம் தலைவித்தாடக்கூடிய சூழ்நிலைக் காணப்படுகின்றது. இனவாதத்தால் எதனையும் பெற்றுக்கொள்ள முடியாது. அதற்கு நாம் எதிரானவர்கள் அந்த அடிப்படையில்தான் நாம் வடமாகாண சபைத் தேர்தலிலும் போட்டியிடுகின்றோம்.

யுத்தம் முடிவடைந்து நான்கு வருடங்கள் ஆகியும் தேசிய இனப் பிரச்சினைக்கு இந்த அரசு ஏதாவது செய்திருக்கிறதா? உண்மையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியோ மீள்குடியேற்றமோ பூரண ஜனநாயகமோ இன்னமும் வடக்கில் பூரணபடுத்தப்படவில்லை. வடக்கில் இன்னமும் இராணுவத் தலையீடுகள் இருக்கின்றன.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மக்களுக்கு வசந்தம் வீசுகின்றதா என்றால் இல்லவே இல்லை. இங்கு வசந்தத்தை நடைமுறைப்படுத்தும் அமைச்சர்களுக்கு மட்டும்தான் வசந்தம் வீசுகின்றது போலும். இன்னமும் ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்டோர் குடிசையில்தான் வாழ்கின்றனர். 80மூ அதிகமானோர் கடனாளிகளாக வாழ்கின்றனர். 2000க்கு முன்னர் இங்கு பிரபாகரன் இருக்கின்றார். அங்கு குண்டு வெடிக்கின்றது. இங்கு கன்னிவெடி இருக்கின்றது என கூறி அரசு தனது இருப்பை தக்கவைத்துக்கொண்டது. வடக்கில் உள்ள பிரச்சினைகளைக் காரணங் காட்டியே அரசு தெற்கில் வெற்றி பெற்றது.

தற்போது அராஜகமாக சர்வாதிகாரமாக குடும்ப ஆட்சி நடத்தும் இந்த அரசாங்கத்தை நாம் எதிர்க்க வேண்டும். இந்த ஆட்சி முறைக்கு எதிராக மக்கள் அனைவரும் ஒன்றாக அணிதிரள வேண்டும். இந்த ஆட்சியில் தேர்தல்கள் ஜனநாயக பூர்வமாக நடக்குமா என்றால் இல்லை என்றே கூறலாம். தற்போது நடைபெறவுள்ள வடக்கு தேர்தல் நீதியாக நடைபெறும் என்பது எம்மைப் பொறுத்தவரை கேள்விக்குறியே. இனவாதத்தை வெறுத்தொதுக்கத்தக்க வேட்பாளர்களை தெரிவு செய்வது நம்முள்ளே உள்ள ஒரே தெரிவாகும்.




பூபாளத்தில் விளம்பரம் செய்ய

416 287 6397

கனடிய தமிழ் வழக்கறிஞர்

The Law office of

**Raphael Maharaja**

Barrister & Solicitor

Tel: 416-847-7077 | Fax: 416-847-7088



GTA SQUARE
5215 Finch Ave, East. Unit 219
Toronto Ontario M1S 0C2 ( Middlefield & Finch )

info@maharajalaw.com
www.maharajalaw.com

Creaa Design

## Commercial Roof Top Units

### Maintenance and Inspection

With 2 years contract Special

**$ 180.00/Year**
( 2 Visit / year )

Service included
Filter Change, Lubrication , Coil Cleaning,
Monitoring CO2 level



New Roof Top, HVAC Installation
Also Available
Free Estimation ( GTA area )

416- 986-9554

GREENI
HEATING & COOLING
WWW.GREENI.CA

Sales - Service - Installation

GEORGE SUBRAMANIAM
TSSA - Certified Technician

PHONE: 416 986 9554

